விபுலாநந்த அடிகளார் நூற்றாண்டு

# 'விபுலாநந்தம்'

1992

கொழும்பு தமிழ்ச் சங்கம்

சி. அ. யோதிலிங்கம்

விபுலாநந்த அடிகளார் நூற்றாண்டு

கொழும்புத் தமிழ்ச் சங்க வெளியீடு - 20

# 'விபுலாநந்தம்'

தொகுப்பு ஆசிரியர்:

'தமிழவேள்'

(பொதுச் செயலாளர்)

1992

நூல் :- விபுலானந்தம்

முதற் பதிப்பு :- 1992

தொகுப்பு ஆசிரியர் :- தமிழவேள்
பொதுச்செயலாளர்
கொழும்புத் தமிழ்ச்சங்கம்

வெளியீடு :- கொழும்புத் தமிழ்ச்சங்கம்
7, 57 ஆம் ஒழுங்கை, கொழும்பு-6
தொலைபேசி :- 583759

அச்சகம் :- நியூ சென்றல் அச்சகம், கொழும்பு-13

பதிப்புரிமை :- கொழும்புத் தமிழ்ச்சங்கம்

பக்கம் :- 67

விலை :- ரூபா

**VIPULANANTHA ADIKALAR CENTINARY YEAR**

Titly: **VIPULANANTHAM**

Fist Edition: **1992**

Editon: **Thmizhavell**

Published: **Colombo Tamil Sangam**
7, 57th Lane, Colombo - 6
Telephone: 53759

Printers: **New Central Printers, Colombo - 13**

Copyright: **Colombo Tamil Sangam**

Page: 67

Price: Rs.

# பொருளடக்கம்

(1) முன்னுரை

1. கடவுள் வாழ்த்து
2. விபுலாநந்த அடிகளார் உள்ளம்
3. விபுலாநந்த அடிகளாரும் மகாகவி பாரதியாரும்
4. விபுலாநந்த அடிகள்
5. விபுலாநந்த அடிகளாரும் தமிழும்
6. விபுலாநந்த அடிகளார் என்னும் சுடர்
7. விபுலாநந்த அடிகளாரும் அவரது பணிகளும்
8. முத்தமிழ் வளர்த்த முனிவர்
9. அடிகளாரைப் போற்றுதும்
10. நாட்டுக்கு உலகிற் புகழ்பெற்றுத் தந்தவர்
11. அடிகளார் பணிகளைப் பின்பற்றுவோம்
12. தமிழ் வளரத் தன்வாழ்வு தந்தவர்
13. விபுலாநந்த அடிகளார் பற்றிய குறிப்புகள்
14. அடிகளார் அறிவுரை

# முன்னுரை

விபுலானந்த அடிகளார் உலகிற் தோன்றிய பெரியார்களுள் ஒருவர். அவர் கிழக்கு மேற்குக் கல்வித்துறைகளைக் கற்றுத் துறவு நிலை நின்று தமிழுக்கும் உலகிற்கும் பல்துறைப் பெரும் பணிகளை செய்துள்ளார்.

அடிகளாரின் பெரும் பணிகளை உணர்ந்த தமிழுலகு அவரது நூற்றாண்டிற் பல பகுதிகளிற் சிறப்பு விழாக்கள் எடுத்துப் போற்று கின்றது.

பண்டைத் தமிழ்ச்சங்க வழிவந்த இச்சங்கம் அவரின் பணிகளை யும் சிந்தனைகளையும் இளம் வயதினரும் வயது வந்தவர்களும் அறிந்து பயன் பெறுதற்காகப் பல் துறைத் தமிழ்த் தேர்வுகளை ஒழுங்கு செய்தது. அடிகளார் முத்தமிழுக்கும் பணி செய்தவர். ஆதலின் இத்தேர்வுகளும் இயல், இசை, நாடகம் ஆகிய மூவகை யிலும் அமைந்தன. அனைத்துத் தேர்வுகளும் அடிகளாரது பணி களையும் ஆக்கங்களையும் சிந்தனைகளையும் பொருளாகக்கொண் டிருந்தன.

கல்வி நிலைய அதிபர்களும் ஆசிரியர்களும் அறிஞர்களும், மாணவர்களும் பெற்றோர்களும் இத் தேர்வுகளில் தங்கள் பங் களிப்பை வழங்கியுள்ளனர். அனைத்துத் தேர்வுகளிலும் மாணவர் களின் அறிவாற்றல்கள் வெளிவந்தன. நேரவரையறவுக்குள் நிகழ்ந்த தமிழ்த்திறன், கவிதை முதனிலைத் தேர்வுகளில் மாணவர் சிறந்த கட்டுரைகளையும் கவிதைகளையும் எழுதியுள்ளனர். அடிகளாரது சிந்தனைகளை அனைத்துப் பகுதிகளிலும் பரவச் செய்வதற்காக இத்தேர்வுகள் பல்வேறு பிரதேசங்களில் நிகழ்ந்தன. அடிகளார் சமய பிரதேச வேறுபாடுகள் இல்லாதவர். ஆதலின் பல்வேறு சம யத்தவர்களும் பிரதேசத்தவர்களும் இத்தேர்வுகளிற் பங்குபற்றியுள் ளனர்.

திருகோணமலைச் சண்முக வித்தியாலயம், மட்டக்களப்பு இந் துக்கல்லூரி, நாவலப்பிட்டிச் கதிரேசன் குமார மகா வித்தியாலயம், வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம், கொழும்புத் தமிழ்ச்சங்க நிலையம் என்பன பிரதேசத் தேர்வு நிலையங்களாக உத வின. வடகிழக்கு மாகாண சபைக் கல்வி கலாசார அமைச்சு உதவிச் செயலாளர் தில்லை நடராசா, மட்டக்களப்பு இந்து இளைஞர் பேர வைத் தலைவர் முன்னாட் கல்வி அதிகாரி ம. சிவநேசராசா, பேரா தனைப் பல்கலைக் கழகப் பொறியியற் துறை விரிவுரையாளர் வே. சண்முகரத்தினம், வவுனியா நீர்ப்பாசனத்துறை சி. வாமதேவன், சங்கப் பொதுச்செயலர் ஆகியவர்கள் பிரதேசத் தேர்வுகளுக்குப் பொறுப்பாளர்களாக உதவினர். அறிஞர் பலர் நடுவர்களாக உதவினர்.

அடிகளார் கல்வி கற்ற - ஆசிரியராகவும் - முகாமையாளராகவும் பணிபுரிந்த - கல்வி நிலையங்கள் பங்கு பற்றியமையும் பரிசில்கள் பெற்றமையும் பேருவகை தருவதாகும். அடிகளார் கல்விக்கு முதன்மை தந்தவர். ஆதலின் கல்விப் பரிசில்களும் வழங்கப்பெறுகின்றன. எமது நாட்டின் செய்யுள் இலக்கிய வனத்திற்காக மகாகவி பாரதியார் நூற்றாண்டிற் பாரதி பிள்ளைத் தமிழ் நூலை ஆக்குவித்த இச்சங்கம் அடிகளார் நூற்றாண்டில் 'அடிகளார் நான் மணிமாலை' என்னும் நூலை ஆக்குவித்தது. இந்நூல் விரைவில் வெளிவரும்.

இத்தேர்வுகளைத் தொடர்ந்து அடிகளார் நூற்றாண்டு முத்தமிழ் விழாவை தலைநகரில் 24-4-92, 25-4-92 நாள்களில் இச்சங்கம் ஒழுங்கு செய்தது. நூற்றாண்டுத் தேர்வுகளிற் பரிசில் பெற்ற மாணவர்களின் இயல், இசை, நாடக நிகழ்ச்சிகளைக் கொண்டதாக இவ்விழா அமைந்தது. அடிகளாரது பணிகளில் இளம் வயதினரை ஈடுபடச் செய்வதே இதன் நோக்கம் ஆகும்.

இவ்விரு நாள் விழாவில் இந்துசமய கலாசார இராசாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ், கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்மகனானந்தா, கல்வி அமைச்சுப் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வெ. சபாநாயகம் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் சி. தில்லைநாதன் ஆகியவர்கள் வாழ்த்துரை வழங்கினர். இப்பெரியார்கள் அடிகளாரின் மாணவர் வழியினர்; அடிகளார் பங்களிப்புச் செய்த பண்பாடு, ஆத்மீகம், கல்வி, தமிழ் ஆகிய துறைகளிற் தலைமை பெற்று விளங்குபவர்கள்.

இவற்றொடு அடிகளார் நூற்றாண்டில் நூல் ஒன்று வெளியிடுவதெனச் சங்க ஆட்சிக்குழு தீர்மானித்தது. அதற்கு இணங்க 'விபுலானந்தம்' என்னும் இந்நூலை இச்சங்கம் வெளியிட்டுள்ளது. இந்நூலில் அறிஞர்களின் சிறப்புக் கட்டுரைகளும், நூற்றாண்டுத் தமிழ்த் தேர்வுகளிற் பரிசில் பெற்ற மாணவர்களின் கட்டுரைகள் - கவிதைகள் என்பனவும் உள்ளன. இளம் வயதினரின் ஆக்கங்களையும் ஆற்றல்களையும் உலகுக்கு உணர்த்துவதே இதன் நோக்கம் ஆகும். அடிகளாரது பணிகள் சிந்தனைகளோடு மாணவர்களின் சிந்தனைகளும் இக்கட்டுரை - கவிதைகளில் உள்ளன.

இந்நூலைச் சிறிய கால எல்லையுள் கொழும்பு நியூ சென்றல் அச்சகத்தினர் அச்சிட்டு உதவினர்.

அடிகளார் பணிகளும் சிந்தனைகளும் ஆக்கங்களும் இந்நாட்டிலும் உலகிலும் பரவிப் பயன் தருக.

வளர்க அடிகளார் பணிகள்; உயர்க உலகு;

க. இ. க. கந்தசுவாமி
பொதுச்செயலாளர்
கொழும்புத் தமிழ்ச்சங்கம்

சங்க அகம்
7, 57 ஆம் ஒழுங்கை,
கொழும்பு-6
19-4-1992

# கடவுள் வாழ்த்து

## 1. ஈசனுவக்கும் மலர்

வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது

காப்பவிழ்ந்த தாமரையோ கழுநீர் மலர்த்தொடையோ
மாப்பிளையாய் வந்தவர்க்கு வாய்த்த மலரெதுவோ
காப்பவிழ்ந்த மலருமல்ல கழுநீர்த் தொடையுமல்ல
கூப்பியகைக் காந்தளடி கோமகனார் வேண்டுவது

பாட்டளிசேர் பொற்கொன்றையோ பாரிலிலாக் கற்பகமோ
வாட்ட முறாதவர்க்கு வாய்த்த மலரெதுவோ
பாட்டளிசேர் கொன்றையல்ல பாரில்லாப் பூவுமல்ல
நாட்டவிழி நெய்தலடி நாயகனார் வேண்டுவது

## 2. தேவி வணக்கம்

அன்னையே அருளுருவே அகிலமுமீன்
றளித்தருளும் அரசி யேசீர்
மன்னுநிலை யியற்பொருளும் இயங்கியலும்
வகைப்பொருளும் வகுத்த வாற்றால்
இன்னலற எமைப்புரந்த இன்னமுதப்
பெருங்கடலே இறைவி யேநின்
பொன்னடியை நிதந்துதித்தோம் கடைக்கணித்துக்
கருணைமழை பொழிவாய் அம்மா.

(விபுலாநந்த அடிகளார்)

முத்தமிழ் முனிவர்



விபுலாநந்த அடிகளார்

( நூற்றாண்டுச் சிறப்புக் கட்டுரை )

# ‘விபுலாநந்தர் உள்ளம்’

மட்டுநகர் தந்த முத்தமிழ் வித்தகர் விபுலாநந்த அடிகளார் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு ஆற்றியுள்ள தொண்டு, அளப்பரியது! இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழும் மேம்பட்டு விளங்க அவர் மேற்கொண்ட நற்பணிகள் என்றென்றும் நன்றியுடன் நினைவு கூரத்தக்கவையாகும். தாம் பிறந்த பொன்னாட்டிற்குச் சிறந்த பெயரையும் புகழையும் பெற்றுத் தந்தது மாத்திரமன்றி நாற்றிசையும் தமிழ் மணம் கமழ-வளரும் தமிழ்ச் சமுதாயம் தமிழ் மொழியின்பால் பற்றும் பாசமும் கொள்ள-‘தமிழ்’ என்றால் இனிமை என்பதன் கருத்தினை அனைவரும் அறிந்து அதைச் சுவைத்து இன்புற, வழிவகுத்த செம்மல் வித்தகர் விபுலானந்த அடிகள் எனலாம்; அவரைப் பற்றிப் பல கோணங்களிலிருந்து அறிஞர்கள் பலர் ஆய்வுகளை நடத்தியுள்ளார்கள். பலதுறை வல்லாளனாகிய அடிகளாரின் பன்முகப்பட்ட தமிழ்த் தொண்டினை ஒரு கட்டுரையில் எழுதி முடித்தல் அரிது. ஆகவே ‘விபுலாநந்தர் உள்ளம்’ என்ற தலைப்பில் அடிகளார் அருளிய கவிதை மலர்கள் நான்கினை எடுத்து அவற்றின் பின்னணி யாது? அடிகளாரின் உள்ளப் பாங்கு யாது? அவர் வாழ்வில் விரும்பியவை யாவை? அவருக்குப் பேரின்பம் அளித்தவை எவை என்னுமிவைகளை இக்கவி மலர்களிலே தரப்பட்ட செய்திகளைக் கொண்டும், அடிகளாரின் வாழ்வின் பின்னணிகளைக் கொண்டும் சிறிது காண முயல்வதே எனது நோக்கம்.

முதலாவதாக அடிகளார் இயற்றிய ‘‘ஈசன் உவக்கும் மலர்ப் பாடல்கள்’’ பற்றியது. இப் பாடற் தொடரில், மூன்று பாடல்கள் உள்ளன; அவை வருமாறு!

‘‘வெள்ளை நிற மல்லிகையோ
வேறெந்த மாமலரோ
வள்ள லடியிணைக்கு
வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல
வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி
உத்தமனார் வேண்டுவது!’’

"காப்பவிழ்ந்த தாமரையோ
    கழுநீர் மலர்த்தொடையோ
மாப்பிள்ளையாய் வந்தவர்க்கு
    வாய்த்த மலரெதுவோ
காப்பவிழ்ந்த மலருமல்ல
    கழுநீர்த் தொடையுமல்ல
கூப்பியகைக் காந்தளடி
    கோமகனார் வேண்டுவது!"

"பாட்டளிசேர் பொற்கொன்றையோ
    பாரிலில்லாக் கற்பகமோ
வாட்ட முறாதவர்க்கு
    வாய்த்த மலரெதுவோ
பாட்டளிசேர் கொன்றையல்ல
    பாரிலில்லாப் பூவுமல்ல
நாட்டவிழி நெய்தலடி
    நாயகனார் வேண்டுவது!"

இம்மூன்று பாடல்களையும் ஒரு சேரவும், உள்ளக் கமலத்தோடு சேர்த்தியும் பார்ப்போம். இப்பாடல்களை ஆராயுமுன் அடிகளாரின் நுழைபுலப் பின்னணியை உள்ளத்தில் கொள்ளல் வேண்டும். அடிகளார் பிறப்பாலும், பயின்ற கல்விப் பெருமையாலும் தமிழர்! அறவழி எழுந்த வாழ்வமைதியால் துறவி! எனவே இவர் நுழைபுலம், தமிழ் வளம் தழுவியதும் அத்துவித அறநெறி தழைத்ததுமாகும். பிறப்பகம் தந்த சைவ சித்தாந்தத் தமிழ் நெறியும், புக்கம் புகட்டிய அத்துவித ஆன்மீகமும் ஒன்றி நலம் பெறக் கனிந்தது அவர் அற அகம்; சிலப்பதிகாரச் சிந்தனைகளாலும், யாழ் நூல் விசாரத்தாலும் யாப்பும் இசையும் சங்கமித்த பாவண்ணமும் வாய்த்தவர். அடிகளார் இப்பின்னணியை மனதில் இருத்தி இப்பாடல்களை நோக்குதல் நன்று.

## ஈசனுக்கு உவக்கும் மலர்

'ஈசனுக்கு உவக்கும் மலர்' என்னும் இப்பாடற் கரு, அடிகளார்க்கு எப்படி உதித்தது என்பதைச் சற்றுக் கவனிப்போம். சில புலவர்களுக்கு இயல்பாகவே புதிய எண்ணக்கருக்கள் உள்ளத்தில் முகிழ்த்தல் இயற்கை. சிலர்க்கு அவர் கற்றவை அடிமனம் செறிந்து, பின்னர் அம்மனத்தின் பாட்டியற்பண்பில் கருவுற்று வரும். அடிகளாருக்கு 'உள்ளக் கமலம் உவந்த மலர்' என்ற கருத்து எப்படி உதயமானது? முதற் பாடலை மட்டும் தனியே எடுத்துப்பார்ப்போம். 'சிவானந்தலகரி' என்னும் சிறந்த தேவமாலை ஒன்றுண்டு. இது வடமொழி நூல். இதனைச் செய்தவர் சங்கராச்சாரியார். அவர் பிறந்தது சேரநாடு அக்காலத்தில் இந்நாடு தமிழ் பேசும்

நாடு, மலையாளம் தனிமொழியாக உருவாக வில்லை; சங்கரர் தமிழ்ச் சூழலை நன்கு உணர்ந்தவர். அவர் தமிழர். அவர் தமிழ் நாட்டின் பக்தி வரலாற்றாலும் சமய எழுச்சியாலும் உந்தப் பெற்றவர். அவர், சமய குரவர்கள், ஆழ்வார்கள் வழங்கிய பக்தி விதையின் பயனாக உருவெடுத்து வைதிக நெறியை நாட்டிய வித்தகர். சிவானந்தலகரியில் கண்ணப்பர், சாக்கிய நாயனார் பற்றிய குறிப்புக்கள் உள என்று அறிஞர்கள் கூறியுள்ளார்கள். இந்நூலில் ஒரு சுலோகம் உண்டு. அதன் பொருள் வருமாறு:-

''ஆழமான மடுவிலும், சன நடமாட்டமில்லாத கொடிய காட்டிலும், பரந்த மலையிலும், புஸ்பத்திற்காக, அறிவு குறைந்தவன் புகுந்து அலைகிறான். பார்பதிபதயே! உமக்கு மனதாகிற ஒரு தாமரைப் பூவை அன்புடன் அளித்து விட்டுச் சுகமாக, அலையாமல் ஓரிடத்திலிருப்பதற்கு இங்கே மனிதன் அறிந்து கொள்ள வில்லை. என்ன விந்தை!''

மற்றை மலர்களிலும் மனமலர் சிவபூசைக்குச் சிறந்தது என்பது சங்கராச்சாரியார் சுலோகத்தின் மையக்கருத்து! உள்ளத்தைத் தாமரையாக உருவகித்தல் நம் பண்டையோர் வழக்கு பரிமேலழகர், திருமூலர், குமரகுருபரர் ஆகியோர் நூல்களிலெல்லாம்: 'நெஞ்சத்தைத் தாமரையாக்கிய வழக்கு' பல இடங்களில் உள்ளது. குமரகுருபரர்க்கு இது மிகவும் விருப்பமான சொல்லாட்சி. ஓரிடத்தில் கலை மகளை நோக்கி ''என் வெள்ளையுள்ளத் தண்டாமரைக்கு நின்பதம் தாங்கத் தகாது கொலோ'' என்றும்; பிறிதோரிடத்தில் சிவகாமியை நோக்கி ''என் நெஞ்சக் கஞ்சமும் செஞ்சொல் தமிழ்க் கூடலும் கொண்டவள்'' என்றும் பாடுகின்றார். இங்கெல்லாம் குமரகுருபரர், உளக்கிளர்ச்சியின் வழிப்பட்டுப் பக்தி நெறியில் 'நெஞ்சத்தாமரையை'க் குறிப்பிடுகின்றார். உணர்ச்சிக்கும், உயிருக்கும் இருப்பிடமான உள்ளத்திலேயே உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவனை அமர்த்தலாம் என்பது அவர் கருத்து. இது மரபு வழி வந்த கருத்தாம். 'மலர்மிசை ஏகினான்' என்ற சொல் திருக்குறளில் வருகிறது. இதற்கு உரை எழுதும் பொழுது, பரிமேலழகர், மலரினை 'உள்ளக்கமலம்' என்கிறார். ஆகவே விபுலாநந்த அடிகளும் இச் சொற்றொடரையும் கருத்தையும் இம்முறையிலேயே மேற்கொண்டார் என்றும் சொல்லலாம். இன்றேல் அவர்க்கும் அக் கருத்து, தமிழ் வாசனையின் பயனாகச் சுதந்தரமாகத் தோன்றியது என்றும் கூறலாம்.

விபுலாநந்தரின் துறவு வாழ்க்கைப் பின்னணியினை நோக்கினால் யோகநெறியில் நிற்பார்க்கு மனம் குவியவேண்டியமை இன்றியமையாதது. அடிகளார் இராமக் கிருட்ண மடத்தில் இருந்து பணி செய்தார். விவேகாநந்தரின் பல நூல்களை மொழிபெயர்த்தவர்.

எனவே அவர் இந்த உள்ளக் கமலத்தைக் கருத்துருவில் எதிருற்றிருப்பார் என்றும் கொள்ளலாம்; புலமை மொழியும், ஞானக்கருத்தும் எவ்வாறு பேரறிஞர் சிந்தனைகளில் தோன்றிப் புதுமுறையில் கூர்ப்புறுகின்றன என்பதை நினைக்கும் தொறும் சிந்தைக்கு விருந்தாய் அமைகின்றது.

தியான நெறியும் பக்தி நெறியும் இங்கே உள்ளக் கமலத்தில் ஒன்றையொன்று எதிருறுகின்ற விந்தையை நாம் காண்கின்றோம். இது அடிகளார் போன்ற ஒருவரின் பின்னணியில்தான் நிகழக்கூடியதாகும்!

'தமிழ் விரகர்' என்ற அடிப்படையில் இப் பாடல்களை நோக்கும்போது ஒரு புதுமை தென்படுகின்றது. முதற்பாட்டில் யோகியராகவும், மற்றைய இரண்டிலும் தமிழ் மரபு வழிவந்த பக்திநெறியாளராகவும் அடிகளார் மாறிவிடுகின்றார்; 'வெள்ளை மல்லிகையோ, வேறெந்த மாமலரோ' என்று மற்றைய மலர்கள் எல்லாவற்றையும் ஒருசேர வேறெந்த மாமலரோ என முதற்பாட்டில் விலக்கிவிட்டுப் பிறகு மற்றையப் பாடல்களில் ''காப்பவிழ்ந்த தாமரையோ, கழுநீர் மலர்த்தொடையோ'' என்றும் ''பாட்டளிசேர் பொற்கொன்றையோ, பாரிலில்லாக் கற்பகமோ'' என்றும் மீண்டும் மலர்களை வகைப்படுத்தல் தமிழ் மரபு எனக் கருதிப்போலும். இம்மூன்று பாடல்களையும் அடிகளார் மூன்று நேரத்தில் எழுதியிருக்க முடியுமென்றும் திறனாய்வாய்வாளர் கூறியிருப்பதையும் யான் அறிவேன்.

அடுத்து அடிகளாரின் துறவு மனத்தினையும் தமிழ்க் காதலினையும் விளக்க அமைவது அடிகளார் நல்லூர் ஆறுமுகநாவலரைப் பற்றிய பாடல்களாகும். யாழ்ப்பாணம், அடிகளாரின் வாழ்வின் வளத்திற்கும், வாழ்வுத் திருப்புமுனைகள் பலவற்றுக்கும் களன் வகுத்த இடமாகும். யாழ்ப்பாணப் புலமையினை அடிகளார் வியந்துரைத்தலைக் காணலாம்.

''தொல்லியல் வழுவாச் சைவநூற் புலவர்
தூநெறித் தமிழுரையானர்
நல்லியற் புலவர் இசைதரும் புலவர்
நாடக நவிற்றிய புலவர்
சொல்லியற் றொகைநூல் வானநூல் தருக்கம்
தோமறு கணிதநூல் முதலாம்
பல்கலைப் புலவர்க்கு உறைவிடமாகிப்
பரந்திசை யெய்தும் யாழ்ப்பாணம்''!

என்பார் அடிகளார். திருவாவடுதுறையில் நாவலருக்குப் பட்டம் அளித்ததைக் குறிப்பிடும் பாடல் வருமாறு:

''பாவலர் போற்றும் ஞானதே சிகரைப்
பணிந்தவ ராணையின் வண்ணம்
பூவலர் கொன்றை புனைந்தவர் புகழைப்
புலமிகு மறிஞர் கூட்டுண்ணக்
காவலர் வியப்ப உரைத்திடல் கேட்டுக்
கருணைகூர் தேசிகர் இவர்க்கு
நாவலர் எனும்பேர் தகும்என அளித்தார்
ஞாலத்தார் தகும் தகும் என்றார்''!

'தகும் தகும்' என்ற பாராட்டினை அடிகளார் கூறுவது எண்ணத்தக்கது தமது உள்ளக்கிடக்கையையும், நாவலர்மீது தாம் கொண்ட தணியா அன்பினையும் தகைமையையும் ஒருசேரப் பாராட்டித் 'தகும் தகும்' என்று ஞாலத்தார்மீது ஏற்றிக் கூறுகின்ற திறம்படித்துப் படித்துச் சுவைக்க வல்லது!

''தம்மையீன் றெடுத்த யாழியல் நாட்டிற்
சைவமாஞ் சமயமும் புலவர்
செம்மைசே ருளத்திற் பொலிந்தமுத் தமிழும்
சீருறப் பணிபல புரிதல்
இம்மையிற் பிறவிக் கியைந்தமா தவமென்
றெண்ணியே விடைபெற்று மீண்டார்
எம்மையும் பயந்த ஈழமா நாட்டின்
இணையிலாப் பெருநிதியனையார்!''

''எம்மையும் பயந்த ஈழ நாட்டின் இணையிலாப் பெருநிதியனையார்'' என்ற சொற்றொடர் சிந்தைக்கு விருந்தாம்!

''கடிசமழ் கொன்றைத் தாரினார் அழகிற்
காதலுற்று உருகுமெய் அன்பர்
வடியிலை வேற்கண் அரம்பையர் வரினும்
மதித்திடார் ஆதலின் என்றும்''

கூறுவது ஒரு துறவி இன்னொரு துறவியினைப் போற்றுவதாக அமைகிறது.

தில்லையில் நாவலரை அகக்கண்ணால் கண்டு அந்நிலையினை,

''அத்திறமாய தில்லையம் பதியில்
ஆகம அளவையாற் சமைந்த
வித்தகக் கோயிற் கோபுரங் கண்டார்
விழிசணீர் பெருக மெய்ம் மறந்தார்
பத்தர்சீர் பரவும் நல்லை நாவலனார்
பாரினிற் பன்முறை விழுந்தார்
அத்தரே யென்றார் அம்மையே யென்றார்
ஆடினார் பாடினார் அன்பால்''

பெரியபுராணத்திலே சேக்கிழார் பாடிய பாடலோ என்று திகைப்பை ஏற்படுத்துகின்றது மேற்கூறிய பாடல்;

அடிகளார், தமது நாட்டின் கண் கொண்ட தீராத அன்பினைக் காட்டப் பின்வரும் பாடலை எடுத்துக் காட்டலாம்; யாழ்நூலின் தோற்றுவாயாக அமைந்த இந்தத் தலைசிறந்த பாடல், தமிழ் உள்ளவரைக்கும் வாழும்.

''தண்ணளியே செங்கோலாய்த் தனியறமே சக்கரமாய்
மண்முழுதும் ஆண்ட புகழ்வாமன் அடியிணையே
என்றும் அழியா திலங்கும் சமனொளியும்
கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவர்க்கு
மூவடிமண் ஈந்தளித்து மூவாப் புகழ்படைத்த
மாவலியின் பேரால் வயங்கு மணிநதியும்
காவும் பொழிலும் கழிமுகமும் புள்ளணிந்த
ஏரியும் நல்கி இரத்தின தீவமென ஆரியர் போற்றும்
அணிசால் இலங்கையிலே
சீரார் குணதிசையைச் சேர்ந்து வளர்புகழும்
ஏரால் இயன்ற செந்நெல்
இன்சுவைத் தீங்கன்னலொடு
தெங்கின் இளநீரும் தீம்பலவின் அள்ளமிர்தும்
எங்கும் குறையா இயலுடைய நன்னாடு
மட்டக்களப் பென்னும் மாநாட்டார் நாட்டினிடை''

என்றும்

''அஞ்சிறைப் புள்ளொலியும் ஆன்கன்றின் கழுத்தில்
அணிமணியின் இன்னொலியும் அடங்கியபின் நகரார்
பஞ்சிலைந்த அணைசேரும் இடையாமப் பொழுதிற்
பாணனொடுந் தோணிமிசைப் படர்ந்தனன் ஓர் புலவன்''

என்றும்

தேனிலவு மலர்ப் பொழிற் சிறைவண்டு துயில
செழுந்தரங்கத் தீம்புனலுள் நந்தினங்கள் துயில
மீன் அலவன் செலவின்றி வெண்ணிலவிற் துயில
விளங்குமட்டு நீர் நிலையுள் எழுந்த தொருநாதம்

என்றும் மட்டக்களப்பினை உலகத் தமிழ் இலக்கியத்துள் என் றென்றும் வாழவைத்துவிட்டார் விபுலாநந்தர். மட்டக்களப்புச் செய்த மாதவம் இதுவாகும்

நாவலரைப் பாடி, யாழ்ப்பாணத்தைப் பாடி வடக்கு கிழக்கினை நெஞ்சத்தால், நெஞ்ச நினைவால், கொஞ்சு தமிழால், கூறும் புல மையால் சாசுவதமாக இணைத்த தனிப்பெரும் பெருமை விபுலா நந்த அடிகளாருடையது. இப்பிணைப்பு காலத்தை கடந்து நின்று தமிழ் நெஞ்சங்களை ஒன்றிணைத்து நிற்கும்.

அடுத்ததாகவும் முடிவாகவும் யான் கூற விழைவது அடிகளாரின் 'கங்கையில் விடுத்த ஓலை' என்ற அற்புதமான கற்பனைக் கவிதையினைப் பற்றியதாகும்.

அடிகளார் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராய் இருந்த காலத்தில் பல தமிழ் அறிஞர்களுடனும் நெருங்கிப் பழகினார். உ. வே. சாமிநாதையர், பண்டிதமணி கதிரேசன் செட்டியார், ரா. பி. சேதுப்பிள்ளை வித்துவான் வெள்ளைவாரணனார்' அரசன் சண்முகனார் போன்றோர் தமது முதல்தமிழ்ப் பேரறிஞராய் அடிகளாரைக் கொண்டனர். என்றால் அவர் தகைமையை எம்மால் சொல்லவும் முடியுமோ? முதற் தமிழ்ப் பேராசிரியராய் கரந்தைத் தமிழ்ச் சங்கம் சொல்லாக்கக் குழுத் தலைவராய் சென்னைப் பல்கலைக்கழகப் பரீட்சார்த்தியாக எத்தனையோ பதவிகள் தாமே அடிகளாரைச் சென்றடைந்து அவர் தகைமையாற் பெருமை பெற்றன. தாரகை நடுவண் தண்மதியாய் விளங்கிய இந்நாளிற் கந்தசாமிப் புலவரின் நட்பும் கிட்டியது. "பாங்கனை யானன்ன பண்பனை" என்று திருக்கோவையார் கூறும் 'ஒருவரினது நண்பனை அறிந்தால் அவரை அறிந்தமாதிரி' என்ற ஆங்கில வழக்கும் உண்டு.

அடிகளார், இமயமலைச்சாரலில் வதியும் நாளில் தம் நண்பராம் கந்தசாமிப்புலவர் சடுதிமரணம் எய்திவிட்டார் என்று அறிந்தார். தாங்கவொண்ணாக் கவலைகொண்டார். இத்துன்பத்தை மறக்க கங்கைக் கரையினை அடைந்தார்.

"எழுத்தறிந்து கலைபயின்றோன் இன்தமிழினியநூல்
எத்தனையோ வத்தனையும் மெண்ணியாழங் கண்டோன்
பழுத்ததமிழ்ப் புலமையினோர் பேரவையில் முந்தும்
பணிந்தமொழிப் புலவன் கனிந்த குண நலத்தான்"!
சொல்வகையுஞ் சொற்றொகையுஞ் சொல்நடையு முணர்ந்தோன்
சொல்வல்லான் சொற்சோராத் தூயநெறியாளன்
பல்வகைய நூற்கடலும் படிந்துண்மை மணிகள்
பலவெடுத்துத் திரட்டிவைத்த பண்டாரம் போல்வான்
மொழித்திறத்தின் முட்டறுத்து முதனூலு முணர்ந்தோன்
மொழிவதற மொழியென்னும் மூதுரையுந் தெளிந்தோன்
அழுக்கறுத்த தூயசிந்தை அந்தண்மை யடக்கம்
அணியிவைதா மெனக்கொண்டோ றைநெறியில் நின்றோன்
மெய்ப்பொருளே பொருளென்ன விளங்கவைத்து முன்னோர்
விரித்துரைத்த அகம் ஏழும் புறம் ஏழும் பயின்றோன்
பொய்பொருளை நச்சுபவர் புறங்கடை நோக்காதான்
போதுபுனை மாதர்நலஞ் தீதெனவிட்டகன்றோன்
அவநெறியிற் செல்வோர்தாம் கரும்பிருக்க இரும்பை
அயிலுகிற மூடரென வறிந்து உலகுதுறந்து

தவநெறியிற் றலைப்பட்டோன் அவாவின்மையென்னும்
தனிச் செல்வம் திரட்டி வைத்த தாவில் புகழாளன்
கந்தசாமிப் பெயரோன் வேட்களத்திலென்னை
கண்டநாள் அன்பென்னுங் கயிறுகொண்டு பிணித்தான்
அந்தநாண் முதலாக நட்புரிமை பூண்டோம்''

என்ற பாடல் வரிகள் உலகில் அடிகளார் மதித்துப் போற்றிய தகைமை யாவை? என்பதற்கு விடையாய் அமைய வல்லவை. மேற்கூறிய தகைமைகள் அடிகளாருக்கும் அமைந்திருந்ததை யாம் அறிவோம். 'பாங்கனை யானன்ன பண்பனை' என்ற திருச்சிற்றம் பலக்கோவை இலக்கணத்துக்கு இது இலக்கியம். கந்தசாமிப் புலவனும் அடிகளாரிடத்தில் கொண்ட கண்ணியமான குணநலங்களைப் பின்வரும் அடிகள் தெரிவிக்கின்றன. அண்மையில் யான் வடநாடு நண்ணியதையறிந்தே—

''நம்மடிகள் உறைகின்ற தவப்பள்ளி யாது?
நற்றவத்தோர் முகவரியா தெனவினவித் தெரிந்து
செம்மையுறுஞ் செய்திபொதி ஓலையொன்று விடுக்கச்
சிந்தை வைத்தா யென்ன எனக்கோ ரன்பரறிவித்தார்!''

எனக்கூறும் அடிகள் தெற்றெனக் காண்பிக்கின்றன. மேலும்

அகநெகுமன் பினிலூறு முறைபகரும் பொருட்டோ
ஆய்ந்தசில கலைமுடிவு தேர்ந்துணரும் பொருட்டோ
முகவரி பெற்றோலைவிட முயன்றனன்பே ரன்பன்
மூதறிஞ னெனவெண்ணி யாதரமுற் றிருந்தேன்

அடிகளார் வாழ்க்கைக் குறிக்கோளும் அவர் வாழ்வைப்
பணிகொண்ட ஆராய்ச்சி முயற்சிகளும்
அவர்விரும்பி வாழ்ந்த வாழ்க்கை நோக்கும்
இவற்றுள் நன்கு பரிணயிக்கின்றன.

''பொங்கியெழுந் துயர்க் கனலைப் போக்குதற்கும் மாயப்
பொய்யுலகி னுண்மையினைப் புலங்கொளற்கும் கருதி
கங்கையெனும் தெய்வநதிக் கரைப்புறத்தையடைந்து
கல்லென்று சொல்லிவிழும் நீர்த்தரங்கம் கண்டேன்.

தவநெறிச் செல்வராகையால் நிலையா வாழ்வின் தன்மையைத் துறவி விபுலாநந்தர் நன்குணர்ந்திருந்தார்.

''மேற்றிசைவான் ஈமத்தி போற் சிவக்கப் பகலோன்
மெலிந்து மறைந்திடல் கண்டேன் நலிந்தவருள்ளம் போல்
காற்றுயிர்த்துப் பனித்திவலை தூற்றுதலைக் கண்டேன்
காரிருளின் கணமிரிய வானவெளிப்பரப்பில்!''

மாலைக் காலமும் அந்திவானமும் செந்தீயை நினைவுபடுத்த நண்பனின் இழப்பு நிலையினைக் காட்டி நிற்கிறது. ''ஈமத்தீ'' யெனச் சுடுகாட்டுத் தீயினை நினைவூட்டுவது அவர் மனோநிலையினைக் காட்டி நிற்கின்றது. 'ஈமத்தீ'யென என்பது மிக உயர்ந்த கற்பனை. சிறந்த வற்றாத கற்பனாசக்தி மிக்க புலவனை அடையாளம் காட்ட இந்த ஒரு சொல்லே போதும். மரணம் பற்றிய நினைப்பு, கவலை, பிரிவுத் துன்பம் மிக்க மனோ நிலையினைக் காட்டப் பெரும்புலவர் கைக்கொள்ளும் உத்தியிது. திறனாய்வாளர்க்கு விருந்து இது. இந்தச் சொல்லாட்சியனைப் பற்றியே ஒரு தனிக் கட்டுரை எழுதலாம். மணிமேகலை ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார் மாலைக் காலத்தை வருணிப்பதைப் பாருங்கள்.

'குவளை மேய்ந்த குடக்கட் சேதா
முலைபொழி தீம்பா லெழுதுக ளவிப்பக்
கன்று நினைகுரல மன்றுவழிப்படர
அந்தியந்தணர் செந்தீப் பேண
பைந்தொடி மகளிர் பலர்விளக்கெடுப்ப
யாழோர் மருதத் தின்னரம்புரளக்
கோவலர் முல்லைக் குழன்மேற்கொள்ள
அமரக மருங்கிற் கணவனை யிழந்து
தமரகம் புகளை மொருமகள் போலக்
கதிராற்றுப் படுத்த முதிராத் துன்பமோ
டந்தி யென்னும் பசலை மூதாட்டி
வந்திறுத் தனளான் மாநகர் மருங்கென்'

மாலைக் காலம் துன்பத்தைக் காட்டுவதாகவே கவிபடைத்தல் தமிழ் மரபு பிரிவுத்துயரைக் காட்ட மாலைப் பொழுதையே புலவர் துணைக்கொள்வர். இந்த இலக்கிய மரபினையே தாமும் கைக்கொள்ளுதல் விபுலாநந்தர் தம் துறைபோல தமிழ்ப் புலமைக்கு இன்னுமொரு சான்றாக விளங்குவதை எண்ணி எண்ணி மனம் பூரிக்க முடியும்.

அந்த நேரத்தில் பத்துத் திங்கள் வளர்ந்த வான்மதி அடிகளார் முன் எழுகின்றது.

''ஐயிரண்டு நாள் வளர்த்த வெண்மதியந் தோன்றி
அன்புசொரிந்திடல் கண்டேன் மன்பதையோர் வாழ்க்கை
செய்தியினைத் தேவரறிவாரெனலா மிவர்பால்
தேர்ந்திடுவனென மனத்திலோர்ந்து ஒருபாலிருந்தேன்''

''அக்கரையிற் காசிப்பூர்ச் சுடுகாட்டு நரிகள்
அழுகுரலி னொலிசெவியை யடைந்தது நன்னீரின்
இக்கரையி லுதிர்சருகுங் குச்சிகளும் அலையால்
எற்றுண்டு செயலொழிந்து கிடந்தன எம்மருங்கும்

மீண்டும் இழப்பு நினைவு, நிலையாமை நினைவு, மனத்தைப் பற்றிக்கொள்கிறது. விதிப்பாதையில் அடிபட்டுக் கிடக்கும் சருகுகளும் குச்சிகளும் கரையொதுங்கிய காட்சி, கவிதையாகிறது

''நீர்த்திரையா லிழுப்புண்ட குச்சியொன்று கணமும்
நில்லாது மேலெழுந்து கீழ்விழுந்து மலைந்து
சீர்க்கரையில் எற்றுண்டு கிடந்த செயல் நோக்கிச்
சிந்திக்கின் மானுடர்தம் வாழ்க்கையிது வென்றேன்!''

இன்பவினை யாட்டினிடை மேலெழுந்து குதிப்பார்
எமக்குநிக ராரென்பார் இருகணத்தி னுளத்தில்
துன்பமுற மண்ணில் விழுந் திருகண்ணீர் சொரியச்
சோர்ந்தழுவார் மயக்கமெனுஞ் சுழல்காற்றிலலைவார்.

மரணமெனுந் தடங்கரையி லெற்றுண்டு கிடப்பார்
மறுபிறவித் திரைகவர வந்தியையும் கருவி
கரணமுறும் உடலெடுத்து மண்ணுலகி னுழல்வார்
காதலிப்பா ரெண்ணிறந்த வேதனையுட் புகுவார்

என்று வாழ்க்கை நிலையாமையினை எண்ணி அடிகள் சந்திரனிடம் வினாவுகின்றார்.

என்றினைய சிந்தைசெய்து நீலவிதா னத்தில்
எழில் முத்தின் சுடர் பரப்பி யெழுமதியை நோக்கி
நன்றறிவார் கலைத்திறத்திற் கிலக்காய மதியே
நன்மதியே நாதர்சடை முடியுறையும் நலத்தோய்!

தாழ்வதுவும் மடிவதவும் தரணியில் வந்துதித்தோர்
தாவில்புகழ் நலம்பெருக்கித் தண்ணளிசேர்ந்தனராய்
வாழ்வதுவு மெத்திறத்தால் வந்தனகாண் என்றேன்
வான்மதிய மெனைநோக்கி மானிடவ கேட்டி

என்றும்

மாய்தலெனும் பேருண்மை பிறத்தலெனு முண்மை
வந்துதித்தோர் தொல்லுலகில் வளர்தலெனு முண்மை
தேய்தலெனு முண்மையிவை யாருமுளங் கொள்ளச்
சென்றுதேய்ந் திறந்துதித்து நின்று வளர்கின்றேன்.

வளர்ந்து மடிந்து மீண்டும் பிறக்கும் சந்திரன் செய்கை, வாழ்க்கை நிலையாமையைக் காட்டுவதோடு பிறவித் தொடர்பினையும் அறிவுறுத்தல் காண்க,

''இன்றுயில்போற் சாக்காடும் இனிதுயின் றதன்பின்
எழுவதுபோற் பிறப்புமெனு மியற்புலவ னுரையை
நன்று உணர்தி யெனக் கூறும் தண்மதியை நோக்கி
நரகமொடு சுவர்க்கமுந்தான் நண்ணுவதேன் என்றேன்''

''நற்கனவு சுவர்க்கமுளம் நலியவருங் கனவு
நரகமிவை நல்வினையின் தீவினையின் விளைவாய்
உற்றவென வறிதியெனும் முரையையுளங் கொண்டேன்
உண்மை நண்பன் றனைநினைந்து பின்னுமுரை பகர்வேன்''

''வருந்தித் தாங்கற்ற கல்வி மாய்ந்து மறைந்திடுமோ
மறுமையிலு முதவுமோ வான்மதியே என்றேன்
திருந்துகல்வி யெழுமையுமே மாப்புடைத்தென் நுரைத்த
செம்மொழியைத் தேர்தியென வெண்மதியம் விடுக்க''

தன்னுடைய வாழ்க்கைத் தத்துவ நெறியினையே விபுலானந்தர் வான்மதி மூலம் கூறுகின்றார் என்றே ஈண்டு கொள்ளுதல் வேண்டும். கருத்து அடிகளுடையது வான்மதி அடிகளார் கருத்தினைச் சொல்லும் ஒரு கற்பனைப் பாத்திரமே என்று அறிதல் வேண்டும்.

கந்தசாமிப் புலவர் வானுலகத்தில் இருப்பார் என அடிகளார் துணிகின்றார்.

''மாணியென வாழ்க்கை முற்று மிலக்கணநூல் பயின்றோன்
வானகத்தும் அதுபயில்வான் எனும் உண்மை தெளிந்தேன்
பாணினிதொல் காப்பியன் சீர்பதஞ்சலிவா முலகு
படர்ந்தனனென் நண்பனெனும் பான்மையினை
யுணர்ந்தேன்!''

''தோற்றுவதும் மறைவதுவும் தொல்பியல்பென் றுரைத்
துயரகன்ற தெனினுமன்புத் தொடரகலா மையினால்
மாற்றமொன்று முரையாது வான்புகுந்தாற் கோலை
வரைவலென அன்புபொதி வாசகங்க ளெழுதி''

''அறிவற்றங் காக்குமெனு மறவுரையை யெழுதி
அறநெறியா வின்பமெய்து மமைதியையு மெழுதி
உறுநட்பு நிலைபெறுமென் றுறுதிப்பா டெழுதி
ஓதுவிபுலாநந்த னுரையிவையென் றெழுதி

கந்தசாமியாரின் வானுலகு முகவரியை எழுதி ஓலையினைத் தயார் செய்கின்றார் எனப்பாருங்கள்:

''செல்வமலி விண்ணாட்டிற் செழுங்கலைத் தெய்வம் வாழ்
திருநகரிற் றமிழ்வழங்குந் தெருவிலொரு மனையில்
அல்லலின்றி வாழ்கின்ற கந்தசாமிப்பே
ரறிஞனுக்கிவ் வோலையென வடையாளம் பொறித்தேன்''

கடிதத்தைக் கொண்டு செல்லுவது யார்!

''வேலைநீர் வையத்தோர் அன்னத்தைக் கிளியை
மென்முகிலைத் தூதாகவிடுத்தனர் யானெழுதும்
ஓலைகொண்டு விண்புகுந்து நண்பனிடம் சேர்க்கும்
உதவியினை புரியவல்லார் யாவரெனக் கலங்கி

''தேவர்புகழ் கங்கையெனுஞ் செல்வநதி நங்கை
செஞ்சடை வானவனிடத்தாள் இங்கு முறைசின்றாள்
மூவுலகம் செலவல்லாள் எவ்வுயிரும் புரக்கும்
முதல்வியிவள் துணைபெறுவே னென வியந்து துணிந்தே''

கங்காதேவியை நினைந்து பாராயணம் பண்ணுகின்றேன்

''செம்பவளக் கொம்பனிடைக் சேர்ந்த முத்து மாலையைப்போல்
எம்பெருமான் செஞ்சடையை யெய்திநின்ற வானதியே
எம்பெருமான் செஞ்சடைவிட் டிங்குவந்து தண்ணளியால்
வெம்பரிதித் தீயகற்றும் மின்னே நினைந்தொழுதேன்

''மாற்றுயர்ந்த பொன்மலைமேல் வைத்த வெள்ளிக் கோல்போல்
ஏற்றியல்யோன் பொற்கடையை யெய்தி நின்ற வானதியே
ஏற்றியல்வோன் பொற்சடைவிட் டிங்குவந்து மக்கள் பசி
ஆற்ற வுணவளிக்கும் மன்னாய் நினைந்தொழுதேன்

என்று மும்முறை நினைந்து போற்றி நின்றார் அடிகள். அந்நேரத்தில்,

''அம்மென் சிலம்பு அரற்றும் சீறடி
செம்மலரென்னத் திகழ வம்மலர்ப்
பாசடை கடுக்கும் பட்டினியற்ற
தூசு செறியிடை துவள மாசில்
வான்மதி முகத்திற் புன்னகை தவழ
மகர மீன்மிசை இவர்ந்து

''காரிடைத் தோன்றிய மின்னுக் கொடிபோல்
நீரிடைத் தோன்றினாள்'' கங்கை.

அப்பொழுது அடிகள் கங்கா தேவியை வணங்கி,

''அண்டர் நாட்டை வைகும் நண்பன் கையில்
ஈங்கிது சேர்கவென்று இரும்புனல் நீரில்''

ஓலையையிட்டனர்; கங்கைப்பெண்ணாள் அவ்வோலையை ஏந்தி
''வானதி வேலையை நோக்கி விரைந்து சென்றதுவே!''

''கங்கையில் விடுத்த ஓலை'' என்ற இக்கவிதை அடிகளாரின் செவ்விய உளப்பாங்கினையும், உயரிய கற்பனை வளத்தினையும் உலகிற்குக் காட்டி நிற்கிறது.

கையறுநிலைப் பாடல் போன்றிருந்தாலும் அடிகளார் தமது உயரிய கற்பனையால் புதுமெருகும் புத்தெழிலும் பெற இக்கவிதையினை யாத்துள்ளார்.

மகாகவி பாரதிக்குப் பத்து ஆண்டுகள் பின்பே பிறந்த அடிகளார் பாரதி மறைவுக்குப் பிறகு இருபத்தியேழு வருடங்கள் வாழ்ந்து இருக்கின்றார். இவரை இளங்கோ அடிகளின் மறு அவதாரம் என்றே கொள்ளவேண்டியுள்ளது. பாரதி தமது 39ம் வயதில் இறந்தபோது அடிகளாரது வயது இருபத்துஒன்பதாகும். 1931ம் ஆண்டே பாரதியின் பாடலை மதித்து பாரதி சங்கத்தின் மூலம் இசையமைப்பித்துப் பாரதி பாடல்களைப் பாடுவித்ததின் மூலம் பாரதியைப் பெரும் புலவனாக இனங்கண்ட பெருமையும் அடிகளாருக்கு உண்டு. ஐம்பத்திஐந்தே ஆண்டுகள் வாழ்ந்திருந்த அடிகளாரின் புலமை ஒரு வாழ்விலேயே கற்றுணர்ந்ததென்று ஒப்புக்கொள்ள முடியாதிருக்கிறது. தமிழ் இலக்கிய வரலாற்றிலே விபுலாநந்த அடிகள் இடம் நிரந்தரமானது. இந்த நூற்றாண்டு பாரதியின் நூற்றாண்டாக இருக்கலாம். பாரதியைப்போல ஒரு கால புருடனாகவோ, தமிழிற்குப் புதிய பரிணாமங்களைப் படைத்துப் புதுப் பாதை காட்டிய காலமானியாகவோ அடிகளைக்கொள்வதற்கில்லை. ஆனால், கம்பன் இளங்கோவின் மரபியலில் நின்று கொண்டே பாரதியின் புதுமைத்துறையினுக்கு இணைப்பு வழங்கிய இலக்கியப் பாலமாக அடிகளார் விளங்கியது உண்மை. இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இணைப்புப் பாலமாய் விளங்கும் சேது போல தமிழ் இலக்கிய பாரம்பரியத்துக்குப் பல்வேறு வழிகள் கண்டு அவர் இலக்கியச் சேதுவாக விளங்குகிறார். பழைய புதிய இலக்கியங்களை இணைக்கின்றார். பாரதியைப் பழைய தமிழ் இலக்கியத்துடன் இணைக்கின்றார். இந்தியத்தாய் நாட்டினைச் சேய் நாட்டுடன் இணைக்கின்றார். கலையை விஞ்ஞானத்துடன் இணைக்கின்றார். ஈழத்தின் வடபுலமையினைக் கிழக்கின் மண்வளத்துடன் இணைக்கின்றார்,

பண்டைய இசைமரபினையும், ஆடல் மரபினையும் மீண்டும் கண்டு புதிய தமிழ்ச் சமூகத்திற்குத் தந்ததால் அதனினும் ஒரு இணைப்புச் சக்தியாகவே விளங்குகின்றார். மேற்கு உலகின் இலக்கிய வளனை உயரிய தமிழ் மொழி பெயர்ப்பாகத்தந்து தமிழ் இலக்கிய மரபுடன் இணைக்கின்றார்,

முடிவாக விபுலாநந்தர்க்கு அஞ்சலியாக மூன்று பாடல்களைக் கூற விரும்புகின்றேன். அவை வருமாறு:-

பண்டுஅச் சிலம்பின்கோவே ஈழத்தின் கிழக்கு உதித்தென்னத்
தொண்டனாய் 'யாழ்நூல்' யாத்துத் துறைபுகத் தமிழாராய்ந்து
எண்டிசை போற்ற மற்றும் இந்தியத் தமிழ்நாடேத்தி
விண்முறை பகர நோற்றான் விபுல ஆநந்த வேந்தன்.

மானசசரோவர்ஆடி மதிபுனை சடையோன் வைகும்
கூன்நதி வீழும்குன்றம் கைலயங் கிரியும் கண்டோன்
வான்புகழ் தமிழுக்காக மதங்கசூ மணியணி வள்ளல்
தேன்நனை கூந்தல் மாதர் சிந்தையால் தொடாத சீலன்.

வித்தக விபுலாநந்தன் வீடுற்றான் தமிழர் வாழ்வில்
நித்தியம் நிலைத்து நிற்பான் நினைவினில் அவர்தம் நூலில்
பத்திரப்படுத்தி நெஞ்சில் பனுவலில் பசும் பொன்னாக
வைத்தி ருப்பார்கள் என்றும்அம் மன்னவன் நாமம்வாழ்க.

முற்றும்.

(இக் கட்டுரை ஆசிரியர் விபுலாநந்த அடிகளின் மாணவ வழி முறையினர். பிரதேச அபிவிருத்தி - இந்து சமய, கலாச்சார, தமிழ் அமுலாக்கல் அமைச்சுச் செயலாளராக இருந்தவர். அமைச்சு, அடிக ளாரின் 'மதங்கசூளாமணி' மீள் பதிப்பாக வெளியிடவும் அடிகளார் பற்றிய ஆங்கிலநூல் வெளியிடவும் அடிகளாரின் இசைக்கல்லூரியை வளர்க்கவும் உதவியர். சிறந்த தமிழ் இலக்கிய அறிவும் கவிதை ஆக்கும் ஆற்றலும் உள்ளவர்.)

# விபுலானந்தரும் பாரதியாரும்

(அடிகளார் நூற்றாண்டிற் கொழும்புத் தமிழ்ச்சங்கம் நடத்திய இலக்கிய ஆய்வுக் கட்டுரைத் தேர்விற் பேராசியர் க. கைலாசபதி நினைவுப்பரிசில் பெற்றது.)

அறிமுகம்

உலகிலே வாழும்போதே தமது மகத்தான சேவைகளினாற் புகழடைந்து, இறந்தபின்னரும் அவர்தம் சேவையினால் அழியாப் புகழ் பெற்று விடிவெள்ளிகளாகத் திகழ்பவர்கள் மிகச்சிலரே, முத்தமிழை வளர்ப்பதற்காக இருபதாம் நூற்றாண்டிலே இந்தியாவிலும் இலங்கையிலும் பணி செய்தவர்கள் பாரதியாரும், விபுலானந்தரும் எனில் அது மிகையாகாது. உணர்ச்சியையும் புரட்சியையும் கொண்ட பாமலர்களால் தேசப்பற்றையும் விடுதலை வேட்கையையும் வளர்த்துச் சுதந்திரத்தீயை மக்கள் எண்ணங்களில் வளர்த்து வெற்றி கண்டவன் மகாகவி பாரதி. முத்தமிழின் சுவையை இனிதே கற்றுத் தமிழ்மொழியினதும் சைவ சமயத்தினதும் பழமையை இனிதே எடுத்துரைத்துக் கற்றோர் நெஞ்சங்கள் களிப்படைய வாழ்ந்து காட்டியவர் சுவாமி விபுலானந்தர் ஆவார். இவர் இலங்கையிலும் இந்தியாவிலும் மூதறிஞராகப் போற்றப்பட்டுத் தமிழை வளர்ப்பதிலேயே முன்னவனாகத் திகழ்ந்து அளப்பரிய பணியாற்றினார்.

'நமக்குத் தொழில் கவிதை' எனச் சங்கநாதமிட்டு, நாவளத்தால் நாடே வியக்க 'பாட்டுத் திறத்தாலே வையத்தைப் பாலித்திட வேண்டும்' எனக்கூறி அதன்படி வாழ்ந்து காட்டினான் பாரதி. மக்களின் அடிமைநிலை கண்டு கொதித்தெழுந்து மூடநம்பிக்கைகளை உடைத்தெறிந்து எளியநடையிலமைந்த உணர்ச்சிக் கவிதைகளால் கற்றவரும் மற்றவரும் மெச்சும் வகையில் ''அச்சமில்லை அச்சமில்லை'' என்ற மார்பு தட்டி, வீரமுழக்கம் செய்து வெற்றி கண்டவன் பாரதி. தமிழின்மேல் அழியாக் காதல்கொண்டு சங்கத் தமிழ் நூல்களைக் கற்றுணர்ந்து அதை ஆராய்வதிலும் முத்தமிழைப் பரப்புவதிலும் தனது வாழ்க்கையைச் செலவிட்டுப் பணியாற்றியவர் சுவாமி விபுலானந்தா ஆவார்.

தமிழரின் தன்மானம் காக்கத் தளராமற் பணிசெய்து தலைநிமிர்ந்தான் பாரதி. தமிழன்னையின் அணிகலன்களாம் காப்பியங்களின் பெருமைசாற்றித் தமிழ்ச் சமுதாயத்துக்கு வழிகாட்டியவர்

விபுலானந்த அடிகள். எனவே தமிழருக்குத் தன்மானம் புகட்டிய பாரதியையும், தமிழ் இன்பம் பெற்றிடச் செய்த விபுலானந்தரையும் தமிழ் உலகம் கண்டு 'தங்கத் தமிழ்க் கவி' எனவும் போற்றிப் புதுமையையும் பழமையையும் இணங்கண்டது.

## தோற்றமும் கல்வியும்

இலங்கையிலே கிழக்கு மாகாணத்திலே மட்டக்களப்புக்குத் தெற்கே இருபத்தெட்டு மைல்கள் தொலைவிலுள்ள காரைதீவிலே சாமித்தம்பிக்கும் கண்ணம்மையாருக்கும் புதல்வனாக 1892-03-16இல் பிறந்து 'மயில்வாகனன்' என்னும் பிள்ளைத்திருநாமத்துடன் வளர்ந்தார் சுவாமி விபுலானந்தர் அவர்கள். பிறந்த ஊரிலுள்ள தமிழ்ப் பாடசாலையிலும், பின்பு புனித மைக்கல் கல்லூரியிலும் தமிழ்-கணிதம்-ஆங்கிலம் என்பன கற்று, 1908ஆம் ஆண்டு கேம்பிறிட்ச் சர்வலாசாலைத் தேர்வில் சித்தியடைந்தமையால் அவர் படித்த புனித மைக்கல் கல்லூரியிலேயே ஆசிரியராக நியமனம் பெற்றார். 1915இல் ஆசிரியர் பயிற்சி பெறுவதற்காகக் கொழும்பு சென்ற சுவாமி விபுலானந்தர் சமகாலத்திற் கொழும்பிலிருந்த மூதறிஞர்கள் கந்தையாபிள்ளை, தாமோதரம்பிள்ளை, கைலாயபிள்ளை என்போரிடம் சங்க-சமய நூல்களைக் கற்று 1916இல் மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய பண்டிதர் பரீட்சையிலும் தேறி விஞ்ஞானப்பாடங்களைச் சுயமாகவே படித்து 1919இல் விஞ்ஞானப் பட்டதாரியாகி 1919இல் மானிப்பாய் இந்து கல்லூரி அதிபராகவும், 1926இல் திருகோணமலை இந்துக்கல்லூரி அதிபராகவும், 1931இல் பேராசிரியராக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும், 1943இல் இலங்கைச் சர்வகலாசாலையில் தமிழ்த்துறைத் தலைவராகவும் பணியாற்றினார். 1920 ஆம் ஆண்டிலே யாழ்ப்பாண ஆரிய பாஷாபிவிருத்தி சங்கம் தாபித்துப் பிரவேச பண்டிதர், பால பண்டிதர் பண்டிதர் தேர்வுகளை நடத்தி வழிகாட்டினார். 1925ஆம் ஆண்டு கிழக்கு மாகாணக் கல்விநிலைபற்றி ஆராய்ந்து, அரசுக்கு ஓர் அறிக்கையையும் 1927ஆம் ஆண்டு சிதம்பரத்தில் ஒரு பல்கலைக் கழகம் நிறுவப்படவேண்டும் என்பதற்கான காரணங்களைப் பல்கலைக்கழகக் குழுவினர்க்குக் கூறித் தமிழுலகிற்கு முன்னோடியாகத் திகழ்ந்தார் சுவாமி விபுலானந்தர் அவர்கள்.

இந்தியாவிலே திருநெல்வேலியிலுள்ள எட்டயபுரம் என்னும் ஊரிலே 1882 12-11 ஆம் திகதி சின்னச்சாமி ஐயர் இலக்குமியம்மாள் தம்பதிகளுக்குப் புத்திரனாக அவதரித்து 'சுப்பிரமணியன்' என்னும் பிள்ளைத் திருநாமத்துடனும் 'சுப்பையா' என்ற செல்லப் பெயருடன் வளர்ந்தார் மகாகவி பாரதியார். ஆரம்பக் கல்வியை நெல்லை இந்துக்கல்லூரியில் ஒன்பதாம் வகுப்புவரை கற்றார். படிக்கும்போதே பண்டிதர்களுடன் சொற்போர் செய்தார். 1898இல்

தந்தையின் மறைவினால் பாரதி தனது அத்தை குப்பம்மாள் வீட்டிற்குக் காசி சென்று காசி இந்துக்கல்லூரியில் மெற்றிக்குலேசன் வகுப்புவரை கற்று அலகபாத் சர்வகலாசாலை புதுமுகத் தேர்வி லும் முதன்மையாளராகத் தேறினார். அங்கு வடமொழியும் இந்தியும் கற்றார். இடைக்கலை வகுப்பில் ஓராண்டு முடிவடைந் ததும் படிப்பும் முடிந்தது.

'பாரதி' என்ற பட்டப் பெயர் எட்டயபுரம் சமத்தானப் புல வர்களால் 1893ஆம் ஆண்டு சூட்டப்பட்டது. அதே எட்டயபுர மன்னரின் தோழராக 1902 1904 காலப்பகுதியில் மதுரை சேதுபதி உயர் பள்ளியிற் தமிழ்ப் பண்டிதராயும் கடமையாற்றினார். எட் டயபுர மன்னருடன் இருக்கும்போது பன்னிரண்டு ரூபா சம்பள மாகக் கிடைத்தது. அவரது வேலை - மன்னருக்குப் பத்திரிகை, தமிழ் - ஆங்கில நூல்கள் இவற்றைப் படித்து காட்டுவதும் புலவர் சபைகளை நடத்துவதுமாகும்.

பாரதி காசியில் 1898ஆம் ஆண்டு இருந்தபோதே கச்சம் வால் விட்ட தலைப்பாகை அணிந்து, பஞ்சாபி முண்டாசு போல நீண்ட கிராப்பு கெய்சர் மீசை வளர்த்தும், கவிஞர் ஷெல்லி அணி வது போன்ற நீண்ட கறுப்பு உடை தரித்தும் அவனது புரட்சிக் கோலம் தோற்றமாகிற்று. சுமார் ஐந்தரையடி உயரமான சதை யில்லாத உடம்பும், வழுக்கையான தலையையுடைய பாரதிக்கு தலைப்பாகையும் நீண்ட கறுப்புக் கோட்டும் நிமிர்ந்த நடையும் வெற்றிலைக் காவி ஏறிய பற்களும், பெரிய மீசையும் உருட்டும் விழிகளும் கொண்டு பூணூல் தரியாது, வழமையை மாற்றி புதிய பாதையில் உருவத்தாலும் உணர்ச்சியாலும் கவர்ச்சியைத் தந்தது பாரதி புரட்சியின் கோலமல்லவா.

சுவாமி விபுலானந்தர் வாழ்க்கையின் நான்கு நிலைகளையும் அறிந்து முறைப்படி பிரமச்சாரியத்தையும் சந்நியாசத்தையும் கடைப்பிடித்தவர். எனவே துறவறத்தை மேற்கொள்ளுவதற்கு முதல் ஆசிரியராகவும், பேராசிரியராகவும், அதிபராகவும் இருந்தா லும் இறுதியில் உடல் பூராவும் காவியணிந்து காட்சியளிப்பார். வட்டமான முகமும் காந்தம்போன்ற கவர்ச்சியான கண்களும், அமைதியின் உறைவிடமாக விளங்கும் முகமும் அகலமான நெற்றி யும் வழுக்கையான தலையும் ஒருங்கே அருள்ஒளி வீசும். அறிவாலும் ஆற்றலாலும் அடக்கத்தாலும் அறப்பணிகளாலும் தமிழுக்கும் சமயத்துக்கும் தன்னை அர்ப்பணித்து வணக்கத்துக்குரியவர் ஆனார்.

## இலக்கியத்துறை

இலக்கியத் துறையின் சுவடுகளே பாரதியின் புரட்சிக்கு அழியாத அம்சம் எனலாம். தனது கற்பனாசக்தி வளத்தால் சிறுவயதிலேயே "பாரதி" என்ற பட்டம் சூட்டப்பட்டும் அரசவைக் கவிஞனாகவும் எட்டையபுர மன்னராலும், சமஸ்தானத்தாலும் கௌரவிக்கப்பட்டவன் பாரதி தமிழரின் கலாசாரப் பழமைக்கும் புதுமைக்கும் இடையில் நடக்கும் மோதல்களை அழகாகப் படம் பிடித்துக் காட்டும் மோதல்களை அழகாகப் படம்பிடித்துக் காட்டும் கவிதைகளைத் தருவதன் சாமர்த்தியமே பாரதியின் சிறப்பு அம்சமாகும். குறிப்பிட்ட சமுதாயத்தை ஒட்டி இவை நடத்தப்பட்டாலும் இவரது கவிதைகள் சமுதாய விடுதலையை முன்னெடுத்துச் செல்வதாகவே உணரலாம். இந்தியாவின் விடிவும் சுதந்திர வேட்கையும் இவரது மனதில் பிரதான இடத்தைப் பிடித்திருந்தன இந்தியாவைப் பெண்வடிவமாகவும் அவள் வெறிகொண்டு ஆடுவதாகவும் மாவிலைகளைச் சூடி வேலைத் தாங்கிக் குதித்து ஆடிப் பாடுவதாக "வெறிகொண்டதாய்" என்னும் பாடல், தேசிய கீதங்களில் இடம்பெறுகின்றது.

"மாரதர் கோடிவந்தாலும் கணம்
மாய்த்துக் குருதியில் திளைப்பாள்"

என்கிறார் பாரதி. இதில்வரும் கருத்துக்கள் சிலப்பதிகாரத்திலே வரும் வேட்டுவ வரிகளில் கூறப்படும் கருத்தான எயினர்களின் போர்வலிமை மிக்க கடமையையும், இவர்களின் வெற்றிக்கு தொண்டையில் வழிந்தோடும் இரத்தத்தை ஏற்றுக்கொள் என வேண்டுவதாகவும் உள்ள பின்வரும் பாடலை நினைவூட்டுகிறது. சிலப்பதிகாரப் பாடல் பின்வருமாறு

கடல்வலி எயினர் நின்
அடிதொடு கடனிது
மிடறுகு குருதிகொள்
விரல்தரு விலையே

பாரதியானவன் "யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல், இளங்கோவைப்போல், வள்ளுவனைப்போல்" என்று கவிதையிலே இலக்கிய கர்த்தாக்களை மதித்தாலும், அவர்களது இலக்கியங்களை படித்தாரா என்பது சந்தேகமாகவே உள்ளது. கம்பராமாயணத்தை ஆராய்ந்துகொண்டிருந்த புலவர் ஒருவரைச் சந்தித்தபோது புலவர் பாரதியைப் பார்த்து கம்பராமாயணத்தைப் பற்றிக் கேட்டார். பாரதியோ பின்வருமாறு பதிலளித்தான்.

''எடுத்ததும் பளிச்சென்று அர்த்தம் மனதில் படவேண்டும். அகராதி பார்க்க நமக்கு நேரமில்லை. கம்பன் மகாகவிதான் அவன் பூலோகத்தில் இல்லை. அவனறிவோ பெரிது ஒன்றுமே புலனாகவில்லை. பழைய காலத்துக்குத்தான் பாடியிருக்கிறான். கம்பனின் கவி படித்து இனிமையாகத்தான் உள்ளது. அதன் அர்த்தம் சொல்லும் போதுதான் ஏதோ குடைகிறது.''

மேலும் அப்புலவர் கம்பராமாயணத்திலே நாட்டுப்படலத்தைப் புகழ்ந்து பின்வரும் பாடலைத் தொடங்கினார்:

''கதிர் கமழ் வயலிலுள்ள கடிகமழ் பொழிலுள்ள'' புலவர் கூறியிருக்க முதல் பாரதியார் இடைமறித்தார்.

''ஓய் ஓய் புலவரே நாமும் நமது நாட்டைப் பாடியிருக்கின் றோம். கேளும்'' பாருக்குள்ளே நல்ல நாடு ''எங்கள் பாரத என வீராவேசத்துடன் கிளம்பினான். அகராதிப் புலவர் வியந் தார். பயந்தார்.

''ஐயா, பாரதி கவி, உணர்ச்சிக் கவி; கம்பன் கவி, கலைக்கவி என்றார் புலவர்.

இங்கே பாரதியைக் கம்பனுடன் ஒப்பிட முடியாவிட்டாலும் கவிஞர் ஷெல்லியைப்போல சுயேச்சையாகப் பாடுவார். ஷெல்லியின் இலட்சியம் கலைப்புரட்சிபோல பாரதியின் இலட்சியம் சமுதாயப் புரட்சியாகும்.

கவியோகி சுத்தானந்த பாரதியார் முதன்முறையாக எட்டிய புரத்திலே பாரதியாரைக் கண்டு,

''தாங்கள் என்குரு ஆசியும் கல்வியும் பெறவந்தேன்'' என்றார் உடனே பாரதி குருவானது - சிஷ்யனானது ஒருவன் இன்னொருவனுக்கு உபதேசம் செய்வதா? நான் பாடுவதுபோல் பாடு, என்னைப் போல் எழுது'' என்று கூறினார்.

கவியோகியின் ''மாதாவருகை'' என்ற கவியைப் பார்த்து ஆசீர்வதித்து பாரதியார், அப்பா கல்லாடமும் தாயுமானவரும் படிக்க வேண்டும். சிறிய சொற்களாகக் கல்லாடத்திற் பெறலாம். கவிச்சுவையே தேவை தாயுமானவரிடம் கம்பீரமான ஓசைமிக்க மொழிகள் உண்டு. அவற்றையும் பெறு வேறு நூல்கள் தேவையில்லை'' எனக் கூறிமுடித்தார்.

இங்கே பாரதியானவன் தனது கவி எழுதும் சக்தியின் பாதையை ஓரளவு கூறியதாகவே கருத வேண்டும்.

ஒருமுறை எட்டையபுரத்திலே குடும்பத்துடன் தங்கியிருந்த வேளையில் பாரதியாரிடம் சிறுவயதில் தமிழ் சொல்லிக்கொடுத்த பண்டிதர் வருகை தந்தார். அவர்களது உரையாடலின் பகுதி:-

பண்டிதர்: ''அப்பா, நீ சிலப்பதிகாரம் படித்திருக்கிறாயா''

பாரதி: ''படிக்கத் தேவையில்லைப் பண்டிதரே''

பண்டிதர்; ''சிலப்பதிகாரம், கம்பன், வள்ளுவர் எல்லாம் பாடம் பண்ண வேண்டும். இல்லாவிட்டால் கவி-புலவன் என்பதெல்லாம் ஆடம்பரப் பேச்சே''

பாரதி: ''ஐயா, நமக்கு வேண்டியதெல்லாம் புதுமை; பழைய தேங்காய் நடைப் புத்தகங்களுக்கெல்லாம் ஒரு கோட்டைக் கிழித்து விட்டோமையா''

பண்டிதர்: ''இருந்தாலும் நீ பெரிய கவியே என்று திருக்குறளைப் பற்றிப் பேசச் சொன்னால் ..''

பாரதி: ''பேசுவோமையா, எதற்கும் பின்வாங்கோம்''

இங்கே பாரதி புரட்சியை நாடியே செயற்பட்டான் என்பது தெரிய வருகிறது. பாரதியின் இலக்கிய இரசனைமிக்க தேசபக்திப் பாடல்களால், தமிழ்மொழியின் மந்திரசக்திக்கு கற்றார்களையும் மற்றவர்களையும் கட்டுப்பட வைத்தான் என்பது தெளிவு.

பாரதியின் பாப்பாப்பாட்டு, முரசு, நாட்டுப்பாட்டு, பாஞ்சாலி சபதம் என்பன பிரசுரமாகி யாவும் விற்பனை செய்யப்பட்ட பின் மீண்டும் மறு பிரசுரஞ் செய்வதற்காக பாரதியார், 21. 12. 1918 நெல்லையப்பா பிள்ளைக்கு எழுதிய கடிதத்தின் மூலம் பாரதியின் பாட்டுகளுக்கு மிக மதிப்பளிக்கப்பட்டதையே இது காட்டுகிறது.

''லோகோபகாரி'' என்ற வாரப் பத்திரிக்கையில் பாரதியின் பாடல்கள் அச்சமயம் வெளிவந்தன என்ற செய்தியும் அறியமுடிகிறது.

பாரதியின் பாடல்கள் இந்திய மக்கள் மன்தில் மட்டுமல்ல. இரசிய மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளதால், இரசியமொழி பேசும் மக்கள் மத்தியிலும் புகழடைந்தும் ஒரு சிறப்பம்சமாகும். புதிய இரசியாவையும் பெல்சியத்தின் விடுதலைக்கும் தனி ஒருவனாகக் குரல் கொடுத்தான் பாரதி.

பாரதிக்குப் பின்பு பிறந்து, பத்து வயது குறைந்த விபுலானந்தர் பழந்தமிழ் இலக்கியங்களில் ஈடுபாடு கொண்டமையாற் போலும் பழமை வாதியாகவே வாழ்ந்துகாட்டி பரிணமித்தார் சங்க நூல்களைக் கற்றுணர்ந்த விபுலானந்தர் ஆசிரியராய் பேராசிரியராய் இருந்து இலங்கை - இந்தியாவில் வாழ் தமிழர்க்கு ஒரு சங்கப்

புலவனாகப் பணியாற்றினார். பாரதி கண்ட கவிஞர் ஷெல்லிபோல ஆங்கிலப் பேரறிஞர் ஷேக்ஸ்பியரின் புதுமைகள் படைத்த ஆங்கில நாடகங்களில் கண்ட சுவைகளைத் தமிழிலே தமிழ் இலக்கிய வளம் மரபு மாறாத, சங்க இலக்கியக்கலைச் சொற்களைக் கொண்டு 'மதங்கசூளாமணி' என்ற நூலை வெளியிட்டார். இந்நூலானது மதுரைத் தமிழ்ச் சங்க ஆதரவில் 1926ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது இதில் நாடகத் தமிழின் இனிமை, மரபு யாவும் வளமாக உள்ளது.

இன்னும் தமிழ்ப் பொழில், செந்தமிழ் ஏடுகளில் தனது தொடர்க் கட்டுரைகளை எழுதியும், சுவாமி விவேகாநந்தரின் ஆங்கிலம் சொற்பொழிவுகளைத் தமிழில் தந்தும் தமிழின் மீது கொண்ட அபிமானத்தை வெளிப்படுத்தினார்.

கற்றறிந்தோன் என்பதற்குரிய வரைவிலக்கணத்தைக்கூறி அதன் வழியிலே தானும் கற்றுணர்ந்து ஒழுகியமையை விபுலாநந்தர் பாடல் ஒன்றின்மூலம் விளக்கலாம்

''கங்கையில் விடுத்த ஓலை'' என்ற தலைப்பில் வரும் செய்யுள் ஒன்றை உற்றுநோக்குவோம்.

''எழுத்தறிந்து கலைபயின்றோன் இன்தமிழ் இனியநூல்

எத்தனையோ, அத்தனையும் எண்ணி ஆழங்கண்டோன்
பழுத்த தமிழ்ப் புலமையினோர் பேரவையில் முந்தும்

பணிந்தமொழிப் பெரும் புலவன் கனிந்த குணநலத்தான்''

மேற்படி பாடல்களின் சகல அம்சங்களும் வேறு ஒருவருக்காக எழுதப்பட்டிருப்பினும் அப்பாடல் தரும் சிறப்பம்சம் யாவும் அவருக்கும் பொருந்துகின்றன அல்லவா.

மேலும் இவ்வளவு மேன்மையுற விளிக்கும் கந்தசாமிப் புலவரானவர் விபுலானந்தரைக் குறிப்பிடும் பகுதி மிகவும் உற்றுநோக்கத்தக்கது.

''நம்மடிகள் உறைகின்ற பள்ளி யாது? என்றும்

''நற்றவத்தோர் முகவரி யாது? என்றும் மேன்மையுறக் கூறுவது, விபுலானந்தரின் மதிப்பையே காட்டுகிறது எனலாம். எனவே கற்றோராலும் மற்றோராலும் போற்றப்பட்டு - மதிக்கப்பட்ட பாரதியும், விபுலாநந்தரும் தந்த கட்டுரைகள், உரைகள் ஆக்கங்கள் யாவும் கல்விக்கூடங்களிலே போதிக்கப்பட வேண்டும், பாதுகாக்கப்பட வேண்டும் மதிக்கப்படவேண்டும்.

பாரதியாருக்கு உணர்ச்சிகளை வெளிப்படுத்தப் பத்திரிக்கைகள்; ஒரு ஊடகமாகச் செயற்பட்டது போல, சுவாமி விபுலானந்தருக்குக் கல்விக் கூடங்களும், சர்வகலாசாலைகளும் மதநிறுவனங்களும் எண்ணங்களை வெளிப்படுத்த உதவின. பாரதியானவன் பத்திரா சிரியராக இருந்தது போல, விபுலானந்தரும் பத்திராசிரியராய் இருந்து சேவை செய்துள்ளார்.

பாரதியின் செல்வாக்கு ஒரு புறம் பத்திரிக்கைகள் வாயிலாக மறுபுறம் மக்களின் உள்ளங்களில் அறிவையூட்டின. அஞ்சாமை நெறியை வளர்த்தன. 1903 ஆம் ஆண்டில் ''விவேகபானு'' என்ற ஏட்டில் ''தனிமை இரக்கம்'' என்ற முதற் பாடல் வெளியாகிற்று. 1904 இல் ''சுதேச மித்திரன்'' நாளிதழ் உதவியாசிரியராயும் ''சக்கரவரித்தனி'' என்ற மாத இதழ் பொருப்பாசிரியராயும் இருந்து செயற்பட்டார். 1907ல் ''இந்தியா'' பத்திரிக்கை மூலம் பத்திராசிரியராகிக் ''சுதந்திரம் - சமத்துவம் சகோதரத்துவம்'' என்ற அடிப்படையில் தேசப்பற்றை வளர்த்து வீடுமுரசுக் கொட்டும்படி செய்தார்.

நாட்டின் நிலைப்பாட்டை அழகாகக் கேலிச்சித்திர மொன்றில் காட்டிய பாரதி "சுதேசிய ஒளிக்கு அஞ்சும் ஆந்தைகள்'' எனும் தலைப்பில் குறிப்பிட்டு, மிதவாதக் கும்பல்களை ஆந்தைகளாக்கி ஒரு மரப் பொந்தில் இருப்பதாகவும், தேசபக்தி எனும் சூரியனுக்குப் பயந்து ஒளிந்து இருப்பதாகவும் சித்தரித்திருந்தார். பாரதியின் தேசியப் பாடல்கள் மூன்றை நான்கு பக்கங்களில் அச்சிட்டு, சுதேச கீதங்கள் என்னும் தலைப்பில் வி. கிருஷ்ணசாமி அய்யரால் 1908ல் வெளியாகின. 1909 இல் ஜன்ம பூமி எனும் இரண்டாவது தொகுதி நூலையும், 1910 இல் மாதாமணிவாசகம் நூலையும், 1912 இல் பகவத் கீதையை தமிழில் மொழி பெயர்த்தும், 1912 இல் கண்ணன் பாட்டு, குயில், பாஞ்சாலி சபதம் முதற்பாகம் போன்ற கவிதைகளையும் வெளியிட்டார். 1913 இல் ஞானபானு இதலில் எழுதியும், 1920 இல் மித்திரன் பத்திரிக்கை உதவியாசிரியருமாக பாரதி பணியாற்றினார்.

சுவாமி விபுலானந்தர் தனது ஞானமார்க்கத்தை விவேகானந்த தீபம், கர்மயோகம், ஞானயோகம், ஏடுகளிலும், 'பிரபுத்த பாரத' எனும் இமாலய வெளியீட்டிலும் விரிவாக வெளியிட்டார். அடிகளார் இலக்கிய சமய மகாநாடுகளிற் தலைமைவகித்தும் உரையாற்றியும் அளப்பரிய இதர பணிகளையும் செய்தார்.

பாரதியின் உணர்ச்சிக் கவிதைகளால் ஈர்க்கப்பட்டவர் சுவாமி விபுலானந்தர். 1916ம் ஆண்டு மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் தேர்வில் சித்தியெய்திய பின்னர் விபுலானந்தர் 1922 இல் பிரமச்சாரிய விரதம் பூண்டும் 1924 இல் சந்நியாச தீட்சை பெற்றும் தொடர்புகளை இந்தியாவுடன் இணைத்தவர், 1926 இல் மதங்க

சூலாமணி நாடக நூலை வெளியிட்டும் 1931இல் அண்ணாமலைப் பல்கலைக் கழக பேராசிரியராகவும் இருந்து தனது தமிழ் இசை யாராய்ச்சிகளை பெரிதும் மேற்கொண்டார். ''பாரதியாரின் செய் யுள்கள் மரபு முறையின்றி இலக்கணங்கள் யாப்பமைதியற்றிருக்கின் றன'' என்று ஒரு சாரார் அக்கவிதைகளை ஒதுக்க முற்பட்டனர். இக்காலப் பகுதியான 1931 இல் சென்னையில் பாரதி சங்கம் ஒன்றையமைத்து இசைவல்லுநர்களைக் கொண்டு பாரதி பாடல்க ளைப் பாடச்செய்து யாவராலும் போற்றக்கூடியவகையிலே, பாரதி யின் கவிதைகளை மேன்மையுறச் செய்த பெருமை சுவாமி விபுலா னந்த சுவாமிகளையே சாரும். பாரதியின் வயதுக்கும், தமிழ னையும் தமிழையும் வளர்க்கும் எளிய நடையிலமைந்த கவிகளை மக்கள் உள்ளங்களில் விதைத்து அவர் ஆற்றிய பணிக்கும் மதிப்புக் கொடுத்துக் கவிகளில் உள்ள இலக்கியச் சுவை, பக்திச் சுவை, விடு தலை வேட்கை என்பவற்றைப் போற்றியும் செயற்பட்டார் என் பதே தெரிகிறது.

பாரதியின் கவிகளில் தமிழ் ஆளுமையால் விபுலாநந்தர் ஈர்க் கப்பட்டாரோ என ஐயுறும் வண்ணம் பாரதியின் கவிதைகளின் சாயல் விபுலாநந்தர் கவிகளிலும் வருகின்றன.

''நெஞ்சிலுரமுமின்றி நேர்மைத் திறமுமின்றி
வஞ்சனை கொள்வாரடி கிளியே...''

என்ற பாரதியாரின் அடியானது

''மனதில் உறுதி வேண்டும் வாக்கில் நேர்மை வேண்டும்'' என விபுலானந்தர் கையாண்ட முறையைக் குறிப்பிடலாம்.

## 4. இசைத்துறை

இசைத்துறையில் பாரதியும் விபுலனந்தரும் பரந்த அறிவுடைய வர்களாகவே காணப்படுகின்றார்கள். பாரதியாவனன் சூரிய உத யத்திலும் சூரிய அத்தமனத்திலும் ஊரின் அழகைக் கண்டு புதிது புதிதாக வெறி - ஆவேசம் - அன்பு - பக்தி - ஆட்டம், அழகை. கொண்டு சிலசமயங்களில் தேகம் நடுநடுங்க அபிநயத்துடன் பாடு வதைப் பலர் கண்டிருக்கின்றார்கள். காசியில் இருக்கும் போது இந்துத்தான் இசையால் கவரப்பட்டவன் வீடுவந்ததும் தாயுமான வர் பாடலையும் ஆர்மோணியத்தின் சுருதி கூட்டப்பாடுவான்.

மகா கவி, பாரதியாரைப் பற்றி 'வரா' எழுதிய கட்டுரையில் ஒரு சிறு பகுதி பின்வருமாறு:-

''இயற்கையின் மின்சார சக்தி, கவிதை உணர்ச்சி என்ற கம்பி மூலமாக பாரதியாரின் உடலிலும் உள்ளத்திலும் நுழைந்து பாய்ந்து பரவி, பூரித்துப் போகும் நிலையில் பாரதி, ஆனந்தக் கூத்திடாமல் சும்மா இருக்கமுடியுமா? குரலிலே 'ஸரிக - க - காமா' காலிலே தாளம், கைகள் கொட்டி முழங்கும். உடல் அபிநயம்தான், தேக மும் மனமும் அனுபவிக்கும் ஆனந்தத்தையும் சக்தியையும் கண்கள் வெளிக் காண்பிக்கும்'' இங்கே பாரதி, தாய்மொழியிலே பாட்டின்

பாவம் வெளிப்பட உள்ளமும் உடலும் குரலும் இயங்கி உணர்ச்சி தரும் பாடலினால் கேட்பவர்கள் உள்ளம் அவரது கருத்துக்களை ஏற்றுக் கொள்ளும் என்பது புலனாகின்றது.

நாதம் - தாளம் - பண் - குழல் பற்றி அவரின் கருத்துக்கள் குயில் பாட்டில் பின்வருமாறு பாடுகிறார்.

(1) நாதம் - நாதம் - நாதம்
நாதத்திற்கேயோர் நலிவுண்டானால்
சேதம் - சேதம் - சேதம்

(2) தாளம் - தாளம் - தாளம்
தாளத்திற் கோர் தடையுண்டானால்
கூளம் - கூளம் - கூளம்.

(3) பண்ணே - பண்ணே - பண்ணே
பண்ணிற் கேயோர் பழுதுண்டானால்
மண்ணே - மண்ணே - மண்ணே.

(4) குழலே குழலே குழலே
குழலிற் கீறல் கூடும் காலை
விழலே விழலே விழலே

சங்க இலக்கியங்களிலே காதல் வசப்பட்டு உருகும் இசையை யும் திருமுறைகளிலே இறைவனைப் போற்றி இசைப்பதாகவும் கண்ட இசையைப் பாரதியானவன் இயற்கை வனப்புகளிலே கண்டு தனது மனதைப் பறிகொடுத்துவிட்டான். இசையில் தன்னையே மறந்த சூழ்நிலையில் அவன்பாடும் பாடல்மூலம் அவனது உள்ளம் ஈர்க்கப்பட்டதை அவனது ''குயிலின் காதத் கதை'' யில் வரும் பகுதியை உற்றுநோக்குவோம்.

''கானப்பறவை கலகல எனும் ஓசையிலும்
காட்டுமரங்களிடைக் காட்டும் இசைகளிலும்
ஆற்றுநீரோசை அருவி ஒலியினிலும்
நீலப்பெருங்கடல் எந்நேரமுமேதான் இசைக்கும்
ஒலித்திடையே உதிக்கும் இசையினிலும்
மானுடப் பெண்கள் வளருமொரு காதலினால்
ஊனுருகப் பாடுவதில் ஊறிடும் தேன்வாரியிலும்
ஏற்ற நீர்ப்பாட்டின் இசையினிலும், நெல்லிடிக்கும்
சுண்ணமிடிப்பார் தம் சுவைமிகுந்த பண்களிலும்
வட்டமிட்டுப் பெண்கள் வளைகரங்கள் தாமொலிக்க
கொட்டி இசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்
வேயின் குழலோடு வீணைமுதலா மனிதர்

வாயினின்றும் கையினின்றும் வாசிக்கும் பல்கருவி
நாட்டினிலும் காட்டினிலும் நாளெல்லாம் நன்றொலிக்கும்
பாட்டினிலும் நெஞ்சைப் பறிகொடுத்தேன்''

பாரதி இங்கே இயற்கையிலே கண்ட இசைகள் எத்தனை? எத்தனை?

தமிழிசையை வளர்ப்பதற்காகச் சங்கங்கள் பல முன்வந்தன. பலர் ''தமிழிற் பாடல்கள் இல்லை. இசைவடிவங்கள் இல்லை'' என்று கைவிரித்துப் பிறமொழிப் பாடல்களைப் பாடும் வேளை, இசையை வளர்ப்பதற்குத் தமிழ்ப் பாடல்கள் வெளிவரத்தொடங்கியதைப் பாரதிதாசன் பொங்கி எழுந்து கூறும் பாடல்களில் ஒன்று. பாடல் இதோ—

''பல்லவிகள் கீர்த்தனங்கள் மற்றுமுள்ள
பல நுணுக்கம் இசையறிவு தெரிந்துள்ளாரின்
நல்லுதவி பெற்றுத்தான் தமிழிசைக்கு
நாம் ஏற்றம் தேடுவது முடியும் என்று
சொல்லுகிறார் சிலபுலிகள் அவர்க்கு நானும்
சொல்லுகிறேன் சுண்ணமிடிப்பார்கள் பாடும்
பலவகை இலேசான இசைகள் போதும்
பாரதியாரே போதும், தியாகர் வேண்டாம்''

இவ்வாறு பாரதியின் பாடல்களின் சிறப்பும், அவர் கூத்து பஜனைப் பாடல்கள், தெம்மாங்கு இசை, நாட்டுப்பாடல்கள் யாவும் அவரது சொந்தக் குரலிலேலே கேட்டு யாவரையும் பரவசமாக்கி அவர் காலத்திலேயே களிநடம் புரிந்து இசைக்கு மெருகூட்டியது எனலாம்.

ஆனால் பாடும் மீன்களின் இசையிலே வளர்ந்த சுவாமி விபுலானந்தர், சங்க இலக்கியங்களைக் கற்கப் புகுந்து சிலம்பிசையிலும் யாழிசையையும் பருகி, யாழ்ப்பாடி பரிசுபெற்ற நிலத்தையடைந்து (யாழ்ப்பாணம்), பின்பு யாழின் பிறப்பு - வகை - தோற்றம் - தொன்மை - இசைப்பிறப்பு முதலாம் ஆராய்ச்சியில் தனது வாழ்வின் நீண்ட காலத்தைப் பெற்று இந்தியாவிலே ''யாழ் நூல் எனும் நூலை அரங்கேற்றித் தன் இசையின்மீதுள்ள ஆசையை ஓரளவு பூர்த்தி செய்தார். இவரது இசைபற்றிய ஆராய்ச்சிகள் ''தமிழ்ப் பொழில்'', ''செந்தமிழ்'' பத்திரிகை மூலமும் வானொலிப் பேச்சுக்கள் மூலமும் பிரபல்யமாயின. இவரது யாழ் ஆராய்ச்சி சம்பந்தமான விரிவான கட்டுரையொன்று 1941 திசம்பரில், கல்கத்தாச் சர்வகலாசாலை 'றிவியு' (REVIEW) இல் பிரசுரமானதாக அவர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இக்கட்டுரையைப் பெற்றுத்தர ஆய்வாளர்கள் முன்வரவேண்டும்.

''யாழ் நூல்'' எனும் இசையாராய்ச்சி நூலானது 1947ஆம் ஆண்டு ஆடி மாதம் 20ஆம் 21ஆம் திகதிகளில் கரந்தைத் தமிழ்ச் சங்க ஆதரவில் திருக்கொள்ளம் புத்தூரில் அரங்கேறியது. சங்க இலக்கியங்களை ஆதாரமாக்கி யாழின் வரலாற்று ரீதியான உண்மைகளையும் ஆறுவகையாழின் அமைப்புகளையும் காட்டி, ஏழு பிரிவுகளையுடைய நூலாக வெளிவந்தது. யாழ் நூலில் ஏழுசுரங்களின் பிறப்பைக் குறிப்பிடும் விபுலாநந்தர் தனது 'நீரரமகளிர்'' என்ற கவியாக்கத்தில் சங்க கலாச் சப்தசுரப் பிறப்பின் முறையைக் கூறிச் சங்ககாலக் கவிக்கு ஒப்பாகின்றார். மட்டக்களப்பு நீர் நிலையினுள் திகழ்ந்த அதிசயத்தைத் ''தண்ணளியே செங்கோலாய்...'' என்று தொடங்கும் பாடலில் வரும் ''..இசைநூற் பொருளுணர்ந்தேன் என்று கூறும் இடம் நோக்கற்பாலது

அங்கு இனியநாதம் தோன்றும் சூழ்நிலையைப் பின்வருமாறு கூறுகின்றார்.

> ''தேனிலவும் மலர்ப்பொழிலிற் சிறைவண்டு துயிலச்
> செழுந்தரங்கத் தீம்புனலுள் நந்தினங்கள் துயில
> மீனலவன் செலவின்றி வெண்ணிலவிற் றுயில
> விளங்கு மட்டுநீர் நிலையுளெழுந்த தொருநாதம்''

இவ்வாறு தோன்றும் நீர்நிலையின் இசையானது உலகிலே கலிபோர்ணியாவிலே கடற்கரைப் பகுதியிலேயே தோன்றும் இசைக்கு ஒத்தது என்று பிறிதோர் இடத்தில் தனது வானொலிப் பேச்சில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த மட்டுநகர் நீர்நிலையுள் அவ்வாறு பிறந்த இனிய நாதமானது யாழ் நரம்புகளிற் பிறக்கும் நாதத்திற்கு ஒப்பானது என்று தனது யாழாராய்ச்சியில் கண்ட உண்மையைக் கூறும் அழகைப் பார்ப்போம்.

''ஐந்தாம் நரம்பின் அமைதியினை நானறிந்தேன்'' என்று கூறிச் சட்சக்கிரம முறையில் சப்தஸ்வரங்கள் உண்டாகும் முறையைப் பின்வருமாறு கூறுகின்றார். இது பழந்தமிழ்ப் பாடலின் வெளிப்பாடாகும். விபுலானந்தர் பாடலில் கூறும் வரிகள் இதோ

> ''காந்தாரத்தைந்தாய்க் கனிந்த நிஷாதமெழும்
> செய்ய நிஷாதத் தெழுஞ்சுரத்தின் பஞ்சமமே
> வையம் புகழுகின்ற மத்திமமாம், மத்திமத்திற்கு
> அஞ்சாம் சுரமாம் அணிசட்சம், சட்ஜத்தின்
> பஞ்சமமே பஞ்சமமாம், மண்ணும் ரிடபமதற்கு
> அஞ்சாம் சுரமே அடையும், அணி ரிடபத்
> தெஞ்சாத பஞ்சமமாய் எய்திநிற்கும் தைவதமே,
> தைவதத்திற்கு ஐந்தாய்த் தனித்த காந்தாரம் எழும்
> இவ்வாறே ஏழாகி...''

பாடலில் இவ்வாறே சப்தசுரங்களின் தமிழ்ப் பெயர்கள் முறையே கிளை, தாரம், உழை, இனி, குரல், துத்தம், விளரி எனக் கூறும் வரிகள் தொடருகின்றன. இவையாவும் இசையின் ஆராய்ச்சியின் பயனாய்க் கிடைத்த முடிவுகளே என்பதில் ஐயமில்லை.

இவர்போலப் பாரதி எழுதிய ''சங்கீத விஷயம், தாளஞானம், ஆர்மோனியம், தம்பூர், வீணை, அபிநயம்'' பற்றிய விடயங்கள் 'பாரதியின் கட்டுரைகள்' என்ற பாரதி பதிப்பகத்தாரின் புத்தகத்தில் விளக்கமாக எழுதப்பட்டிருக்கின்றது. இக்கட்டுரையிலிருந்து பாரதியின் சாஸ்திர இசையறிவையும் எத்தகைய மேன்மையானது என்பது தெளிவாகின்றது. அர்த்தம் தெரியாமல் பிறமொழிப் பாடல்களைப் பாடுவோரைக் குறைகூறித் தமிழிலே பாடினால் எவ்வளவு சிறப்பாகும் எனத் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.

## 5. சமயத்துறை

பாரதியாரும் விபுலானந்தரும் சமயத்தில் ஆழ்ந்த நம்பிக்கையுடையவர்கள். தன்னையே சமய நெறியில் அர்ப்பணித்துச் சமயத்தை வளர்ப்பதே தமிழ்ப்பணியாகவும், தமிழை வளர்ப்பதே சமயப்பணியாகவும் கொண்டு துறவற வாழ்க்கையில் ''சுவாமி விபுலானந்தா' எனும் பெயர் கொண்டார். மயில்வாகனன் எனும் பிள்ளைத் திருநாமத்துடன் ஆசிரியராகப் பணியாற்றியவர், முப்பதாவது வயதில் சென்னை இராமகிருஷ்ண மடத்தில் சென்று 'பிரபோத சைதன்யர்' எனும் பிரமச்சாரிய நிலையையும் 32 ஆவது வயதில் சுவாமி சிவானந்தரினால் காவி அணிவித்துத் துறவறத்தை மேற்கொண்டு சுவாமி விபுலானந்தா எனும் பெயருடன் பணியாற்றினார். இவர் இராமகிருஷ்ண மடாலயச் சார்பில் இலங்கையில் முகாமையாளராக இருந்து பாடசாலைகள் பல நிறுவியும் சமயப்பணிகளைத் தொடர்ந்தார். சிற்றன்னை வள்ளியம்மையின் திருமணத்தின் பின்பு பூணூல் பூண்ட பாரதியாரோ இல்லற வாழ்வில் திளைத்தவர். தனது குல ஆசாரப்படி பின்பு பூணூல் தரியாது, பூசைகள் செய்யாது, குடுமி வைக்காது. மாறாக மூட நம்பிக்கைகளை உடைத்து, தானே முன்னோடியாக வாழ்ந்து காட்டி, இயற்கையிலும், உயிர்களிலும் அன்பு கொண்டு இறையுருவத்தைக் கண்டார். சக்தி உபாசகனாக ''யாதுமாகி நின்றாய்'' என்றும் ''மாதா பராசக்தி வையமெல்லாம் நீ நிறைந்தாய்'' என்றும் சக்தியை வழிபட்டான். கண்ணனாக, கண்ணம்மாவாகக் குழந்தை வடிவில் தெய்வத்தைக் கண்டு களித்தான்.

விபுலானந்தர் வாழ்விலும், பாரதியார் வாழ்விலும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு சுவாமி ஒருவரின் சந்திப்பும், அபிமானமும் இடம் பெற்றிருக்கின்றன. விபுலானந்தர் வாழ்விலே 1917 ஆம்

ஆண்டு ஆசிரியராய்ச் சென்று பற்றிக் கல்லூரியில் பணியாற்றிய போது யாழ்பாணத்துக் கொழும்புத்துறை யோகர் சுவாமிகளின் அருட்பார்வையின் பின்னரே ஆத்மீகப் பாதையிலே அவர் மனம் நாடத்தொடங்கியது. ஆனால் பாரதியாரோ சுவாமி விவேகானந்தரின் பிரதான சிடர்களில் ஒருவரான ''நிவேதிதா'' தேவியின் அருட் பார்வையினால் அவரைக் குருவாக மதித்தாலும் யாழ்பாபாணத்துச் சுவாமி ஒருவரின் அன்புப் பிடியில் சிக்கியிருந்தார் என்பது அவரது பாடல்கள் மூலம் காட்டுகிறது.

''குவலயத்தில் விழி போன்ற யாழ்பாணத்தான்'' என்று பாடலில் கூறிய பாரதி, புதுவையில் அவரைச் சந்தித்ததாகவும்,

''யாழ்ப்பாணத்திசன் தன்னைச் சரணடைந்தால், அதுகண்டீர் சர்வசித்தி'' என்று கூறுவதன் மூலம் தான் சரணடைந்ததையும்,

''செகத்தினிலோர் உவமையில்லா யாழ்ப்பாணத்துச்சாமிதலைச சிவன் என்றன் மனைக் கொணர்ந்தான்'' ''அகத்தினிலே அவன் பாத மலரைப் பூண்டேன் அன்றேயப்போதே வீடதுவே வீடு'' என்று குறிப்பிடுவதன் மூலம் குரு வழிப்பாட்டையும் பற்றி நிற்பது தெரிகின்றது. குவளைக் கிருஷ்ணன் கோயிலான பார்த்த சாரதி கோவிலுக்குச் சென்று வணங்குவதும் பல்லக்கு தினமும் தூக்குவதும் இவரது தெய்வ பக்தியையே காட்டுகிறது.

சுவாமி விபுலானந்தரின் இறைவழிப்பாட்டிலே, வாழ்க்கையின் நோக்கமானது இறைவழிப்பாட்டையும், அந்த இறைவன் எம்மிடம் எதிர்பார்த்து நிற்பது எமது உள்ளமாகிய தாமரையையும், கூப்பிய கைகளையும், நாட்ட விழிகளையுடைய மூன்றையுமேஎன ''வெள்ளைநிற மல்லிகையோ.... என்று தொடங்கும் பாடல்களில் வருகின்றது. தனது வாழ்க்கையில் பழமையைத் தேடிச் செழுமையைத் தேடினார் விபுலானந்தர். அதுவே அவரது வெற்றியின் இரகசியம் எனலாம்.

பாரதியானவன் அரசியலில் நேரடியாக ஈடுபட்டவன். அவனது பாரத நாடு அடிமையப்படுத்தப்பட்டதைக் கண்டு அதன் விடுதலைக்காகச் சத்தியாக்கிரகம், ஒத்துழையாமை இயக்கம், அந்நிய பொருட்களைப் பகிஷ்கரித்தல் முதலிய நடவடிக்கைகளில் தீவிரமாகச் செயற்பட்டவன். அப்போது பாரதியைப் பொறுத்தவரையிலே ''பாரத நாடு'' தெய்வமெனக் கருதிச் செயற்பட்டான். 1907 இல் ''பால பாரத சங்காத்'' என்ற அமைப்பில் வரும் பிரசுடனவரிகள் பின்வருமாறு.

''கடவுள் அவதாரத்தின் பெயர் சுதேசியம்''
அவருடைய ஆயுதம் அந்நிய பகிஷ்காரம்
அவருடைய மந்திரம் வந்தே மாதரம்''

மேலேயுள்ள வரிகள் தேசபக்தியின் உச்சக் கட்டத்தையும், மறுபுறம் இந்தியாவை, தெய்வமென மதிக்கும் - வழிபடும் முறையையே காட்டுகிறது. ''என்று தணியும் இந்த சுதந்திர தாகம்'' ........ ''........ என்றெமதன்னை விலங்குகள் போகும்'' எனவும் வீறு கொண்ட பாரதியா ''சுதந்திரப் பெருமை'' என்ற தலைப்பில் வரும் ''வீர சுதந்திரம்......'' என்ற பாடலில் வரும் வரியொன்றில் வணங்குதல் பற்றிக் கூறுகின்றார். ''வந்தே மாதரம் என்று வணங்கியபின் மாயத்தை வணங்குவாரோ''
சமயத்தின் நோக்கம் தன்னை முழுமையாக அர்ப்பணித்தல் தானே.

இங்கே நாட்டுக்காக, நாட்டின் விடுதலைக்காகத் தன்னை அர்ப்பணித்த பாரதியைப்போல, தனது வாழ்க்கையைச் சமயத்துக்காகவும் தமிழ்மொழியின் வளர்ச்சிகாகவும் சுவாமி விபுலானந்தர் தன்னை அர்ப்பணித்தார்.

பொதுமைப் பாடான கருத்துக்கள்.

பாரதியின் பல கருத்துக்கள் பொதுவான கருத்துக்களே அவற்றுட் சில பின்வருமாறு:-

(1) ''இனி ஒரு விதி செய்வோம் அதை எந்நாளும் காப்போம் தனியொருவனுக்குணவில்லையெனில் செகத்தினை அழித்திடுவோம்''

(2) ''இல்லை என்ற கொடுமை உலகில் இல்லையாக வைப்பேன்''

(3) ''பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்''

(4) ''பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்''

(5) ''சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே — அதைத்
தொழுது படித்திடடி பாப்பா''

''தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்'' என்ற பாரதியானவன் தமிழில் நூல்கள் படைக்கப்பட வேண்டும் என்று கூறி முழங்கியதை ஆமோதிப்பதுபோல் செயலளவில் அதைச் செய்தவர் 'விபுலானந்தர்'.

இவர் உடல்நூல், கணிதம், மருத்துவம் போன்ற மேல்நாட்டு விஞ்ஞான நூல்களை மொழிபெயர்ப்பதற்காக உரிய விஞ்ஞானக் கலைச் சொல்லாக்கத்தை 'அகராதி'யாக வெளியிடத் தலைவராக இருந்து 1934இல் சென்னைப்பச்சையப்பன் கல்லூரியில் பணிசெய்தார்.

சங்க இலக்கியங்கள் மூலம் யாழின் பிறப்பு - தோற்றம் - வளர்ச்சியைக் கண்டு ''யாழ் நூல்'' என்ற நூலையும், 'மதங்கசூளாமணி' என்ற ஆங்கில நூலின் நாடகத்தைத் தமிழ் மரபுக்கமைய நாடக நூலாகவும் தந்து செந்தமிழை வளர்த்த செம்மலாகப் போற்றப் படுகின்றார்.

இவ்வாறு பொதுமைக் கருத்துக்களைக் கொண்டு வாழ்ந்த இவர்களின் எண்ணங்கள் ஈடேறியதா? ஆம் என்கிறார் கவியோகி சுத்தானந்த பாரதியார். அவர் தனது பாடலில் கூறும் பாரதியின் எண்ணங்களைக் கனியாக்கி விட்டுள்ளார். பாடல் இதோ

''பூரணமான சுதந்திரம் பெற்றோம்
புதுயுக மனிதராய்ப் பொலிந்தோம்
தாரணி முற்றும் சாநிகர் ஆனோம்
தலைநிமிர்ந் தாண்பெண் நடந்தோம்
ஆரமுதனைய கலைவளஞ் செழித்தோம்
அச்சமாம் பேயினை ஒழித்தோம்
பாரதிவீரக் கனிரச விருந்தாம்
பாமணம் பரவிய நாளே''

இவ்வாறே விபுலானந்தர் எண்ணிய வடக்குக் கிழக்கு மாகாணத் தமிழருக்கான பல்கலைக் கழகங்கள் செயற்படத்தொடங்கி விட்டன. நுண்கலைகளைப் பல்கலைக்கழக மட்டத்திலே வளர்க்கும் பணி தொடங்கிவிட்டது.

சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்'' என்று கூறிய பாரதி ''தமிழ்பேசும் மக்கள் கலாச்சாரத்தால், இனத்தால் ஒன்றாவார்கள், பிரிந்தால் பலம் இழந்து விடுவார்கள்'' என்ற எண்ணத்தை ஈடுசெய்ய ஆறுமுகநாவலர், ஈழத்துப் பூதத்தேவனார் முதல் சுவாமி விபுலானந்தரும் தமிழுய்ய அன்புப் பாலத்தைக் கட்டி இலங்கையையும் இந்தியத் தமிழ் நாட்டையும் இணைத்து விட்டனர். ''உலகம் தீவிரமாக மாறிவருகிறது. கிணற்றுத்தவளைகளாக நாம் வாழக்கூடாது. பலதேசக் கல்வியையும் நாம் கற்கவேண்டும். வர்த்தகர்கள், கல்விமான்கள், இராசதந்திரிகள், கைத்தொழிலாளர்கள் யாவரும், வெளிஉலகிற்குச் செல்வதால் மிகுந்த பலன் அடையலாம். பிரான்சு தேசத்திற்குச் சென்ற இந்தியாவைச் சேர்ந்த ''இநாயத்கான்'' என்ற சங்கீத விற்பன்னர் நல்லமதிப்புடன் இந்திய சங்கீதத்தைப் பரப்புகின்றான் இவ்வாறே எமது திறமையை அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் பரவச்செய்ய வேண்டும்.'' என்று பாரதி வருங்காளம் என்ற கட்டுரையில் எழுதி எம்மை வியப்பில் ஆழ்த்துகின்றார்.

## 7. முடிவுரை.

பாரதியானவன் பாலகவியாகப் ''பாரதி'' என்ற பட்டத்தைப் பெறும்போது, விபுலானந்தருக்கு வயது ஒன்று கூட ஆகவில்லை. ஆனால் பாரதியின் 39 வது வயதிலே இறக்கும் போது விபுலானந்தருக்கு வயது 29 மட்டுமே. அப்போது விபுலானந்தர் பிள்ளைத்திருநாமத்துடன் ஆசிரியப்பணியில் இருந்தார். பாரதி இறந்த பின்னர் 27 வருடங்கள் தமிழ்ப் பணியாற்ற விபுலானந்தருக்குக் காலம் இருந்தது. காலத்தால் இருவரும் ஒருவரையொருவர் சந்திக்காவிடினும் பாரதி இறந்து 10 வருடங்களின் பின்னர் பாரதியின் பாடல்களை மதித்து 1931இல் இசையமைப்பித்துப் பாரதி சங்கத்தின் மூலம் பாடுவித்ததன்மூலம், விபுலானந்தர் தனது பாரதிமேல் கொண்ட மதிப்பைக் கூட்டியுள்ளார் என்றே சொல்ல வேண்டும். நேரில் சந்தித்தால் சொல்லவும் வேண்டுமா.

பாரதி இறுதிக் காலத்தில் சிறீ அரவிந்தர் நூல்களை ஆராய்ந்து அதன் நிலைகளைக் காணும் அமரநிலை - தேவசீவனம் - கிருதயுகம் இவற்றைப் பற்றியே பேசியுள்ளார். செட்டிநாட்டரசர் அன்பளிப்பாகக் கொடுத்த மணிபதித்த ஊற்றுப்பேனாவை, தினமும் மலரும் கனியும் தரும் நண்பரான நாராயணசாமிப் பிள்ளைக்குக் கொடுத்தார். 1921இல் பார்த்த சாரதியைத் தரிசனம் செய்து கொண்டிருந்த போது, யானையின் மதத்தைக் கண்டு மக்கள் அஞ்சினர். தினமும் கனிகொடுக்கும் யானைக்கு அன்றும் கனியைக் கொடுக்க யானையை நெருங்கினார் இது கண்டு மக்கள் ஆரவாரித்தனர். யானை மிரண்டது பாரதியாரைத் தூக்கித்தனது கால்களுக்கு நடுவே போட்டு விட்டது. கோவில் வேலைபார்க்கும் குவளைக் கிருஷ்ணன் என்பார் ஒருவாறு பாரதியின் உடலைத் தூக்கிவந்து காப்பாற்றினார். இது நடந்த யூலை மாதம்முதல் செப்டம்பர் மாதம் வரையில் பாரதியார் வைத்திய சிகிச்சைக்குட்பட்டிருந்தார்.

''நம்மிடம் உள்ள அன்பினால் அல்லவா யானை நசுக்கவில்லை'' என்று சொன்ன பாரதி 1921 செப்டம்பரில் குணமானார். ஆனால் செப்டம்பர் 12ஆம் திகதி வயிற்றுக் கடுப்பு நோயால் அதிகாலை புகழுடம்பு எய்தினார்.

சுவாமி விபுலானந்தர் யாழ் நூல் அரங்கேற்றத்தை 1947-6-20 21இல் நிறைவேற்றிய பின்னர் அடுத்த சில நாட்களில் நோய் வாய்ப்பட்டார் மருத்துவ சிகிச்சையின் பின்பும் நோய் மாறாததால் பாரதத்தினின்றும் கொழும்பு வந்து தனியார் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றார். இருந்தும் 1947-7-19 ஆம் திகதி புகழுடம்பு எய்தினார். இவரது உடல் முழு வணக்கத்துடன் கல்லடி சிவானந்தா வித்தியாசாலையில் சமாதி வைக்கப்பட்டுள்ளது.

இவ்விருவரும் வாழ்ந்த இரு தேசங்களும் நூறாண்டு விழாக் களை பாரதியாருக்குக் கொண்டாடின விபுலானந்தர் நூற்றாண்டு விழாவை வருகிற வருடம் 1992இல் கொண்டாடி இன்புறவேண்டும். பாரதிக்குப் பாரத அரசு முத்திரை வெளியிட்டு வணக்கத்தைத் தெரி வித்தது. பாரதியின் அஞ்சல்தலை 1960-09-11இல் வெளியானது. இவ்வாறே பாரதியின் நூற்றாண்டுவிழாக் கட்டடம் புதுவையில் திறந்துவைக்கப்பட்டுள்ளது. விபுலானந்தர் நினைவாக இசைக் கல் லூரியை ஆரம்பித்து இலங்கை அரசு கௌரவித்துள்ளது.

இவ்வாறு அரசும் மக்களும் போற்ற இவ்விருவரும் நம்மி டையே வாழ்ந்து புகழ்பூத்த புருஷர்களாகத் திகழ்கின்றார்கள். இவர்களில் தமிழின் தொன்மையை ஆராய்ந்து தெய்வீகத்தைக் கண்டவர் விபுலானந்த அடிகளார். தமிழன்னையின் விலங்கொடிக்க சமுதாயப் புரட்சி செய்து வெற்றி கண்டார் பாரதி. புதுக்கவிதை பாடிப் புரட்சி செய்த பாரதியும், மரபுக்கவி, பாடி மணம்பரப்பிய விபுலானந்தரும் தமிழ் வாழவே பணியாற்றினர். எனவே தமிழை வாழிய செந்தமிழ்' என வாழ்த்தித் தமிழையும், தமிழ் நாட்டை யும், தமிழ்ச் சமுதாயத்தையும் தனது மழலைத் தமிழ்த்திறத்தால் நறு மணத்தையும் உத்வேகத்தையும் கூட்டியவர் பாரதி எனவும், சங்க நூல்களை ஆராய்ந்து மரபுத்தமிழைப் போற்றுவதிலும் பரப்புவ திலும் தெய்வீகத்தை நிலைநாட்டியவர் விபுலானந்தர் எனவும் கொள்ளலாம்.

இல்லறத்தில் திளைத்த பாரதிக்குத் தமிழ் மழலையானது. துற வறத்தை மேற்கொண்ட விபுலானந்தருக்கோ தமிழ் மரபு வழி நின்றது. சங்கப்புலவனாகச் சுவாமி விபுலானந்தரையும், புதுமைப் புலவனாகப் பாரதியையும் இனங்கண்டு, எம்மிடையே வாழவைத்த தமிழன்னையின் அடிபணிந்து இவ்விருவரையும் வாழ்த்துவோம். போற்றுவோம். புகழ் சாற்றுவோம்.

'கீழ்த்திசைச் சூரியன் விபுலானந்தன்
ஆழ்த் தமிழ்க் கடலின் அமிர்தம்தந்து
யாழ் இசைப் பிறப்பின் நாதம் பரப்பித்
தாழ் சடையாணடி தலைப் பட்டாரே' எனவும்

'இனிக்கும் அரிய மெய்ப் பொருளின்
அகம் புறம் ஏழும் கற்றுணர்ந்த
முனிவன் சொன்ன மூதுரைகள்
சொற் சோராத் தன்மை கொண்டனவே
கனியமுதாம் சுவை அறவிருந்தே
நன்னெறிக்குரிய பெருவிருந்து
பனித்துளி போல் அவன் வாழ்க்கையில் நாம்
விழித்தே துயில்வோம் பிறவியிலே' எனவும் விபுலா னந்தரையும்,

'சீர்திருத்தம் பேசித் தீண்டாமை வேர்தலைத்துத்
தேச விடுதலைக்மாய் வாழ்க்கை அர்ப்பணித்து
நேர்மைத்திறம்பாடி நெஞ்சில் துணிவு கொண்டு
'பாஞ்சாலிசபதம் போல் பெண்ணின் பெருமைசாற்றிப்
'பாரினில் புதுமைசெய்' வேதங்கள் செய்துமே'
'தெய்வம் நீ என்றுணர்' என்றவன் பாரதி
போர்த் தொழில் பழகியே மானத்தைக் காத்திட
'புதிய ஆத்திசூடி' அவன் வழி காட்டுமே.

எனப் பாரதியையும் வாழ்த்திச் சிந்தை நிறைவு செய்வோமாக.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்!!

— சுபம் —

---

## உசாத்துணை நூல்கள்


1. கவிக்குயில் பாரதியார் (வரலாறும் வாக்கமுதும்) — கவியோகி சுத்தானந்த பாரதியார்)
2. புதிய ஆத்திசூடி — பாரதியார்
3. பாரதியார் கவிதைகள் — பாரதியார்
4. பாரதியார் கட்டுரைகள் — பாரதியார் (பாரதி பதிப்பக வெளியீடு)
5. கடிதம் — பாரதியரால் நெல்லையப்பருக்கு எழுதியது
6. வருங்காலம் — பாரதியார் கட்டுரை
7. 20ஆம் நூற்றாண்டு இணையற்ற கவிஞன் — டாக்டர் அலெக்சாந்தர் M. துபியான்ஸ்கு (ஈழநாடு நாளிதழ் 11 - 12 - 85)
8. ''இந்துநதி — 1989'' கிழக்குப் பல்கலைக்கழக இந்துமன்ற வெளியீடு
9. விபுலாநந்தக் கவிமலர்கள் — அருள் செல்வநாயகம்
10. விபுலானந்தர் உள்ளம் — S. அம்பிகைபாகன்
11. ''பண்டைத் தமிழ் இசைக் கருவிகள்'' — வானொலிப் பேச்சு விபுலானந்தர்
12. கலைக்களஞ்சியம்
13. ''எது இசை'' பாரதிதாசன்

# விபுலாநந்த அடிகள்

செல்வி தயாபரி கணேசலிங்கம்
(ஸ்ரீ சண்முக வித்தியாலயம், திருகோணமலை)

(விபுலாநந்தர் நூற்றாண்டுக்காகக் கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்திய நாவன்மை இடைநிலைத் தேர்வில் முல்லைத்தீவு ஆ. கனக சபாபதி முதலியார் முதற் பரிசில் பெற்றது)

ஈழங்கண்ட பெரியதுறவி. தமிழகம் போற்றும் பேரறிஞர். உலகம் போற்றும் முத்தமிழ் வித்தகர். அவையடங்க உரையாற்றும் நாவலர் - பாவாணரும் போற்றும் பாவலர். சாந்தமே உருவானவர். இரக்கமே இதயமானவர். இவரே சுவாமி விபுலாநந்த அடிகள் ஆவார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலே காரையம்பதியிலே கற்பின் சனலாம் கண்ணம்மைக்கும் சன்மார்க்க சீலராம் சாமித்தம்பிக்கும் புத்திரராய் ஆயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்று இரண்டாம் ஆண்டு பங்குனித் திங்கள் இருபத்து ஒன்பதாம் நாள் சூரியோதய வேளையிலே அவதரித்தார். பால் மணம் மாறாப் பாலகப் பருவத்திலே அடிகளிடம் தமிழ்மணம் கமழ்ந்தது. வடமொழி, ஆங்கிலம் தமிழ் ஆகிய மும்மொழிகளிலும் சிறந்த ஆற்றல் பெற்று முத்தமிழ் வித்தகராக விளங்கினார். அன்னாரின் விடாமுயற்சி காரணமாக மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் பரீட்சை, விஞ்ஞான டிப்ளோமா பரீட்சை ஆகியவற்றிலும் சித்தி எய்தினார். ஆயிரத்துத் தொளாயிரத்து இருபதாம் ஆண்டு இலண்டன் விஞ்ஞானப் பட்டதாரியானார். மானிப்பாய் இந்துக்கல்லூரியில் அதிபர் பதவியை ஏற்றார்.

காலப்போக்கில் துறவு நாட்டங்கொண்ட தூயோன் பதவியைத் துறந்தார். சென்னைக்குச் சென்றார். பிரபோதசைதன்யர் என்ற பெயரையும் பெற்றார். சமயதத்துவங்கள், மொழி, தமிழிசை என்பவற்றில் ஆராய்ச்சிகள் செய்தார். இராமகிருஷ்ண விஜயம், வேதாந்த கேசரி, பிரபுத்தபாரத ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியராகவும் பணியாற்றினார். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்து நான்காம் ஆண்டு முழுத் துறவியானார். காவியுடை தரித்தார். விபுலாநந்த அடிகள் என்ற பெயரையும் பெற்றார்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்தோராம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழக பேராசிரியர் ஆனார். இவருடைய சேவையை

இலங்கை மக்கள்நாடினர். அவர்களுடைய வேண்டுகோட்படி ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்து மூன்றாம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் ஆனார். தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் ஈழத்திலுள்ள தமிழ்ச் சிறாரின் கல்வி முன்னேற்றத்திற்கும் விபுலாநந்த அடிகள் செய்த தொண்டுகள் அளப்பரியன. சாரதா வித்தியாலயம், சிவானந்தா வித்தியாலயம், திருகோணமலையிலுள்ள இந்துக்கல்லூரி, ஸ்ரீ கோணேசுவர வித்தியாலயம் போன்றன அன்னாரின் பெரும் பணிக்கு இன்றும் நின்று சான்று பகர்கின்றன.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலில் தோன்றாமை நன்று'' என்ற பொய்யா மொழியின் வாக்கிற்கு உதாரண புருடனாக வாழ்ந்த அடிகளாரின் புகழுக்குக் கல்வித் திறமையும், அறிவுத் தெளிவும், துறவின் மகிமையும் உள்ளத்தின் உறுதியும், யாழ் நூலும் மட்டுமல்ல, அவற்றிற்கு இணையாக அவர் புரிந்த ஆசிரியர்ப் பணியும், பேராசிரியர்ப் பணியும் கூடக் காரணமாகின்றன. கல்வித் திறமையால் தமிழ் நாட்டில், ஏன்? உலகத்திலேயே முதலாவது தமிழ்ப் பேராசிரியர் என்னும் சிறப்பினைப் பெற்றார் என்றால் அதை யாரும் மறுக்க முடியாது. இவ்வடிகளாரைத் தமிழ்கூறும் நல்லுலகம் மட்டுமல்ல, உலகமே புகழ்மாலை சூட்டுகிறது என்றால் அன்னாரின் பெருமையை என்னவென்பது.

காலநீரோட்டத்திலே கலங்காது முன்னின்று நாட்டுக்காக உழைத்த உத்தமர் ஓர் இலக்கியவாதியாக, இசைத் தென்றலாக, கவிபாடும் குயிலாக, மக்கள் மனதில் என்றும் அழியாத கலைக்கூடமாக, பேராசிரியராக, பத்திரிகை ஆசிரியராக, அதுவும் பிற்காலத்தில் ஓர் துறவியாகத் திகழ்ந்த அடிகளார் ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதினெட்டாம் ஆண்டு முதலாம் உலகமகா யுத்தத்தின்போது ஓர் போர்வீரனாகவும் இருந்திருக்கிறார் என்று சரித்திரங்கள் கூறுகின்றன. அன்னாரின் இந்நிகழ்வு நெஞ்சுறுதிக்கும், நாட்டுப்பற்றுக்கும் சான்றாக அமைகின்றது.

இவர் இயற்றிய யாழ் நூல், மதங்கசூளாமணி என்பவற்றுள் யாழ்நூல் பழந்தமிழ் இசைக்கலை நுட்பங்களை ஆராய்ச்சி முறையாக விரித்து விளக்கும் ஒரு பெருநூல். சிலப்பதிகாரத்திலே தலைமயங்கிச் சிதறிப் பரந்துகிடந்த பழந்தமிழ் இசைமரபுகளையெல்லாம் ஒரு வழிப்படுத்தி நிழல்பட நிறுத்தி விளக்குகின்ற இந்நூல் பண்டைத் தமிழரின் இசைக் கருவிகளாகிய வில்யாழ், பேரியாழ், மகரயாழ், செங்கோட்டியாழ். சகோடயாழ் என்பவற்றுள் மூன்னைய நான்கினையும் பொதுவாகவும் சகோடயாழைச் சிறப்பாகவும் விரித்துக் கூறுவதால் யாழ்நூல் என்னும் பெயரைப் பெற்றது.

நெஞ்சிலே உரமும் நேர்மைத் திறமும் மிக்க அடிகளார் கீழைத்தேய நாடக முறைகளை மேலைத்தேய நாடக முறைகளுடன்

ஒப்புநோக்கி எழுதிய மதங்கசூளாமணி என்னும் நூல் நாடக இலக்கண நூல்களில் நாகரத்தின மகுடம் போன்றது. நவரத்தின ஒளி வீசும் அற்புதப் படைப்பு. நாடகத் தமிழில் கற்பனைக்கு எட்டாத ஆய்வுகளை மதங்க சூளாமணியில் தந்து நம்மை அதிசயிக்கவைக்கிறார். மதங்கன் என்பது நாடக ஆசிரியர் எனவும் சிரோரத்தினம் எனவும் பொருள்தரும். இது ஆங்கில நாடக ஆசிரியர் ஆகிய ஷேக்ஸ்பியரைக் குறிக்கும். இந்நூலில் தமிழ்மொழி, வடமொழி, ஆங்கில நாடக அமைப்பை ஒப்பநோக்கிக் கண்ட முடிவுகளை அடிகளார் ஒருங்கே அமைத்துக் காட்டுகிறார். இந்நூலில் சீசர் கூறுவதாக வரும் பாடல் ஒன்று எனக்கு ஞாபகம் வருகிறது.

அஞ்சினர்க்குச் சதமரணம் அஞ்சாத நெஞ்சத்து
ஆடவனுக்கொரு மரணம் அவனிமிசை பிறந்தோர்
துஞ்சுவர் என்றறிந்தும் சாதலுக்கு நடுங்கும்
துன்மதி மூடரைக்கண்டால் புன்னகை செய்பவன் யான்''

என்ற பாடல் அன்னாரின் ஆண்மைக்கு அரியதோர் சான்று. அடிகளார் தமிழுக்கு ஆற்றிய தொண்டுகள் அனைத்திலும் சாலச்சிறந்ததும் காலத்தால் அழியாததும் அவர் இயற்றிய யாழ்நூலாகும். பழந்தமிழ் நூற்குறிப்புக்களை வைத்துப் பதினான்கு ஆண்டுகள் அயராது உழைத்து பண்டைத் தமிழரின் இசைக்கலையை மீளக் கண்டுபிடித்த அன்னார்,

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வத்துள் ஒருவரானார்''

# விபுலாநந்த அடிகளாரும் தமிழும்

செல்வி பாஸ்கரசிங்கம் இரஞ்சினி
(உவர்மலைத் தமிழ் மகாவித்தியாலயம் திரிகோணமலை)

(அடிகளார் நூற்றாண்டுக்காகக் கொழும்பு தமிழ்ச் சங்கம் நடாத்திய நாவன்மை உயர்நிலைத் தேர்வில் சங்கப் புரவலர் க. மதியாபரணம் நினைவு முதற் பரிசில் பெற்றது)

ஈழங் கண்ட பெரிய துறவி, தமிழகங் கண்ட பேரறிஞர், உலகம் போற்றும் முத்தமிழ் வித்தகர். அவையடங்க உரையாற்றும் நாவலர். பாவாணரும் போற்றும் பாவலர். சாந்தமே உருவானவர், இரக்கமே இதயமானவர் இவரே சுவாமி விபுலானந்த அடிகள்.

அடிகளார் 1892ஆம் ஆண்டு பங்குனி மாதம் 29ஆம் திகதி மட்டக்களப்பில் உள்ள காரைதீவிலே அவதரித்தார். அவர் இளம் வயதிலேயே சகல கலைகளையும் கற்றுப் பாண்டித்தியம் பெற்று விளங்கினார். அடிகளார் உயர் கல்வி கற்றப் புனித மைக்கேல் கல்லூரியில் இரண்டு ஆண்டுகள் ஆசிரியராகக் கடமையாற்றிக் கல்லூரிச்குப்பெரும் புகழை ஈட்டித் தந்தார். அடிகளார் தமது 25ஆவது வயதில் யாழ்ப்பாணத்துச் சம்பத்திரிசியார் கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராகக் கடமையாற்றும் போது இலண்டன் பல்கலைக்கழக விஞ்ஞானப் பட்டதாரியானார். அடிகளார் 1920ஆம் ஆண்டு மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு அதிபராகக் கடமையாற்றிக் கல்லூரிக்கு அளப்பரிய சேவையாற்றினார். வேதாந்த சேகரியென்ற பத்திரிகைக்கும் பிரபுத்தபாரத என்ற ஆங்கில சஞ்சிகைக்கும் ஆசிரியராகக் கடமையாற்றித் தமிழ்மொழியின் சிறப்பை உலகிற்கு விரித்துரைத்தார். தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும் ஈழத்தில் உள்ள தமிழ்ச் சிறாரின் கல்வி முன்னேற்றத்திற்கும் அடிகளார் செய்த தொண்டுகளோ அளப்பரிய. மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சாரதா வித்தியாலயம், திருகோணமலையில் உள்ள இந்துக் கல்லூரியும், அடிகளாரின் அரும் பெரும் முயற்சியினால் உருவானவையே.

சுவாமி விபுலானந்தரின் வரலாறு தமிழ் இலக்கிய வரலாற்றுடன் பின்னிப் பிணைந்து பிரிக்க முடியாத ஒன்றாகி விட்டது. முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் நூற்றாண்டு விழா தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் - தமிழின் பெயரால் - அகில உலக மக்கள் அனைவராலும் - நினைவு கூரப்படுகின்றது. இலங்கையில் இருந்து மதுரைத் தமிழ்ப் பண்டிதர் பட்டத்தை முதன் முதல் பெற்ற

சாதனை விபுலாநந்தரேயே சாரும். இன்னும் தமிழ் இலக்கிய வரலாற்றில் தோன்றிய வளர்ச்சி என்ற கட்டுரையை எழுதியதன் மூலம் தமிழ் இலக்கிய வரலாறு முறைப்படி எழுதுவதற்கு வித்திட்டவரும் அடிகளாரே ஆவார். இது மாத்திரமா உரைநடை, கவிதை மொழிபெயர்ப்பு, ஒப்பியல் ஆய்வு, இலக்கணம் போன்ற துறைகளிலும் கைவந்த வல்லுநராகித் தமிழ்மொழியின் சிறப்பிக்கும், உயர்விற்கும் ஊன்று கோலாக இருந்தார்.

எல்லாவற்றிற்கும் மேலாகச் சேரத்து இளங்கோவின் சிலப்பதிகாரத்திற் பௌர்ணமி நிலவில் நீண்ட கடற்கரையோரத்திற் கானல்வரிபாடிய மாதவியின் கையிலிருந்த யாழின்மேல் அடங்காத காதல் கொண்ட அடிகளார். அந்த யாழின் சுளிவு நெளிவுகளையெல்லாம் ஆராய்ந்து தெளிந்து மறைந்து போன யாழின் வரலாற்றைத் தமிழ் உலகிற்கு மீட்டுத் தந்து யாழ் நூல் என்னும் விலைமதிக்க முடியாத அரும், பெரும், பொக்கிசத்தைத் தமிழுக்களித்து அதன் தொன்மையையும் பெருமையையும் நிலை நிறுத்தி மெருகூட்டினார்.

அடிகளார் தமிழுக்குச் செய்த அரும் பெரும் சாதனைகளுள் நினைவு கூரத்தக்க மிக முக்கியமான சாதனை மகாகவி சுப்பிரமணிய பாரதியார் அவர்களைத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு இனம் காட்டிக் கொடுத்ததாகும். அடிகளார் இந்தியாவில் வாழ்ந்த காலத்தில் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரை எவரும் பெரிதாக அறிந்திருக்கவில்லை. அத்தோடு இலக்கணம் படித்த பண்டிதர்களைப் போன்று நமது தமிழ் முன்னோர் கையாண்ட தாழிசை, துறை விருத்தம் போன்ற யாப்பு வகைகளைக் கையாண்டு கவிதைகள் பாடாமல் சாதாரண பொதுமக்களின் உள்ளத்தில் உணர்ச்சியைத் தூண்டும் சிந்து, தெம்பாங்கு போன்ற யாப்புவகைகளைக் கையாண்டு கவிதைகள் பாடிய பாரதியாரைத் தமிழ் மக்கள் ஒரு கவிஞனாகவே ஏற்றுக் கொள்ள மறுத்தார்கள். இலக்கணம் தெரியாத கஞ்சாக் கவிஞன் என்றுகூட எள்ளி நகையாடினார்கள்.

இக்கால கட்டத்தில் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் பெருமையையும் சிறப்பையும் அவரது இலக்கிய ஆற்றலையும் படித்தறியா பாமர மக்களின் உள்ளத்தில் உணர்ச்சியை தூண்டும் அவரது செந்தமிழ் கவிதைகளின் திண்மையையும் துல்லியமாக எடுத்துரைத்தார் சுவாமி விபுலாநந்தர். பாரதி கழகங்கள் பல அமைத்து பாரதியாரின் கவிதைகளைப் பாடிக் காட்டி உயிரோட்டமுள்ள பாரதியாரின் கவிதைகளை வெளியுலகிற்குப் பிரகாசப்படுத்தினார். கற்றவர் போற்றும் கவித்தொகை மட்டுமல்ல கண்ணன் பாட்டும் தான் என்று நிருபித்தவர். சுவாமி விபுலாநந்தர். அதன் பின்னரே தமிழ் நாட்டின் மக்கள் பாரதியாரை இனம்கண்டு ஏற்றுக்கொண்டு அவருக்குரிய இடத்தைக் கொடுக்கத் தொடங்கினார்கள்.

பஞ்சபூதங்களின் நுட்பம் கூறும் கலைகள் மெத்தவளர்வது மேற்கே; அந்த மேன்மைக் கலைகள் தமிழில் இல்லையென்று பாடிய பாரதியார் ''பிறநாட்டு நல்லறிஞர் சாஸ்திரங்களை தமிழ் நூலில் மொழிபெயர்ப்போம். இறவாத புகழுடைய நற்தமிழ் நூல்களாகிய தமிழ் மொழியை இயற்றிடுவோம்.'' என்று பறைசாற்றினார். அதற்கேற்ப அடிகளார் சேக்ஸ்பியரின் நாடக அரங்கில் தான் ரசித்துச் சுவைத்த பலவற்றை தமிழ் மக்களும் முழுதாக அனுபவிக்கவேண்டும் என்ற அடங்கா ஆவல் கொண்டு அவற்றைத் தமிழ் உலகிற்கு மொழிபெயர்த்து தந்தார். அவ்வாறு மொழிபெயர்க்கும்போது மூலத்தின் சுவையையும் மிஞ்சிவிட்டார் அதாவது சேக்ஸ்பியரையே சில இடங்களில் தோற்கடித்துவிட்டார் என்று இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் சு. தனஞ்செயராசசிங்கம் அவர்கள் கூறுகின்றார்.

சுவாமி விபுலாநந்தர் இலங்கை பல்கலைக்கழகத்தில் முதற் தமிழ்ப் பேராசிரியர் என்பதை நாம் அறிவோம். ஆனால் அவர் உலகத்திலேயே முதலாவது தமிழ்த்துறைப் பேராசிரியர் என்று கூறுகின்றதைச் சில சமயம் அதை பலர் ஏற்றுக்கொள்ளத் தயங்குவார்கள் சுவாமிகள் 1931ஆம் ஆண்டு ஆடிமாதம் சிதம்பரத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதற் தமிழ்ப் பேராசிரியர் என்ற பதவியை பெற்றதன் மூலம் உலகத்திலேயே முதலாவது தமிழ்த்துறைப் பேராசிரியர் என்ற பதவியையும் கூடவே பெற்றுக் கொள்கின்றார். ஏனெனில் தமிழ் நாட்டிலேயே அண்ணாமலைப் பல்கலைக்கழகம்தான் தமிழ்த் துறைக்கெனத் தனியான பேராசிரியரை நியமிக்க தீர்மானித்தது. அவ்வாறு தீர்மானித்தபோது அதற்கு முத்தமிழ் வித்தகர் ஈழத்துக் காரைதீவைச் சேர்ந்த சுவாமி விபுலாநந்த அடிகளாரையே தேர்ந்தெடுத்தது.

அடிகளார் 1931ஆம் ஆண்டளவில் இப்பதவியை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முறைப்படி ஏற்றபோது அவருக்குச் சமமாகத் தமிழ்நாட்டில் எந்தவொரு பல்கலைக்கழகத்திலும் தமிழ் துறைக்கென தனியான பேராசிரியர் பதவி அக்காலத்தில் இருக்கவில்லை சென்னைப் பல்கலைக்கழகத்தில்கூட தமிழ்த்துறைக்கெனத் தனியான பேராசிரியர் பதவி அக்காலத்தில் இருக்கவில்லையென்று பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் கூறுகின்றார். எனவே தமிழ் நாட்டிலேயே வேறு எந்தப் பல்கலைக்கழகத்திலும் தமிழ்த் துறைக்கெனத் தனியான பேராசிரியர் பதவி இல்லாமல் இருக்கும் பொழுது உலகத்தில் வேறு எங்காவது தமிழ்த்துறைக்கென தனியான பேராசிரியரை நியமித்து இருப்பார்களா? இல்லை. அதை நாம் எதிர்பார்க்கவும் முடியாது. எனவே தமிழ் நாட்டிலேயே முதல் தமிழ்த்துறைப் பேராசிரியர் என்ற பதவியைப் பெற்ற சுவாமி விபுலாநந்தரே உலகத்திலேயே முதலாவது தமிழ்த்துறை பேராசிரி

யர் என்ற பெருமைக்குரிய பதவியையும் பெற்றுக்கொள்கின்றார். என்பதில் சிறிதேனும் ஐயம் இல்லை.

அடிகளாரின் சமகாலத்தில் ஏராளமான தமிழ்ப் பெரியார்களும் அறிஞர்களும் இருந்திருக்கின்றார்கள் என்பதை மறுப்பதற்கில்லை உதாரணமாக ரா. பி.சேதுப்பிள்ளை அவர்கள் அடிகளாரின்கீழ் உதவி விரிவுரையாளராக கடமையாற்றினார். திரு. தே. போ. மீனாட்சி சுந்தரனார் அவர்கள் 1944ஆம் ஆண்டுதான் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை பேராசிரியராகக் கடமையாற்றினார். திரு. வையாபுரிப்பிள்ளை அவர்கள் 1951ஆம் ஆண்டுதான் திருவிதாங்கூர் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியரானார். சோமசுந்தர பாரதியார் அவர்கள் அடிகளாரின் பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற் தமிழ்த்துறை பேராசிரியராகக் கடமையாற்றினார். எனவே அடிகளாரின் சமகாலத்தில் வாழ்ந்தவர்கள் எவரும் முதற் தமிழ்த்துறைப் பேராசிரியர் என்ற பதவியைப் பெற்றிருக்கவில்லை. இப்பெருமைக்குரிய பதவியைச் சுவாமி விபுலாநந்தரே 1931ஆம் ஆண்டளவிற் பெற்றிருந்தார் என்று துணிந்து கூறலாம்.

சுவாமி விபுலாநந்தர் கலியுக அகத்தியர் என்றும் புதுமைக் கபிலர் என்றும் த்மிழ் காத்த மறைமுனி என்றும் போற்றப்பட்டுத் தமிழுக்காக வாழ்ந்து தமிழின் தரத்தை உலகிற்கு உயர்த்தித் தமிழ் வாழும் காலம் எல்லாம் நிலைத்து விளங்கும் ஈழத்து வீர துறவியாவார். சுவாமி விபுலாநந்தர் 'வளர்க' 'வளர்க'

(நாவன்மை உயர்நிலை முதற்பரிசில்)

# விபுலானந்த அடிகளார் என்னும் சுடர்

செல்வன் பொன்னையா சுதர்சன்
(இந்துக்கல்லூரி திருகோணமலை)

(அடிகளார் நூற்றாண்டு கொழும்புத் தமிழ்ச் சங்கத் தமிழ்த்திறன் இடைநிலைத் தேர்வில் திரு. அசோகன் சங்கரப்பிள்ளை முதற் பரிசில் பெற்றது)

நமது தாய்மொழியாகிய தமிழ் தொன்மையானது. எமது உயிருக்கு நிகரானது. மகாகவி பாரதி கூறியதுபோல் ''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல இனிதாவது எங்கும் காணோம்'' என்ற சிறப்புப் பொருந்திய மொழி, பல கவிச்சக்கரவர்த்திகளையும் மாமேதைகளையும் கலை இலக்கிய விற்பனர்களையும் தமிழ் உலகுக்கு ஈன்றளித்துள்ளது. அவர்களது மேதா விலாசங்களைக் கண்டு களிநடனம் புரிந்த மொழி தாய்நாடாகிய தமிழகத்தில் மாத்திரமல்ல சேய்நாடாகிய ஈழத்திலும் ஈழத்துப் பூதன் தேவனார் போன்ற சங்கச் சான்றோரையும் ஆறுமுக நாவலர், கலாயோகி ஆனந்த குமாரசுவாமி, சுவாமி விபுலானந்தர் போன்ற விற்பனர்களையும் கண்டுள்ளது.

விபுலாநந்த அடிகள் என்னும் இச்சுடர் சூரியனைப் போன்று ஈழத்திரு நாட்டின் கிழக்கிலே மட்டக்களப்பிலுள்ள காரைதீவில் 1892ஆம் ஆண்டு பங்குனித் திங்கள் 21ஆம் நாள் உதித்த மயில்வாகனனார் என்ற இயற்பெயர் கொண்ட அடிகள் காலத்தின் தேவைக் கேற்பச் சமய - சமுதாய - கலை - இலக்கிய தேவைக்காகத் தோன்றியவர் என்றே கூற வேண்டும். எனினும் இச்சுடர் சூரியன் போன்று கிழக்கில் உதிப்பினும் ஆதவனைப் போலன்றி ஒருமுறை உதித்து ஒருமுறையே எம்மிடம் இருந்து மறைந்துவிட்டது. ஆனாலும் தமிழ் மொழி - பண்பாடு - கலாச்சாரம் - இனம் - நாடு உள்ள வரையும் இச்சுடர் நிலைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

இலங்கையின் கிழக்கில் உதித்த இச்சுடர் இத்துணைச் சிறப்புப் பெற்று விளங்கக் காரணம் யாது. ஈழத்தின் வசதிகளற்ற சாதாரணமான கிராமத்தில் உதித்த இச்சுடர் இமாலயம் - கைலாயங்கிரி வரையும் பரவி ஆங்கில நாடுவரை வியாபித்துத் தன் ஒளிக்கதிர்களை பரப்பிக்கொண்டிருக்கின்றதென்றால் அதற்கு அவர் கடைப்பிடித்த நெறிமுறைகளும் செயற்பாடுகளும் சேவைகளும்தான் காரணிகள் ஆகும்.

அடிகளார் இளமையில் இருந்தே தமிழ்மொழி, வடமொழி ஆங்கிலம் ஆகியவற்றைக் கற்று அம்மொழிகளில் விற்பனராகிகொண்டு வந்தார். பின்னர், தான் கல்வி கற்ற பாடசாலையிலே ஆசிரியராகிக் கல்வி உலகிற்கு வழிகாட்டத் தொடங்கினார். பின்னர் ஆங்கிலம் பயிற்றப்பட்ட ஆசிரியராகிக் கல்வி உலகிற்கு வழிகாட்டத் தொடங்கினார். தனது 24வது வயதில் B. Sc (பி. எஸ்.ஸி) இலண்டன் விஞ்ஞான பட்டதாரியாகப் பரிணமித்தபொழுது தாய்மொழியாகிய தமிழிலும் மதுரைத் தமிழ்ச் சங்க பண்டிதர் ஆனார்.

அடிகளார் ஓரிடத்தில் எனது தந்தை எனக்கு யூனியர் கல்வி வரையுமே படிப்பித்தார். அதன் பின் எம் முயற்சியாலும் கல்வி மேற்கொண்ட கரைகாணாத அவாவாலும்தான் கல்வியின் பெருந் துறைகளைக் கற்றுத் தேறினேன் எனக் கூறியதிலிருந்து அவரது முயற்சியின் தன்மையை உணரமுடிகின்றது. அவர் பல பாடசாலைகளை உருவாக்குவதற்குரிய வழிவகைகளைச் செய்தார். மட்டக்களப்புச் சிலானந்த வித்தியாலயம் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயம் ஆகியவற்றை அமைத்ததுடன் தமிழ்மொழிமேல் கொண்டிருந்த ஈடுபாட்டால் யாழ்ப்பாணத்தில் ஆரிய திராவிட மொழி நிறுவனத்தை நிறுவி அதன் தலைவராக இருந்து பிரவேச பண்டிதர், பால பண்டிதர், பண்டிதர் என்றும் முப்பெரும் அறிவாளர்களைத் தோற்றுவிப்பாராகத் தொழிற்பட்டார். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் உருவாகுவதற்குரிய நிறுவனத்தின் தலைவராக இருந்து அப் பல்கலைக்கழகத்தின் முதற்தமிழ்ப் பேராசிரியர் ஆகும் பெரும் பேற்றினையும் பெற்றார். பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியராகிப் பேராசிரியர் கணபதிப்பிள்ளை, பேராசிரியர் வித்தியானந்தர் போன்ற கல்விமான்கள் மூலம் தமிழுலகுக்கும், தமிழ் மொழிக்கும், இலக்கியத்திற்கும் பெருந்தொண்டாற்ற வழிவகுத்தவர் விபுலாநந்த அடிகளாராகும்.

1922ஆம் ஆண்டு அடிகளார் வாழ்வில் திருப்புமுனை ஏற்பட்டது எனக் கூறலாம். நெடுங்காலமாகத் துறவு வாழ்க்கையில் அவருக்கிருந்த நாட்டம் இக்காலகட்டத்தில் தீவிரத்தன்மை அடைந்ததனால் மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் பதவியைத் துறந்து இராமகிருஷ்ண சங்கத்தில் துறவியாகச் சேர்ந்தார். இராமகிருஷ்ண சீடர்களில் ஒருவரும் அப்போது அதன் தலைவருமாக இருந்த சுவாமி சிவானந்த மகரிஷி அடிகளுக்குப் பிரம்மச்சரிய தீட்சையும் சந்நியாச தீட்சையும் செய்து வைத்தார். மயிலாப்பூர் மடத்தில் அதன் தலைவராக இருந்த சர்வானந்தர் உறுதுணையாலும் பயிற்சியாலும் அடிகள் ஆன்மீகத் துறையில் பெருவளர்ச்சி கண்டார். மயிலாப்பூரில் உள்ள மடத்தில் இருந்த காலத்தில் இராமகிருஷ்ண சங்கம் நடாத்திய இராமகிருஷ்ண விஜயம் எனும் தமிழ்ச் சஞ்சிகைக்கும் வேதாந்த கேசரி எனும் ஆங்கில சஞ்சிகைக்கும் ஆசிரியராக இருந்து ஆன்மீகத் துறையில் பெரு வளர்ச்சி கண்டார்.

அடிகளார் எழுதிய தமிழ் நூல்கள் மொழிபெயர்த்த நூல்கள் இலக்கிய ஆராய்ச்சி சம்பந்தமான கட்டுரைகள் இசையாராய்ச்சி சம்பந்தமான கட்டுரைகள், கல்விக் கட்டுரைகள், இரசாயனவியல் சம்பந்தமான கட்டுரைகள், பொதுவான கட்டுரைகள், தலம் - தல யாத்திரை - கடவுட் தத்துவம் பற்றிய கட்டுரைகள் எனப் பல ஆக்கங்களை அள்ளித்தந்த அடிகள் உண்மையில் ஒரு சுடர் என்பதில் யாருக்கும் ஐயப்பாடு தோன்ற இடமில்லை.

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழிலும் வித்தகராக விளங்கியவர் விபுலாநந்த அடிகளார். சமயம் தமிழிசை பழந்தமிழ் நூல்கள் ஆகியவற்றை அடிகள் துருவித் துருவி ஆராய்ந்தார். இசையையும் நாடகங்களையும் ஒப்பு நோக்குவதில் வித்தகராக விளங்கிய அடிகள் ஒப்பற்ற ஆங்கிலக் கவிஞன் ஷேக்ஸ்பியரின் நாடகங்களைத் தமிழ் நாடக நிலைகளுடன் ஒப்பு நோக்கி 'மதங்கசூளாமணி' எனும் அரும்பெரும் நூலினைத் தமிழ் உலகுக்குத் தந்துள்ளார். மூன்று இயல்களைக் கொண்ட இந்நூல் தமிழ் நாடக இலக்கணம் பற்றிக் கூறுகின்றது.

அடிகளாரின் அரும்பெரும் படைப்பான யாழ்நூல் 1947ஆம் ஆண்டு ஆனித்திங்கள் 5ஆம் 6ஆம் திகதிகளில் திருக்கொள்ளம் புத்தூர் திருக்கோவிலில் அரங்கேற்றப்பட்டது. பழந்தமிழ் இசை வரலாறு கூறும் ஒரு நூல் சிலப்பதிகாரத்து அரங்கேற்ற காதையிலுள்ள யாழ் ஆசிரியன் அமைதி கூறுகின்ற இருபத்தைந்து அடிகளுக்கு அமைந்த ஓர் ஆய்வு நூலாக அமைந்துள்ளது. சங்க இலக்கியங்களின் பரிபாடல் போன்றவற்றிலுள்ள குறிப்புக்களை ஆதாரமாகக் கொண்டு 14 வருடங்கள் அயராது உழைத்துப் பண்டைத் தமிழரின் இசைக்கலையை மகரயாழ், பேரியாழ் ஆகியவற்றின் அமைப்பினை எமக்குக் கண்டளித்துள்ளார். மேலும் மீன்பாடும் தேனாடாம் மட்டுநகர் வாவிகளில் உள்ள மீன்கள் 'நீரர மகளிர்' இசையையொத்த இசையைப் பாடுவதாக எமக்குக் கூறியுள்ளார். மேலும் கணேஷ் தோத்திரப் பஞ்சகம் நடராஜ வடிவம், குமரவேவள, மணிமாலை போன்றவற்றைக் கண்டுபிடித்துள்ளார்.

அடிகளார் ஈசன் உவக்கும் இன்மலர் அதாவது உள்ளக்கமலம், கூப்பியகைக் காந்தள். நாட்டவிழி நெய்தல் ஆகியவற்றை அருளிச் செய்த சவிவல்லவராகும். எனவே அடிகள் பழமையையும் புதுமையையும், மேற்றிசைச் செல்வத்தையும் கீழைத்தேய நாகரீகத்தையும் விஞ்ஞானத்தையும் மெய்ஞானத்தையும் ஆழநோக்கி அவற்றில் உயிர்த்துடிப்பான அம்சங்களைத் தமிழ்மொழி சிறக்கத் தந்த பெருந்தகையாளராகும். அவரைப் ''புதுமை எனும் அச்சில் பூட்டிய பழைமைச் சக்கரம்'' என்று கூறின் அது மிகையாகாது. இறுதியாகத் தொகுத்து நோக்குங்கால் கிழக்கில் உதித்த சுடர் என அவரைக் கூறலாம். வசதியற்ற கிராமத்தில் பிறந்து இமாலயம் - கைலாயங்கிரி வரையும் பரவி ஆங்கிலேய நாடுவரை வியாபித்த அடிகளைப் போற்றுவோம். வி - மேன்மை, புலம் - அறிவு ஆகவே மேன்மையான அறிவினையுடைய ஆனந்தர் புகழ் உலகம் உள்ளவரை சிறப்புற்று விளங்கும் என்பதில் ஐயமில்லை.

# விபுலாநந்த அடிகளாரும் அவரது பணிகளும்

செல்வி சந்தானம் தர்சினி
(கதிரேசன் குமார வித்தியாலயம், நாவலப்பிட்டி)

(அடிகளார் நூற்றாண்டு கொழும்புத் தமிழ்ச் சங்கத் தமிழ்திறன் உயர்நிலைத் தேர்விற் திருமதி மனோன்மணி சங்கரப்பிள்ளை சிறப்புப் பரிசில் பெற்றது.)

ஈழநாட்டின் அணையாத அறிவுச்சுடர் அருட்டிரு விபுலானந்த அடிகளார் தமக்கென வாழாப் பெருந்தகையாளர். வாழ்நாள் முழுவதும் தமிழ்ப்பணிக்கே தம்மை அர்ப்பணம் செய்த பெருந்தகையாளர். ஈழத்தின் ஞான விளக்கான அடிகாளரது பெருமை ஈழ நாட்டுடன் நின்று விடவில்லை. தமிழ் நாட்டின் மூலை முடுக்கெல்லாம் ஒலித்தது.

தூங்கிக் கொண்டிருந்த எமது தமிழ் சமுதாயத்தை தட்டியெழுப்பி தமிழ் மக்களுக்கும், தமிழ் மொழிக்கும் புத்துயிர் அளித்த முத்தமிழ்ப் புலவரான சுவாமி விபுலானந்தர் 1892ம் ஆண்டிலே அவதரித்தார். இவருக்குப் பெற்றோர்கள் இட்ட பெயர் மயில்வாகனன்.

'நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்கு உழைத்தல், இணைப்போதும் சோராதிருத்தல்'' என்று கூறித் தான் அடிப்படையில் ஓர் கவிஞனே என்பதை வெளிப்படுத்திய பாரதியின் சேவைகளைத் தமிழ் உலகுக்குத் தந்தருளிய பெருமைக்குரியவரும் அடிகளாரே. அது மாத்திரமா 'யாழ் நூல்' எனும் இசைத் தமிழ் நூலினை ஆக்கித் தந்தவரும் அடிகளாரே.

இவர் கல்வியினைப் பொறுத்து ஒரு சர்வதேச நோக்குடையவராகவே இருந்தார். ஐரோப்பாவிலே இருளடைந்திருந்த காலத்துக்குப்பின்னர் கல்விப் புனருத்தாரணம் செய்யப்பட்டபோது வேற்று நாட்டு மன்னரும் மந்திரிமாரும் வேறு பிரதேசத்திலுள்ள பண்டிதர்களுக்குச் சிறப்புப் பட்டமும் புலமைப்பரிசிலுமளித்தனர் என்று கூறிச் சகல பெருங்கல்வி நிலையங்களையும் சர்வதேச ரீதியாக அமைத்தல் வேண்டும்; இதிலேதான் உலகத்தைக் காப்பதற்கும் இன்றுள்ள பிரச்சினைகளிலிருந்து மனிதர் விடுதலையடைவதற்குமான சகல காரணங்களும் தங்கியுள்ளன எனக் குறிப்பிட்டார்.

இவர் பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழ்மொழியிலே பெயர்க்க முற்பட்டபோது அவற்றிற்குக் கலைச் சொற்கள் அவசிய மென்பதை உணர்ந்த சுவாமி சொல்லாக்கச் சமூகமொன்றினை நிறுவி, அதற்குத்தாமே தலைமைத்தாங்கிப் பணியாற்றியும் வந்தார். இவர் 'அகராதி' எனும் கலைச் சொற்கள் அடங்கிய நூலினையும் தமிழ் உலகுக்குத் தந்தருளினார். இந்நூலில் உள்ள கலைச் சொற் களைக் கொண்டே தற்போது தமிழ்நாட்டில் வேதிநூல், கணிதம், அரசியல் போன்ற நூல்களை அறிஞர்கள் எழுதி வருகின்றனர். இவர் இத்தோடு நின்று விடவில்லை. பல மொழிப் பெயர்ப்புகளை யும் செய்துள்ளார். அறிவியல் சம்பந்தமாகப் பல கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

இவர் சங்க நூல்களைக் கற்றுத் தெளிந்த பேரறிஞன்; தமிழி லக்கணங்களை ஆராய்ந்தறிந்த பேரறிஞன்: உரைநடை எழுதுவதில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதான்; சிறந்த கவி புனையும் பேராற் றல் மிக்கவர்.

தமிழரின் நாகரிகத்தினை அடிகளார் ஆராய்ந்தார்; பிறநாட்டு மாந்தரின் நாகரிகத்தினை ஆராய்ந்தார்; அன்னவர்களின் நாகரி கத்தோடு தமிழகத்து நாகரிகத்தினை ஒப்புநோக்கித் தமிழரின் தலையாய தனிப் பெருமைகளை நிலை நாட்டினார். இந்தவகை யிலே எத்தனையோ வகையான ஆராய்வுக் கட்டுரைகளையெல் லாம் அவ்வப்போது பல இதழ்களில் எழுதி வெளியிட்டுள்ளார். அங்கொன்றும் இங்கொன்றுமாக மலர்ந்து கிடக்கும் அடிகளாரது ஆராய்வுகளையெல்லாம் கோவைப்படுத்தினால் தன்னேரில்லாத ஆராய்வு நூலைத் தமிழ்மொழிபெறும் என்பதற்கு ஐயமே இல்லை.

முத்தமிழ் வித்தகரான அடிகளாரது ஆராய்வுகளில் குற்றம் இராது; குறை இராது: ஆமாம் பல மொழிகளிலும் பல துறைகளி லும் தேர்ச்சி பெற்ற அடிகளாரது ஆராய்வுகளுக்குத் தனியொரு மதிப்பு எங்கும் என்றும் எப்பொழுதும் உண்டு.

அடிகளார் தமது பதினாறாவது வயதில் 'கேம் பிரிட்ச்' பல்க லைக்கழகத்தினரால் நடத்தப்பட்ட தேர்விலே முதன்மையாகத் தேறி, அவர் படித்த பாடசாலைக்கே ஆசிரியராகவும் பணிபுரியச் சென்றார். இவர் இத்தொழிலுக்குக் காலடி வைத்ததால் இத் தொழிலே ஒரு புனிதத்தன்மை அடைந்தது.

தமது மற்றைய பணிகளுக்கு மத்தியிலும் பண்டைய தமிழிசைக் கருவியான யாழைப்பற்றியும் அடிகளார் தொடர்ந்து ஆராய்வு களை நடத்தி வந்தார். பண்டைத் தமிழர் மீட்டிய யாழிலே அவர் கவனம் சென்றதால், அவர் தமக்கிருந்த பூத நூலறிவையும் கணித

நூலறிவையும் பயன்படுத்திப் பண்டைய யாழைத் திரும்பவும் அமைத்தார்.

இவர் யாழ்ப்பாணத்திலே ஆரிய திராவிட மொழி நிறுவனத்தினை நிறுவி அதற்குத் தாமே தலைமைத் தாங்கிப் பிரவேச பண்டிதர், பால பண்டிதர், பண்டிதர் என்னும் முப்பெரும் தமிழறிவாளரைத் தோற்றுவித்தோராக விளங்கியவரும் அடிகளாரே.

அக்காலத்திலே ஆங்கில நாடகங்களைக் குறிப்பாக ஷேக்ஸ்பியரின் நாடகங்களைக் கற்றோர் இதற்கு இணையாகத் தமிழ்மொழியிலே நாடக நூல் எதுவுமே இல்லையெனப் பெரிதும் குறைகொண்டிருந்தனர். இக்குறையினை நீக்க முற்பட்ட அடிகளார் 'மதங்க சூளாமணி' எனும் நூலினை வெளியிட்டார்.

இவர் சித்தாந்த நூல்களுடன் காவியங்களையும் கற்றார் ஆங்கிலக் கவிதைகளையும் படித்து இன்புற்றார். இந்நுகர்ச்சிகளைத் தாமே வைத்துக் கொள்ளாமல் தமிழக அன்பர்களுக்கும் வழங்க முன்வந்தார். இதன் பயனாகத்தான் 'ஆங்கில வாணி' 'பூஞ் சோலைக் காவலன்' என்னும் இலக்கிய இன்ப ஓவியங்கள் வெளி வந்தன.

இவர் இந்தியாவிலும் இலங்கையிலும் ஏழைகள் வாழும் இடங்களுக்கும் சென்று அவர்களுக்குத் தொண்டாற்றினார். உடல் வலிமையையும் மன வலிமையையும் பயன்படுத்தித் தேச சேவை செய்வதே மிகச் சிறந்தது என்பதை இவர் மிகவும் வலியுறுத்தினார்

இவரது சமூக நோக்கானது ''நமக்குப்பின் வருகின்ற நமது மக்களுக்குத் தேவையான சாதனங்களை நாமே தேடி வைக்கவேண்டும்; பெண்களை இயற்கையிலேயே இழிவுடையவர் எனக்கருதாமல் ஆடவரும் பெண்களும் ஒத்த நிலையினர் எனக்கொண்டு வாழ்க்கை நடத்துதல் வேண்டும்: விதவைகளின் கண்ணீரும் அநாதைகளின் அழுகை ஒலியும் உதவியினை நாடி வருகின்றன. இந்நிலையில் செல்வம் படைத்த தமிழ் மக்கள் உதவி புரியக் கட்டாயமாக முன் வரவேண்டும்: வாலிபர் விழிப்புடன் நோக்கி உண்மை வழியில் சென்று ஒற்றுமை நலத்தைப் பெருக்க வேண்டும்: மக்களிடையே சகோதரத்துவத்தை வளர்க்க வேண்டும்'' இவ்வாறு இவரது சமூக நோக்கு இருந்தது.

இவ்வாறு தமது உடம்பையும் தமிழுக்கே அர்ப்பணித்து, உயிரையும் தமிழுக்கே அர்ப்பணித்த அடிகளார் 1947 ஆம் ஆண்டு இம் மண்ணை விட்டுப் பிரிந்து இறைவனோடு இரண்டறக் கலந்தார். அறிஞர் அழுது புலம்பினர்; தமிழ்த்தாய் ஒப்பற்ற முத்தமிழ் முனிவரை இழந்தது. அவரது கல்லறையிலும் அவரே யாத்த,

வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலர் எதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது.

என்ற கவிதை பொறிக்கப்பட்டுள்ளது.

விபுலானந்த அடிகளார் மறைந்துவிட்டார்; அவரது ஊன் உடம்பு மறைந்துவிட்டது; ஆனால் அவரது புகழ் உடம்பு மட்டும் தமிழ் உள்ளவரையும், தமிழ்த்தாய் உள்ளவரையும், தமிழகம் உள்ளவரையும் நின்றருளாகவே உலவும்.

இசையிடை நுணுகி யாய்ந்து இசைபெறு யாழ்நூல்
இசைத் தமிழாசானாகி இன்கலைக் கழகந்தன்னில்
இசைவளர் விபுலானந்தர் இம்பரி னீங்கி வானின்
இசைபொழி அமரராகி என்றென்றும் வாழ்கின்றாரே.

என்று நாமும் தினமும் அவரை வாழ்த்துவோமாக.

# முத்தமிழ் வளர்த்த முனிவர்

செல்வி கார்த்திகேசு மேகலா
(கார்மேல் பாத்திமா மகளிர் கல்லூரி, கல்முனை)

அடிகளார் நூற்றாண்டு - கொழும்புத் தமிழ்ச்சங்கக் கவிதை முத னிலைத் தேர்வில் மறவன் புலவு திரு. மு. கணபதிப்பிள்ளை அதிபர் முதற் பரிசில் பெற்றது.

நாட்டினுக்கும், வீட்டினுக்கும் நலங்கள் பல செய்து,
நானிலமும் போற்றுகின்ற நல்லவரைப் பாட,
கூட்டிலுள்ள குயிலுக்கும் ஆசை வரும் ஐயா!
கூனுள்ள கிழவருக்கும் நேசம் வரும் ஐயா!

பாட்டினிலே அவர் பாடல் தெவிட்டாத மதுரம்!
பண்பான அவர்தமிழும் பால்போலத் தெளிவு!
கேட்டீரோ அவர்புகழை? கேட்காத செவியும்,
கேட்டிடவே செய்யுமவர் கனிந்ததல்ல கவிதை!

பண்ணிசையில் பலகாலம் பல ஆய்வு செய்து,
பண்போடு யாழ்நூலை ஆக்கி எமக்களித்தார்
விண்புகழும் தமிழறிவால் வேறு பல பணியால்,
பண்டிதமணியென்னும் பட்டமது பெற்றார்.

பலமொழியில் பலவாறாய்ப் பார்முழுது மிருந்த,
நூல்களையே தமிழ்நூலாய் மாற்றி எமக்களித்தார்!
சில சிலவாய்க் கலாசாலை, கற்பதற்குப் பல நூல்,
சிந்தனையால் செய்மையுறச் செய்து தமிழ் வளர்த்தார்

தமிழ்மொழிக்காய்த் தரணியிலே தன் பணியைச் செய்து,
தங்கமென ஒளிவிட்டுத் தன்னுயிரை மாய்த்த,
தமிழினையே தாய்நாடு மறக்காது ஐயா!
தேயாத அவர் புகழும் மாறாது ஐயா!

## விபுலானந்த அடிகளாரைப் போற்றுதும்

மீன்பாடும் தேனாட்டின் தெற்கினிலே திகழும்
மேன்மையுறும் சைவக்குடி காரைதீவு தனிலே
தேன்போலும் மொழியுடையார் தெய்வத் தமிழ்ப்புலவர்
தேயாத புகழ் படைக்கத் தென்றலெனப் பிறந்தார்

உற்றார்க்கும் மற்றார்க்கும் தமிழறிவை ஊட்டி,
உலகினிலே தன்புகழை நிலை நிறுத்தி வாழ்ந்து,
வற்றாத தமிழறிவை வளர்க்க அவர் செய்த,
வான்புகழும் சாதனைகள் சொல்லில் அடங்காது!

நல்ல பல நாடகநூல், நல்ல இசைத் தமிழ் நூல்,
நமக்காக உவந்தளித்த நாயகனை வாழ்த்தி,
பல்லாண்டு காலம் பாடினாலும் போதாது!
பாவலனைப் பாடிடவே பாரதிதான் வரவேண்டும்.

தாயவளாம் கண்ணம்மை உதரத்தில் உதித்து,
தமிழுக்கும் நாட்டிற்கும் தன் பணியை அளித்து,
தூய உடல், தூய உடை, தூய உள்ளத்தோடு
துறவி எனும் பணியேற்ற தூயவனைத் துதிப்போம்

ஆசிரியப் பணியென்னும் அரிய தெய்ப்பணியால்,
அயராது உழைத்து அறம் புரிந்து அவர் வாழ்ந்த,
காசினியில் நாமும் பல நற்பணிகள் செய்வோம்!
அன்னவரின் அறப்பணியை அடிபணிந்து துதிப்போம்!

## இந்நாட்டிற்கு உலகிற் பெருமை சேர்த்தவர்

ஈழநாட்டின் கிழக்கினிலே காரைதீவு தனிலே
ஈன்றெடுத்தாள் கண்ணம்மை தனது தவ மகனை!
தோழமையாய், துணிவுடனே துறவுதனை ஏற்று,
தொகையாகப் பணிபுரிந்த தெய்வ மகன் அவரே!

அன்னை நாடு பலவற்றில் அழியாத பணி செய்து,
அன்புடனே அறிவளித்து அழகாக வாழ்ந்து வந்தார்.
பண்டிதமணியென்ற பட்டம் தனைப்பெற்று,
முதல்மகனாய் நாட்டினுக்குப் பெருமைதனைச் சேர்த்தார்

பலமொழியில் தேர்ச்சி பெற்றுப் பலதுறையில் சேர்ந்து,
பார்புகழும் பேரறிவு பெற்ற பெரு மகனாய்,
இலங்கைக்குப் புகழ் சேர்த்து என்றுமவர் வாழ்ந்த,
ஏற்றம் மிகு வாழ்க்கை என்னவென்று சொல்வேன்!

ஆங்கிலத்தின் மோகத்திலே அடிமைகளாய் வாழ்ந்தோரின்,
அறிவுதனைத் தன் அறிவால் தட்டியவர் எழுப்பி,
பாங்காக உலகெங்கும் பல பணிகள் செய்தவரின்
பண்பு மிகும் கொள்கையினை என்னவென்று சொல்வேன்!

நம் நாட்டின் கலைசிறக்க, நல்ல தமிழ் சிறக்க
நாட்டினுக்காய்ப் பணிசெய்து நல்ல புகழ் படைத்த,
நம் ஞானப்புதல்வனையே பாரெங்கும் புகழும்,
அவர் பணியை, புகழ்தனையே நாம் கூடப்பணிவோம்.

## யாழ்நூலும் மதங்கசூளாமணியும்

லாழ்வான பைந்தமிழும், பண்ணிசையும் வாழப்.
பூவான பொன் தமிழைப் போற்றிய நல்மகனார்,
யாழ் நூலாய்ப் பண் இசையை எழுதி எமக்களித்த,
மாமகத்தை நாமும் மறந்துவிட முடியாது!

பல்லாண்டு காலங்களாய்ப் பல ஆய்வு செய்து,
பசுமையுறும் தமிழ்மொழியால் அவர்பாடி வைத்த,
செல்லாமல் எம்மிடையே நின்று நிலைத்திருக்கும்,
செம்மையுறும் யாழ்நூலின் புகழ் சின்னப் புகழோ?!

நாடகத்தின் நடை தனிலே நல்ல தமிழ்ப்பாவால்,
நமக்களித்தார் 'மதங்க சூளாமணி' எனும் நூலைப்
பாடற்கு அரிதான புகழ்படைத்த நூல்தனையே
பாரினிலே யாம் பெற்ற பேறு வேறு யாருக்குண்டு!?

தொன்று தொட்டுப் பல நூல்கள் எம்மிடையே வந்தாலும்,
தொகையாகப் பல நூல்கள் இனிமேலும் எழுந்தாலும்,
அன்று அவர் ஆக்கிய நூல் அழியாத புகழ்படைத்து,
நின்றிடுமே எந்நாளும் சுந்தரமாய் வாழ்ந்திடுமே!

ஆண்டு பல தனதறிவை அணுவணுவாய்ப் பயன்படுத்தி,
அகிலத்திலே புகழ்படைக்கும் அரிய இந்த இருநூலை,
மாண்டுவிடும் முன்னரேயே மாண்புடனே எமக்குத் தந்த,
மன்னவனின் அரும்பணிகள் மாறாது! மறையாது!

## அடிகளார் பணிகளைப் பின்பற்றுவோம்

கல்வியறிவளித்திடவே கலாசாலைகள் அமைத்து,
கண்களிலே வாழ்கின்ற கனிந்த குணநலத்தால்,
பல்விதமாய் அறிவினுக்கே பலபணிகள் செய்த,
பாவலன் போல் தாமும் பணி செய்திடவே வேண்டும்.

முத்தமிழை வளர்த்திட்ட மூத்த தமிழ்ப்புலவன்,
முத்தான கவிதைகளை ஆக்கி நமக்களித்த,
வித்தகனை விபுலானந்தனெனும் பெருமகனை,
வென்றிடவே முடியாத அவர் புகழைத் தொடர்வோம்

நின்றுவிட்ட இசைத்தமிழை நிமிர்த்தியே பார்க்க,
நேசமுடன் 'யாழ்நூலை' எழுதி எமக்களித்த,
மென்மையுள்ள உளமுடைய மேன்மையுள்ள மகனை,
மெதுவாகப் பின்பற்றி மெருகு பெற்று வாழ்வோம்

வீட்டினுக்கு மட்டுமன்றி நாட்டினுக்கும் புகழ் சேர்த்த,
வேதியனை பெரும் அறிவுச் சோதிதனைக்,
காட்டிய நீதியுடைய அவர்பெரிய அன்புதனைக்
கொண்டு பாரெங்கும் புகழ் பரப்பிப் பணிவா வாழ்வோம்

அழியாத சேவைதனை ஆற்றியே மறைந்து விட்ட
அந்நவரின் அறப்பணியைத் தொடர்வோம்:
பழியில்லா அவர்தொழில் போல் பாரிலே சேவை செய்து,
பேதமில்லா நல்வாழ்வு வாழ்ந்திடுவோம்!

---

# விபுலாநந்த அடிகளாரைப் போற்றுதும்

செல்வன் இராசரெத்தினம் முரளீசுவரன்
(புனித மைக்கோல் கல்லூரி, மட்டக்களப்பு)

(அடிகளார் நூற்றாண்டுக் கவிதை முதனிலைத் தேர்வில் 2ஆம் பரிசில் பெற்றது.)

இலங்கி நின்ற ஈழமது
இழிந்துமிக நலிந்ததனால்
கலங்கி நின்ற காலமதில்
காரைநகர் எனும்பதியில்
ஆழியிடை முத்தெனவே
அவதரித்தவிபு லானந்தர்
மேதியினில் புகழுடைத்த
மேன்மையினைப் போற்றுதுமே!

யாழ்தனையே இசைநூலாய்
யாத்துத்தமிழ் இசையினுக்கு
வாழ்வளித்த பெருவள்ளல்,
வாழ்நாளில் பலபணிகள்
சீராகச் செய்து வைத்த
செந்தமிழர் நம்மடிகள்;
நேராகத்துறவு கொண்ட
நேர்மையினைப் போற்றுதுமே!

ஈழநாடு முழுவதுமே
இந்துமதப் பெருமையினை
ஆழமாக எடுத்துரைத்த
ஆற்றல்மிக்க நல்துறவி;
காலமது பலகோடி
காலமாகிச் சென்றிடினும்
தூலமது மறைந்திடினு மவர்
தூயபணி போற்றுதுமே!

## 2. முத்தமிழ் வளர்த்த முனிவர்

இசைத் தமிழன் மாண்புணர்த்த
இனியநல்ல யாழ்படைத்தார்
திசைமுழுதும் தமிழ் மணக்கத்
திராவிட சங்கமமைத்தார்

மடியீன்ற தமிழினுக்கு
மதங்க சூளாமணியாத்தார்;
மடியீன்ற மட்டுநகர்;
மண்புகழ வைத்துவிட்டார்;

ஆங்கிலவாணி, பூஞ்சோலை,
கங்கைவிடுத்த ஓலையென
ஈங்குபல இயலினுக்கு
ஈந்துவிட்ட அடிகளவர்;

கரந்தையொடு மதுரைநகர்
கவிகள் கூடும் சங்கங்களில்
மரபுவழி முத்தமிழை
மதிப்புடனே வளர்த்தெடுத்தார்;

வித்தகராய் விளங்கிநின்ற
விபுலா நந்த அடிகளிவர்
முத்தமிழ் வளர்த்த முனிவரென
முழங்குதற்கு ஏற்றவரே!

## 3. இந்நாட்டிற்கு உலகிற்பெருமை பெற்றுத்தந்தவர்

இலங்கையினை உலகமெலாம்
இகழ்ந்துரைத்த போதினிலே
இலங்குபுகழ் பெற்றுத்தந்த
எம்மடிகள் விபுலானந்தர்.

எண்ணிறைந்த கல்லூரிகள்
எவ்விடமுமிலாது - ஈழ
மண்ணினிலே அமைத்தெடுத்த
மண்மைந்தர் விபுலானந்தர்.

இசையினிலே மயங்கியிந்த
இகவுலகம் கிடக்குவண்ணம்
இசைநூலாம் யாழ்நூலை
இயற்றிய விபுலானந்தர்.

கார்முகிலாய்க் கவிமழையைக்
காசினியில் சிறந்துபெய்து
பார் முழுதும் ஈழம் புகழ்
பரவுவகை உவந்து செய்தார்,

கடல் கடந்து நாடுபல
கண்டு ஆங்கே ஈழஅன்னை
புடம் போட்ட பொன்னெனவே
புகழுடைத்த விபுலானந்தர்.

## யாழ்நூலும் மதங்க சூளாமணியும்

சிலம்பு கொண்ட காவியத்தின்
சிறப்பான பகுதிகளைத்
துலங்கியநற்பொன்போல
தெரிந்தெடுத்துப் படைத்ததுவே,

பண்டிதர்கள் புகழும் வண்ணம்
பார்விதந்து போற்றும் வண்ணம்
கண்டெடுத்துவே விபுலானந்தரவர்
தந்த மதங்க சூளாமணி,

நீராமகளிரினின்னிசையில்
நீங்காது புகழ் படைத்த
ஆரம் போன்ற யாழ்நூலை
அளித்தவரெம் விபுலானந்தர்.

செந்தமிழின் இலங்கு இசை
சேதாரமுற்றதனால்
பைந்தமிழின் இசைவெள்ளம்
பாயவைத்த யாழ்நூலே,

யாழ்நூலும் சூளாமணியும்
யாத்த விபுலானந்தரை,
ஈழமதில் சிறக்கவைத்த
இணையில்லா நூல்மணிகள்

## 5. அடிகளார் பணிகளைப் பின்பற்றுவோம்

ஈங்குபலர் இலங்கிநின்றும்
ஈன்றமொழி மறந்துவிட்டார்,
தாங்கி நின்ற தாய் மொழியைத்
தரணியிலே தவிக்க விட்டார்,

அன்னைமொழி தமிழ் வெறுத்தார்,
ஆங்கிலத்தில் மோகம் கொண்டார்,
தன்னை யீன்ற தாய்மொழியாம்
தமிழில் பேசத்தயக்கமுற்றார்.

இந்த நிலை மாறுதற்காய்
ஈன்றமொழி காப்பதற்காய்ச்
செந்தமிழின் தீஞ்சுவையைச்
செகம் வியந்து போற்றுதற்காய்

மட்டுநகர்த் தென்றிசையில்
மாதவத்தால் அலதரித்த
எட்டுத்திசையும் புகழ் ஞானி
எங்கள் விபுலானந்தர்

தனியொருவராய் நின்று
தமிழினையே வளர்த்தெடுத்தார்,
இனியுமவர் தமிழ்ப் பணிகளை
இன்பமுடன் பின்பற்றுவோம்;

# இந்நாட்டிற்கு உலகிற் பெருமை பெற்றுத் தந்தவர்

செல்வி செ. மங்கையர்க்கரசி
(இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி வவுனியா)

அடிகளார் நூற்றாண்டுக் கவிதை
முதனிலைத் தேர்விற் சிறப்புப் பரிசில் பெற்றது.

இன்பமான நாட்களிலே
இறையோன் எமக்கு உவந்திட்ட
இனிய இயற்கை இளமைதனை
இனிதே துறந்து வாழ்ந்திட்ட
என்றும் எங்கள் ஈழத்தான்

நாட்டிற் செய்த நற் பணியே
நன்மை செய்த அற்புதமே
எண்ணி மகிழ முடியாத
எளிமையான அவர் வாழ்வு
எம் இவ்வுலகின் பெருமையானதே

தாரணியில் காணாப் பல நூல்கள்
தானே கற்று ஆராய்ந்து
வையம் போற்றச் செய்தளித்து
வையத்தோர் வளரக் கருவானார்
புகழ் கொண்ட எம் அடிகளவர்.

ஆங்கில நாடுகள் பல சென்று
அரிய சேவை பல செய்து
உரிய தமிழை எடுத்துரைத்து
உண்மை நெறியைப் போதித்து
உலகிற் புகழைப் பெற்றுள்ளார்

## யாழ் நூலும் மதங்க சூளாமணியும்

பார் போற்றி வாழ்த்துகின்ற
பார்க்க வியக்கும் பல கருத்து
பண் இசை கொண்டெங்கள்
யாழ் நூல் தாத் விளங்குகிறதே

சீரிய நற் கலை நூலும்
சிறந்த எங்கள் பண் நூலும்
நேரிய மதங்க சூளாமணி
நேசமக்கள் பெற்றதுவே

அன்பு அறிவு அறநெறிகள்
அனைத்தும் கொண்டே
விளங்கும் எம் அரிய
நூல்கள் இவை அன்றோ

தேசிய நூலாய் விளங்குகின்ற
நாட்டின் கலையை எடுத்துரைக்கும்
நன்னூலாய்ப் பொன்னூலாய்ப்
போற்றிப்பாடும் யாழ் நூலே

என்றும் எதிலும் எங்கும்
நிறை நிற்கும் மதங்க சூளா-மணி
அன்பர் எமக்கு அளித்திட
அடிகள் கொடுத்த காணிக்கையாம்

## அடிகளார் பணியைப் பின்பற்றுவோம்

ஆனந்த அன்பரின் வாழ்நாளோ
அவர்புனிதத் திருநாளே என்றும்
நீண்டு செல்கின்ற நினைவரிய
திருநாட்டில் நாம் எம்மை
நாமே அர்ப்பணிக்க எழுகின்றோம்-அடிகளே

அன்பு பண்பு பாசமே-யாம்
உம் பணியின் நோக்காம்
உலக ஒற்றுமை ஒன்றே - இப்போது
உணர்கின்றோம் உண்மை தானே - அடிகளே

உலகை நேசி என்கின்றீர்
தமிழைப் போதித்து வாழ் என்றீர்
தேனும் புகழ நின் பணியை
நிலை நாட்டென்றீர் - அடிகளே

உம் பணியே எம் பணி
என்றே கொள்கை கொண்டிங்கு
என்றும் மாறா உம் தொண்டை
உறுதியுடன் செய்கிறோம் - அடிகளே

அன்பர் அவர்கள் பொறுத்திடுவீர்
அடிகள் அவரைப் பின்பற்றி - உம்
நூற்றாண்டைக் கொண்டாடித்
தங்கள் பணியைத் தொடர்கின்றோம் - அடிகளே

## விபுலானந்த அடிகளாரைப் போற்றுதும்

மட்டுநகரில் பிறந்தவர் விபுலானந்தர்
மயில் வாகன நாமம் பூண்டவர் விபுலானந்தர்
மாண்புறு தாயின் மடியில் தவழ்ந்தவர் விபுலானந்தர்
மாசில்லாத் தந்தை சொற்படி நடந்தவர் விபுலானந்தர்

தத்துவத் தவமணி விபுலானந்தர்
தமிழ் ஆழம் கண்டவர் விபுலானந்தர்
தரணியில் புகழ் கொண்டவர் விபுலானந்தர்
தனிமையில் வாழ்ந்தவர் விபுலானந்தர்

ஈசன் உவப்புறு இன் மலர் இவை என்ற
ஈடு இணை இல்லாத் தத்துவமான்,
இல்லம் தன்னை முற்றும் துறந்த அற்புதமான்
பாசம் அறுந்துச் சென்ற பண்பாளன்தான்.

உலகப் பற்றை உடன் துறந்து
உண்மை உணர்வை அவர் அறிந்து
உடம்பை முத்தாய்த் துறவுற்று
உரிய பணியை அவர் செய்தார்

ஈழத்தில் காண்கின்ற எழுத்தாளர் எனும்
இறையோன் தந்த வித்தகரே
ஈழத்தில் புகழ் பூத்த தத்துவரே
இத்தமிழ் உலகின் தவப்புதல்வன்.

## முத்தமிழ் வளர்த்த முனிவர்

முத்தமிழ் வித்தகர் விபுலரவர்
முற்றும் துறந்தவர் விபுலரவர்
பண்ணுள் இறைவாளர் விபுலரவர்
பண் நூல்தந்தவர் விபுலரர்

தமிழா கலையா ஆங்கிலமா
முழுதும் முற்றாய்க் கற்றறிந்தவர்
நெகிழ் வடமொழிபல பயின்றவர்
பல வித்தைகள் தானே பயின்றுணர்ந்தவர்

பட்டம் பதவி பலபெற்றுப்
பல பாடம் சொல்லிப் புகழ்உற்று
முதிய அறிவை வெளியிட்டு
மனிதர் மனதில் நிறைந்திட்டார்.

பள்ளிப் பாடம்தனை அறிந்து
கலைதொழிலை வழிபட்டு
இசைநூலைத் தெளிவுற்று
இன்பமுறவே வளர்ந்திட்டார்.

முக்கலை என்றும் இவ்வுலகில்
முழுமையாக வேறுண்ட என
வித்திட்ட விபுலரவர்
எம்முள் முத்தமிழ்வளர் முனிவரவர்.

# அடிகளாரின் பணிகளைப் பின்பற்றுவோம்

( செல்வன் பழனியாண்டி இருபாகரன்,
கைலாண்ட் கல்லூரி, கற்றன் )

அடிகளார் நூற்றாண்டுக், கவிதை முதனிலைத் தேர்விற்
சிறப்புப் பரிசில் பெற்றது

1. அறிவென்னும் கடலில் நீந்தி
அற்புதப் பணிகளாற்றி - நந்
நெறிகளால் கிடைத்த செல்வம்
நிலைத்திடச் செய்தாரன்றோ!

கல்விப் பயிர் வளர்க்கக்
காலமெலாம் தானுழைத்து - பல
கல்விச் சாலைகள் கட்டிக்
கலைகளும் தான் வளர்த்தார்!

வெல்லுஞ் சொல் அமுதத்தால்
விரிவுரைகளாற்றித் - தமிழ்
வல்லோர் புகழ விழா
வானுயரச் செய்தவல்லோன்!

அடிகளாரின் பணிக ளென்றும்
அற்புத விளக் கொளியே - என்றும்
மடியாத மறத் தமிழின்
மாண்பு மிகு முனிவரிவர்!

பாடும் மீன் வாழுகின்ற
பசுமையெழில் நாடென்னில் - உளம்
நாடும் நம் பேரறிஞர்
நாமமது ஓடிவரும்!

## 2. விபுலானந்த அடிகளாரைப் போற்றுதும்

உலகுள்ள வரை யெங்கள்
உள்ளத்தில் உறைகின்ற - தமிழ்ப்
புலவரெனும் புனித ரையாம்
போற்றுவமே! போற்றுவமே!

ஈழ மணித் திருநாடு
எமக்களித்த பேரறிஞர் - தமிழ்
ஆழ மதை அறிந்தெமக்கு
அறிவென்னும் முத்தீந்தார்!

கள்ள மில்லா நெஞ்சமது
காருலகில் செழித்திடவே - பெரும்
வெள்ள மெல்லாம் அறிவான
அற்புதத்தைப் போற்றுவமே!

விந்தைமிகச் செய்ய வென
விரும்பிய நல் மொழிகளிலே - வெண்
சங்கைப் போல் இவ்வுலகில்
சஞ்சரித்தார் தாய் மடியில்

பாரினிலே பிறந்த தெய்வம்
பசுமைமிகு பண்புடையோன் - இக்
காருலகின் கருமை தனைக்
களைந்தவரைப் போற்றுவமே!

## 3. முத்தமிழ் வளர்த்த முனிவர்

முத்தமிழ் பணிக் கேதம்
முழுமூச்சோ டுடலீந்த - பெரும்
வித்தகர் விபுலா னந்தர்
வினைத்திறன் பற்பலவாம்!

உரைநடை இலக்கி யங்கள்
ஒளிர்ந்திடச் செய்தமகான் - பெருந்
திரைகடல் தாண்டியெந்தத்
தேசமும் புகழ வாழ்ந்தார்!

தமிழ்த் துறைத் தலைவரென்னும்
    தனிப்பெரும் பேறு - தாங்கி
அமிழ் தினுமினிய வெங்கள்
    அருந்தமிழ் மொழி வளர்த்தார்!

மானிலம் போற்று கின்ற
    மறத்தமிழ்ப் பேரறிஞர் - இவர்
மும்மொழிப் புலமை பெற்று
    முத்தமிழ் முனிவரானார்!

கலையுலகிற் கேற்ற பெரும்
    கலைத் தமிழைத் தந்த - இவர்
முத்தமிழின் வடிவி னிலே
    முழுமைபெறச் செய்திட்டார்;

## 4. இந்நாட்டிற்கு உலகிற்பெருமை பெற்றுத்தந்தவர்

உலகினில் பெருமை தனை
    உண்மையாய் பெற்றுத் தந்தார் - இவர்
உறைந்துள்ள இடமெல்லாம்
    அற்புத ஒளிவிளக்கே!

நாடென்ன நகரமென்ன
    நானிலமும் போற்றவல்லோன் - நல்
அறிவினால் உலகை வென்ற
    உத்தம புருடரிவர்!

பேரறிஞர் வரிசை யிலே
    பேறு பெற்று வாழ்ந்த - இவர்
பெருமை மிகு நூல்கள் தந்து
    பேரருள் புரிந்தாரன்றோ!

புண்ணிய பூமி தனில்
    பூவுலக மாணிலத்தில் - நல்
அடக்கமெனும் பண்ப தனை
    உலகறியச் செய்தவல்லோன்!

அன்புக் குரிய இவர்
    அற்புதப் பெருமையினை - இவ்
அகிலமெலாம் அறியச் செய்த
    அற்புதக் கடவுளேயாம்.

## 5. யாழ் நூலும் மதங்கசூளாமணியும்

பன்மொழிப் புலமை மிக்க
　　பைந்தமிழ்ச் செல்வர் - சங்கப்
பன்னெடும் நூல்க ளாய்ந்து
　　பசுந்தமிழ்க் கழகுசெய்தார்!

இசைத் தமிழ் ஓங்கு தற்காய்
　　இன்றமிழ் யாழ்நூல் - தந்தார்
திசைதடு மாறா நிற்கத்
　　தீந்தமிழ்க் கனிகள் செய்தார்!

பிறமொழி நூல்க ளாய்ந்து
　　பெற்றதால் கிடைத்ததந்தோ - நம்
மறத்தமிழ் மக்கள் போற்றும்
　　மதங்கசூளா மணியாம்!

வையமதில் போற்றும் நூல்களில்
　　யாழ் நூலொன்றாம் - நல்ல
வைகறைக் காற்றினிலே
　　வளர்ந்த நல்நூலாம்!

நானிலம் போற்றும் நல்ல
　　நன்கொடை யென்றுரைத்தால்
நாமமதில் ஓடிவரும் நல்ல
　　மதங்கசூளா மணியே!

# தமிழ் வளரத் தன்வாழ்வு தந்தவர்

( செல்வன் சந்திரசேனன் சசிதரன்

மத்திய மகாவித்தியாலயம், வந்தாறு மூலை )

அடிகளார் நூற்றாண்டு - கவிதை முதனிலைத் தேர்வு

- 3 ஆம் பரிசில் பெற்றது

தமிழை வளர்க்கத் தன் வாழ்வைத்
தந்தவர் தரணியெங் குந்தமிழாம்
அமிழ்தினை அனைவரும் ஆர்ந்திடவே
அரும்பணிகள் முகிழ்த்துத் தமிழ்க்கடலிற்
குமிழ்போல் மறையாமற் கூரலையாய்க்
கூர்ந்திட் டதனோ டியைந் திலங்கும்
சிமிழிடைச் செந்தூர மாய்ச் சிறந்து
சீர்த் தமிழுக் குச்சிங்கா சனமமைத்தார்;

விஞ்ஞானம் விளக்குகின்ற குருவாக
விரிசுடராய் விளைந்துநின்ற தருவாக
அஞ்ஞானம் விலக்குகின்ற ஆசானாக
அகிலமெலாம் ஞானத்தையருள் மறையாக
பொய்ஞ்ஞானம் தன்னையே போக்கியவர்
பொன்னாட்டின் பெருமைதனைச் சீராக்கியவர்
மெய்ஞ்ஞானம் பெறுவதற்குத் துறவுகொண்டு
மெய்க்கீர்த்தி இந்நாட்டை அடையச்செய்தார்.

முத்தமிழின் வித்தகற்றி மூடிநின்ற
முழுவிருளை விரட்டியே அருங்கனியாய்த்
தித்திக்கத் திருந்துபணி பலதொடுத்துத்
தீமையிலா நெறிமுறையிற் தான்நின்று
எத்திக்கும் ஏர்தமிழ் ஏற்றமொடு
இருந்தொலிக் கத்தன்னை யேதந்து
கத்துகடல் இடையேநன் முத்தெடுத்த
கவினுறு சோதிவிபு லாநந்தர்.

# விபுலாநந்த அடிகளார் பற்றிய குறிப்புகள்

## அ. வாழ்க்கை வரலாற்று நிகழ்வுகள்

| இ. பி. | |
|---|---|
| 1892 | மார்ச்சு 29ஆம் நாள் மட்டக்களப்பு மாவட்டத்தில் காரைதீவில் பிறந்தார். தந்தையார் - சாமித்தம்பி விதானையார். தாயார்-கண்ணம்மையார். இளமைப் பெயர் தம்பிப்பிள்ளை. |
| 1901 | கல்முனை மெதடிஸ்த பாடசாலையிலும், 1904 மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியிலும், 1908 மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரியிலும் ஆங்கிலக்கல்வி கற்றார். தந்தையார், க. குஞ்சித்தம்பி ஆசிரியர், மாமனார் வசுந்த ராசபிள்ளை, புலோலி பொ. வைத்திலிங்கதேசிகர் ஆகியவர்களிடம் தமிழ் கற்றார். |
| 1908 | கேம்பிரிட்சுச் சீனியர் தேர்விற் சித்திபெற்றார். |
| 1909 | புனிதமைக்கேல் கல்லூரியிலும் 1911 கல்முனைக் கத்தோலிக்க மிசன் பாடசாலையிலும் ஆசிரியர் ஆனார். |
| 1911-12 | கொழும்பு அரசினர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியிற் பயிற்சி பெற்றார். |
| 1913-14 | புனித மைக்கேல் கல்லூரி ஆசிரியர் ஆனார். |
| 1915 | பௌதிகவியல் |
| 1916 | மதுரைப் பண்டிதத் தேர்விற் சித்திபெற்றார் |
| 1917 | கொழும்பு அரசினர் கல்லூரியில் இரசாயனஇயல் உதவி ஆசிரியர் ஆனார். |
| 1918-20 | யாழ் சம்பத்திரிசியார் கல்லூரியில் இரசாயனவியற் தலைமை ஆசிரியர் ஆனார். விஞ்ஞானக் கலைமாணித் தேர்விற் சித்திபெற்றார். |
| 1920-22 | மானிப்பாய் இந்துக்கல்லூரித் தலைமை ஆசிரியர் ஆனார். யாழ். ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கப் பணிகளிற் பங்குபற்றினார். |

1922 சென்னை இராமகிருட்ண மிசனில் சேர்ந்து பிரபோத சைதன்யர் என்னும் பெயர் பெற்று இராமகிருட்ண விசயம் வேதாந்த கேசரி ஆகிய சஞ்சிகைகளின் ஆசிரியர் ஆனார். தமிழகச் சஞ்சிகைகளிற் கட்டுரைகள் எழுதினார்.

1924 ஞான உபதேசம் பெற்றுச் சுவாமி விபுலாநந்தர் ஆனார்.

1925 மட்டக்களப்புப் பகுதிப் பாடசாலைகளின் பரிபாலனப் பொறுப்பை ஏற்றார். சிவானந்த வித்தியாலயத்திற்கும் திருகோணமலை இந்துக்கல்லூரிக்கும் அத்திவாரம் இட்டார்.

1926 யாழ். வண்ணை வைத்தீசுவர வித்தியாலயப் பொறுப்பை ஏற்றார். அரச கல்வி ஆலோசனைச் சபை உறுப்பினர் ஆவார். மதங்கசூளாமணி வெளிவந்தது.

1927 இலங்கை வந்த மகாத்மா காந்தியடிகளை வரவேற்றார்.

1931 அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் ஆனார்.

1934 சென்னை, சைவ சித்தாந்த சமாசத்திற்குத் தலைமை வகித்தார். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் ஆய்வுத்துறை உறுப்பினர் ஆனார்.

1936 சென்னை மாகாணத் தமிழர் சங்கச் சொல்லாக்க மகா மகாநாட்டுக்குத் தலைமை வகித்தார்.

1937 திருக்கைலை யாத்திரை

1938 இமாலயத்தில் வெளிவந்த பிரபுத்த பாரத சஞ்சிகை ஆசிரியர் ஆனார்.

1943 இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் ஆனார்.

1947 தமிழ்நாடு திருக்கொள்ளம்புதூரில் யாழ்நூல் அரங்கேற்றம்

1947 யூலை இறையடி அடைந்தார்.

## ஆ. அடிகளார் எழுதிய நூல்கள்

(1) கணேச தோத்திரப் பஞ்சகம்
கதிரை மாணிக்க விநாயகர் இரட்டை மணிமாலை
சுப்பிரமணியர் இரட்டை மணிமாமை
குமரவேணவ மணிமாலை
மகாலட்சுமி தோத்திரம்
உமாமகேசுரம்
நடராச வடிவம்

(2) விவேகானந்த ஞானதீபம்
கருமயோகம்
ஞானயோகம்
சுவாமி விவேகானந்தர் சம்பாசணைகள்
நம்மவர் நாட்டு ஞானவாழ்க்கை

(3) மதங்க சூளாமணி
யாழ்நூல்

(4) அடிகளார் தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்தபல கட்டுரைகள் எழுதினார். அவை அக்காலத்துச் செந்தமிழ், தமிழ்ப் பூம்பொழில், வேதாந்தம் ஆகிய சஞ்சிகைகளில் வெளி வந்தன.

## இ. அடிகளாரைப் பற்றிய நூல்கள்

விபுலாநந்த அடிகளார் வரலாறு (அருள் செல்வநாயகம்)
விபுலாநந்தக் கவிமலர் ( ஷ )
விபுலாநந்தர் அமுதம் ( ஷ )
விபுலாநந்த செல்வம் ( ஷ )
விபுலாநந்த ஆராய்வு ( ஷ )
விபுலாநந்தத் தேன் ( ஷ )
அடிகளார் மீட்சிப் பத்து (புலவர் மணி ஏ. பெரியதம்பிப் பிள்ளை)
விபுலாநந்தர் பிள்ளைத் தமிழ் (க.தா. செல்லராசகோபால்)
விபுலாநந்தர் பாவியம் (கவிஞர் செ. குணரத்தினம்)
இலக்கிய ஆய்வுக் கட்டுரைகள் (கல்வி வெளியீட்டுத் திணைக்களம் கொழும்பு)

## ஈ, விபுலாநந்த அடிகளார் அறிவுரை

பள்ளியிற் பயிலும் தமிழ்ச்சிறார் முதற் பல்கலை க றுத்தேறிய முது தமிழ்ப் புலவர் ஈறாக அனைவரும் தமிழ்க் குலத்தாரின் உண்மை வரலாற்றினை உளங்கொண்டுணர்தற்கு வேண்டிய சிறியவும் பெரியவும் ஆகிய வரலாற்று நூல்கள் பல தமிழ்மொழியிலே எழுதப்படல் வேண்டும்.

சென்ற காலத்துச் சீரினை எதிர்காலத்தாருக்கு இயைவிக்கும் நிகழ்காலத்து வினை ஆகிய தமிழ்த்தொண்டானது மும்மையினையும் தழுவி நின்றது.

தமிழ் நூல்களின் மதிப்பினை உலகிற்கு அறிவுறுத்த முயல வேண்டும்.

முறையாகக் கற்றலும் செய்யாது கற்றுவல்லாரையடைந்து வழிபாடியற்றிப் பெறுதற்குரிய கேள்விச் செல்வமும் எய்தப்பெறாது தமிழ்த் தொண்டு செய்ய முற்படுதல் பயனில் செயலாகும். சாதி மத வேறுபாடின்றியும் அரசியற் கட்சிப் பிரிவினையின்றியும் செய்தற்குரிய தொண்டு தமிழ்த்தொண்டு.

தமிழ்நாடு தனக்குரிய ஆக்கத்தினைப் பெருகிற நன்னாளிலே அறிவுக் கடலிலிருந்து எழப்போகின்ற தமிழ் முகிலானது புன்மையாகிற உவர்த்தன்மையினை முழுதும் நீக்கித் தூய தமிழ் நீரினை நாடெங்கும் பொழியக் காண்போம்.

உறக்கம் நீக்கி விழித்தெழுந்த தமிழராகிய நாம் ஓய்வின்றி உழைத்து உலகனைத்திலும் நம் மொழிச்செல்வத்தைப் பரப்புதற்கு முயல்வோமாக.

நம் தமிழ்க் குலத்தார் அனைவரும் பசியும் பிணியும் பகையும் நீங்கிப் பொருட் செல்வமும் செவிச் செல்வமும் அருட் செல்வமும் ஏற்ற பெற்றி எய்தப்பெற்று மண்ணக மாந்தர்க்கு அணியெனச் சிறந்து வாழ்வோமாக.

(மதுரை இயற்றமிழ் நாட்டுத் தலைமையுரை)

# அடிகளார் நூற்றாண்டுப் பரிசில் பெற்ற இருவர் கருத்துகள்

(1) 'இலங்கைத் தமிழர்களிற் பலர் ஒன்று அல்லது இரண்டு துறைகளிற் சேவையாற்றிப் புகழ் படைத்திருக்கிறார்கள். ஆனால் உயர்திரு விபுலானந்தர் அவர்களோ பல துறைகளிற் கற்றுத்தேறி அத்துறைகளில் அரும்பெரும் சாதனைகளையும் போதனைகளையும் செய்து அழியாப் புகழ் பெற்றிருக்கிறார்கள். இலங்கையர்களாகிய நாங்கள் செய்த தவமே - தமிழ்நாட்டிலும் அரும்பெரும் சேவைகளைச் செய்து தலைமை தாங்கி அவரைப் புகழ வைத்தது. அவ்வாறாகிய பெரியார் பற்றிக் கொழும்புத் தமிழ்ச்சங்கம் அடிகளார் 'நான்மணிமாலை'த் தேர்வை நடத்தியது. முற்றுமுழுதும் பொருத்தமானதாகும்'

ஆசிரியர் வை. க. சிற்றம்பலம், அளவெட்டி. ( தமிழ்ச்சங்கம் நடத்திய 'அடிகளார் நான்மணிமாலை' நூலாக்கத் தேர்வில் பரிசில் பெற்றவர் )

(2) விபுலானந்த அடிகளார் பிறந்த கிராமமான காரைதீவுக்கு அடுத்துள்ள நிந்தவூர்க் கிராமத்திற் பிறந்தவன் நான், என்னுடைய தாயின் தந்தையார் சுலைமாலெப்பைப் போடி நிந்தவூர்ப் பெரிய பள்ளி வாசலில் பிரதம தரும கர்த்தாவாக இருந்தவர். அவருக்கும் விபுலாநந்த அடிகளாருக்கும் மிக நெருக்கவான தொடர்புகள் இருந்திருக்கின்றன. பேராசிரியர் ம. மு. உவைஸ், ஜனாப் எஸ். எம். கமால்தீன், புலவர் ஆர். மு. ஷரிபுதீன் போன்றோர் இவரின் வழிகாட்டலில் நடந்து தமிழ் கூறும் நல்லுலகிற்கு அளப்பரும் பணி செய்து வருபவர்கள், ஏ. எம். ஏ. அசீசின் எண்ணத்திலும் செயற்பாட்டிலும் விபுலானந்தருக்கும் கூடிய பங்கு உண்டு. இன மத சாதி பிரதேச வேறுபாடுகள் அற்ற ஒரு சமூகத்தினைக் காண விழைந்தார் அடிகளார். அப் பெருமகனின் சிந்தனைச் செயற்பாடுகளில் எல்லாம் எனக்கும் மிக்க ஈடுபாடு உண்டு.

என்னுடைய நூலில் கூடப் பல இடங்களில் அடிகளைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். அந்த வகையில் இப்பரிசு எனக்குக் கிடைப்பதையிட்டு நான் நிச்சயமாக மகிழ்ச்சியடைகிறேன்.

1942 ஆம் ஆண்டு தொடக்கம் தமிழ் வளர்க்கும் கொழும்புத் தமிழ்ச் சங்கம் சோதனைகள் மத்தியிலும் சாதனைகள் புரிந்து வருகின்றது. இச்சங்கம் ஆற்றிவரும் பணியை எவரும் மறத்தல் இயலாது.'

ஆ. மு. நகியா, உதவிப்பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் இராசாங்க அமைச்சு; கொழும்பு அடிகளார் நூற்றாண்டில் தமிழ்ச்சங்கத்தின் உரைநடை இலக்கிய நூல் ஆக்கப் பரிசில் பெற்றவர்

NEW CENTRAL PRINTERS 147, WOLFENDHAL ST, COLOMBO 13 TP. 433839